

கருத்தடை மரம்
ஏராண்டார்கை
COMICSPDFTIMES
HSC



# கருத்தடை மரம்

## 1

அவன் லேசாக முணுமுணுத்தான். அதற்குமேல் அவனால் எதுவும் செய்ய முடியவில்லை. காரணம், அவன் வாயில் ஒரு நீலநிற டஸ்டர் துணி ஆழமாக, அழுத்தமாக அடைக்கப்பட்டிருந்தது... லேசாகச் சிவந்திருந்த அவன் கண்களில் பயம் அதிகரிக்கத் தொடங்கியது. தன் உடலை அசைக்க முயற்சி செய்தான். அதுவும் முடியவில்லை. அவன் படுத்திருந்த நீளமான மேஜைக் கால்களோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்தான். அவன் மூக்கில் தாங்க முடியாத வலி. மேஜைக் கருகில் நின்று கொண்டிருந்த வாட்டசாட்டமான ஆள், சில நொடிகளுக்கு முன்புதான் மூக்கு நசுங்கும் அளவிற்கு ஓங்கிக் குத்தினான். தான் அணிந்திருந்த ஒரே ஆடையான கோவணத்தைப் பிடித்து இழுத்தபோது, முகத்தைச் சுளித்தது அந்த பலசாலிக்குப் பிடிக்கவில்லை... பலமான குத்திற்கு அதுதான் காரணம். வாழ்க்கையில் ஆடை, ஆபரணம், அழகு சாதனம் என்றெல்லாம் சொல்லக்கூடிய ஒரே பொருள்தான் அந்தக் கோவணம். அதுவும் பறிபோய்விட்டது. கூச்சம், அவமானம், நிராதரவு போன்ற உணர்ச்சிகள் ஆடைகளாக மாறி அவனைச் சுற்றிக் கொண்டன.

அது போதாதென்று ஜன்னலே இல்லாத அந்த அறையில், ஓர் அழகான

பெண் நின்று கொண்டிருந்தாள். அவள் அருகிலிருந்த கண்ணாடி அணிந்திருந்த ஓர் ஆளோடு தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருந்தாள். அவ்வப்போது அவள் பார்வை மேஜையின் பக்கம் நின்று ஒதுங்கி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. கண்களை மூடிக்கொள்வதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாத நிலை அவனுக்கு...

''அம்பா, அந்த ஆளோட வயிறு காலியா இருக்கணும். தட் குட் பி வெரி இம்பார்ட்டெண்ட்... மேக் ஷ்யூர் ஆ?''

''எஸ் டாக்டர், ஹிஸ் ஸ்டமக் ஈஸ் எம்ப்டி. நேத்துச் சாயங்காலம் நாலு மணிக்கு அவனைக் கொண்டாந்தாங்க. அதுக்கப்பறம் க்ளுகோஸ் வாட்டர்தான் குடுத்துக்கிட்டிருக்கோம்.''

''குட்...அம்பா. அந்த ஆளோட டெம்ப்ரேச்சரை செக் பண்ணு..தெர்மா மீட்டரை வாயிலெ வெச்சிடப்போறே... ஜாக்கிரதை...காரியம் கெட்டுப்போயிடும், இஃப் யூ டோண்ட் மைண்ட் டேக் தி ரெக்டல் டெம்பரேச்சர்...''

அவள் முகத்தைச் சுளித்தாள்.

''டாக்டர், இந்த மாதிரி வேலையெல்லாம் செய்யறதுக்கு ஒரு நர்ஸ் இருந்தா நல்லாயிருக்கும், இல்லியா?''

''அம்பா, இதென்ன ஹாஸ்பிடலா, நர்ஸ்—கிர்ஸ் வெக்கிறதுக்கு? நர்ஸ் வெச்சா நமக்கு ப்ராப்ளம் ஜாஸ்தி. இந்த எடத்துலே இன்னொரு பொம்பளை வந்தாள்னு...யூ நோ...''

## ராண்டார்கை

''டாக்டர் — நர்ஸ் ஆம்பளையாகூட இருக்கலாம், இல்லியா?''

இருவரும் சேர்ந்துசிரித்தார்கள். டாக்டர் சூரியகுமார் தான் அணிந்திருந்த பெரிய மூக்குக் கண்ணாடியை சரி செய்து கொண்டே மேஜையைப் பார்வையிட்டான்.

''ஆண்டி, கம் ஹியர்!''

சூரியகுமார் மேஜை அருகில் நின்று கொண்டிருந்தவனைப் பார்த்து உரத்த குரலில் கூப்பிட்டான். காக்கி அரை நிஜார், நீலநிற 'டி' ஷர்ட் அணிந்திருந்த ஆண்டி வேகமாக ஓடி வந்து பணிவோடு நின்றான்.

''எஸ், ஸார்...''

''ஆண்டி, அந்த ஆளு புதுசா கல்யாணமானவன்னு நிச்சயமா தெரியுமா?''

''எஸ், ஸார். இந்த கடுகருங்க காட்டுலெ பச்சைப் புறாவுக்காக வேட்டை ஆடுவாங்க. அப்படி செஞ்சாங்கன்னு ஸார், அவுங்க கூட்டத்துலே ஒரு கல்யாணம் நடக்கப் போவுதுன்னு அர்த்தம்...''

சூரியகுமார் ஒரு முறை மேஜையின் மேலிருந்த ஆளை முறைத்துப் பார்த்து விட்டுத் தன் பக்கத்தில் நின்று கொண்டிருந்த அம்பிகா சந்திரன் முதுகில் லேசாகத் தட்டினான்.

''அம்பா..ஆண்டி சொல்றதைக் கேட்டுக்கோ...நோட் பண்ணி வெச்சுக்கோ.. ஆண்டி, கமான் சீக்கிரமாச்சொல்லு...''

''ஸார், இந்த கடுகர்கள் இருக்காங்களே, அவுங்களுக்கு தின்சு தின்சா வழக்கங்க இருக்கு... ஒரு கடுகர் ஆம்பளை ஒரு கடுகர் பொம்பளையைக் கல்யாணம் கட்டிக்கிறான்னு பச்சைப் புறா விருந்துன்னு ஒண்ணு நடத்துவானுங்க... பொண்ணு வீட்டுக்காரங்க நம்ம காட்டுலே இருக்கிற பச்சைப் புறாவுக்காக வேட்டை ஆடுவாங்க... இந்தப் பச்சைப் புறா வேட்டையாடக் கூடாதுன்னு ஃபாரெஸ்ட் டிபார்ட்மெண்ட் ரூலெல்லாம் இருக்குங்க...ஆனா இந்தக் கடுகருங்க அதைப்பத்தியெல்லாம் கவலைப் படறதில்லிங்க...எத்தினி பச்சைப் புறா அம்புடுமோ புடிப்பானுங்க...எவ்வளவு ஜாஸ்தியா புடிக்கிறானுங்களோ அவ்வளவு மரியாதை — பேரு பொண்ணு வீட்டுக்காரங்களுக்கு...அது ஒரு சடங்கு மாதிரிங்க. இந்தப் பொருவோட ரத்தத்தெ பையன் குடிக்கணும் எல்லார் எதிர்க்கேயும்... பொண்ணு பொறுவை நெருப்புலே ரோஸ்ட் மாதிரி பண்ணிக் குடுப்பாங்க. அதெ பையன் சாப்பிடுவான் மொதல்லெ...அப்பறம் மத்தவங்களுக்குக் கொடுப்பாங்க. அதெ சாப்பிடறதுக்கு ஒரே போட்டியிருக்குமுங்க... அதெ சாப்பிட்டா ஒடனே கல்யாணமாகும்... கல்யாண ஆனவங்களுக்குக் குழந்தை பொறக்கும்னு நம்பிக்கை...''

''ஐ ஸீ! அம்பா...ரொம்ப இண்ட்ரெஸ்டிங்கா இருக்கு இல்லே...! அது சரி ஆண்டி, நா மொதல்ல கேட்ட கேள்விக்கு இன்னும் பதில் சொல்லலேயே... ஐ மீன், இந்த ஆளு புதுசா கல்யாணமானவன்னு தெரியுமான்னு...''

''ஷ்யூரா தெரியுமுங்க. இந்த கல்யாணம் நடந்ததெப் பாத்த ஒரு ஆளுதான் இவனைப்பத்தி இன்ஃபர்மேஷன் கொடுத்தான். அவன் பொய் சொல்ல மாட்டான். அப்படிச் சொன்னு என்ன நடக்கும்னு அவனுக்குத் தெரியுமிங்க...''

''வெரிகுட், ஆண்டி. அதுசரி இவனெ இங்கே கொண்டாந்திருக்கிறது யாருக்கும் தெரியாதில்லே...? தெரியக் கூடாதுன்னு ஒனக்குத் தெரியுமில்லே?''

''எஸ், ஸார்..ஐயா எல்லாம் சொல்லியிருக்காருங்க.''

அம்பிகா ஒரு பெட்டியிலிருந்து தெர்மாமீட்டரை எடுத்தாள். அதைக் குலுக்கிக் கொண்டே மேஜையை நோக்கி நடந்தாள்.

''அம்பா, அவன் ப்ளெட் ப்ரஷரையும் எடு. எல்லா டிடெய்ல்ஸையும் கரெக்டா நோட்பண்ணி வெச்சுக்க... ரொம்ப இம்பார்ட்டெண்ட்.''

சூரியகுமார் தன் கண்ணாடியை சட்டைநுனியால் துடைத்துக்கொண்டே சொன்னான்.

''எஸ், டாக்டர். ஐ வில் டு தெட்... ஆமா, ஆண்டி, நீ எப்படி இந்த ஆளே இங்கே கொண்டு வந்தே?''

''அம்பா, அதெல்லாம் நா அப்பறம் சொல்றேன். எனக்குத் தெரியும். வேலெய சீக்கிரமா முடி... இந்த ஆளெ சீக்கிரமா டிஸ்போஸ் பண்ணனும்... கதெ பேசறதுக்கு நேரமில்லே...கெட் ஆன் வித் தெ ஜாப்... வில் யூ?''

''ஸாரி, டாக்டர்...''

அம்பிகா மேஜைக்கருகே நின்றாள். அவள் கையில் தெர்மா மீட்டர் தயாராக இருந்தது. மேஜையின்மேல் படுத்திருந்தவனை தடையின்றிப் பார்க்கும் போது அவள் மனதில் பல வகையான எண்ணங்கள்...படிந்திருந்தவன் கோயில் சிலைபோல் இருந்தான். அவன் உடல் அமைப்பு, வலிமை அவளை என்னவோ செய்தது. அவளால் அவனை சூரிய குமாரோடு ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்கமுடியவில்லை. இருவருக்கிடையே எவ்வளவு வித்தியாசம் அமைப்பில்... வலிமையில்...ஆண்மையில்...!

''டாக்டர், இந்த ஆளே கவர் பண்ணக்கூடாது...? எனக்கு... எனக்கு...''

''அம்பா, ஐ ஆம் ஸர்ப்ரைஸ்டு! ஒரு ஆணோடெ பாடிய பாக்கறதுக்கே நீ தயங்கினேன்னு நம்ம வேலெ எப்படிச் சரியா நடக்கும்...?அம்பா, கெட் ஆன் வித் தெ ஜாப். உனக்கு தெரியும் நாம இறங்கியிருக்கிற வேலே எவ்வளவு முக்கியம்னு..எவ்வளவு துணிச்சலானதுன்னு.. மரக்கட்டயெ கட்டிப் போட்ட மாதிரி கெடக்கறான் அவன். அதுக்கே நீ... அம்பா, நா ஒண்டியில் பண்ற இந்த விஷயம் ரொம்ப, ரொம்பப் பெரிசு... வி. ஐ. பி. அதாவது வெரி இம்ப்பார்ட்டெண்ட் ப்ராஜெக்ட்... அத நா ஸக்ஸஸ்ஃபுல்லா முடிச்சேன்னு இந்த உலகமே...அம்பா, நா வெளியே போயிட்டு ஃபைவ் மினிட்ஸ்லே வர்றேன், அதுக்குள்ளே அவன் டெம்ப்ரேச்சர்...பி. பி., எல்லாமெ ஃபினிஷ் பண்ணிடு. ஆண்டி,அம்பாவுக்கு ஹெல்ப் பண்ணு. சும்மா நிக்காதே. கெட் ஆன் வித் த ஜாப்.''

சூரியகுமார் தன் கைவிரல்களால் சிட்டிகை போட்டுக்கொண்டே அறையை விட்டு வெளியே சென்றான். கதவு தானாகவே சாத்திக் கொண்டது.

(இன்னும் வரும்)



## 2 ராண்டார்கை



"ஆண்டி, இந்த ஆளோடெ லெஃப்ட் ஹாண்ட்டெ கொஞ்சம் ரிலீஸ் பண்ணு. நா என் வேலையெ ஆரம்பிக்கிறேன்... ஆளெ நகராமப் பாத்துக்கோ. தெர்மாமீட்டரை எதையாவது தட்டிவிட்டுக் கலாட்டா பண்ணப்போறான்... ஜாக்கிரதை!" என்றாள் அம்பிகா.

"எஸ்,மேடம்...!" என்ற ஆண்டி, மேஜைக்கு அருகே இன்னும் சற்று நகர்ந்துவிட்டு, படுத்திருந்தவன் மூக்கின்மேல் ஓங்கி மற்றுமொரு குத்து விட்டான்!

அம்பிகா தன் வேலையில் மூழ்கி விட்டாள். ரத்த அழுத்தத்தை அளவு எடுப்பதற்காக அந்த ஆளின் கையில் துணியைச் சுற்றியபோது, அவன் உடல் பயத்தால் நடுங்கத் தொடங்கியது. அவனை என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரியாத நிலை... எதற்காகக் கொண்டு வந்தார்கள் என்று அறிந்து கொள்ள முடியாத நிலை... முன்பின் தெரியாத அந்த வாட்டசாட்டமான ஆள், அடிக்கடி எதற்காக மூக்கோடு விளையாடுகிறான் என்று வாசனை பிடிக்க முடியாத நிலை. தப்பித்துக்கொள்ளவும் வழியில்லை. உடல் நடுக்கம் அதிகரித்தது.

"ஆண்டி,கையைக்கட்டிப்போடு!"

"எஸ், மேடம்!"

"ஆண்டி, நீ அந்தப் பச்சைப் புருவைப் பத்திச் சொன்னியே..."

"எஸ், மேடம்...!"

"பச்சைப் புருவத்தான் சாப்பிடணும்னு என்ன?காட்லே எத்தனை மிருகம் – அது இதுன்னு இருக்கு... அதெயெல்லாம் விட்டுட்டு..."

"அது வந்துங்க...அது வந்துங்க... அது..."

"என்ன ஆண்டி, தைரியமாச் சொல்லு. விஷயத்தெப் புரிஞ்சிக்கணும்னுதானே கேக்கறேன். கமான், டெல் மீ..."

"நீங்க ஒரு லேடி. ஒங்ககிட்டே..."

அம்பிகா லேசாகச் சிரித்தாள்.

"ஆண்டி,கொஞ்சநேரம் முன்னுடி டாக்டர் சூரியகுமார் சொன்னது ஒன்

காதுலே விழலயா? லேடியாவது கேடியாவது... சொல்லுப்பா...''

''அது வந்துங்க... இந்த பச்சைப் புரு இருக்குதுங்களே, அதெ துன்னு ஆம்பளைங்களுக்கு வலுவு ஜாஸ்தியாகும்னு அவுங்களுக்கு ஒரு நம்பிக்கெ....''

''ஓ...ஐ..ஸீ.. அப்படியா விஷயம்?''

கதவு திடீரென்று திறந்து கொள்ளவே ஆண்டி பேச்சை நிறுத்தி விட்டான். டாக்டர் சூரியகுமார் உள்ளே நுழைந்தான். அவன் முகம் மாறி இருந்தது. கண்ணாடியைக் கையில் வைத்துக் கொண்டு மேஜையை நோக்கி நடந்தான்.

''அம்பா, எல்லாம் ரெடியா...?''

''எஸ், டாக்டர்! ஆல் ஸெட் ஃபார் ஏக்ஷன்...''

''வெரிகுட் அம்பா! ஆண்டி, இங்கே என்ன நடக்குதுன்னு ஒன் தலேலே நிக்கக் கூடாது. எதெப் பாத்தாலும், கேட்டாலும் நீ இந்த அறையையே மறந்துடுறே... ஓகே?''

ஆண்டி தலையை ஆட்டினான்.

ஃ ஃ ஃ

''சூரி,... நம்ம லேப்ல இருக்கானே அந்த ஆளு... நீங்க ஒங்க டிஸ்கவரிய அவன்மேலே யூஸ் பண்ண ஆரம்பிக்கிறது முன்னாடியே, தெட் ஃபெலோ யூரினேட்டட் ஆன் தி டேபிள், தெரியுமா...? அவ்வளவு பயம் அவனுக்கு, உயிரே பூடுமோன்னு...இததான் 'பிஸ் ஸ்கேர்டு' அப்படீன்னு சொல்லுவாங்க, இல்லே!'' —அம்பிகா சூரியகுமாரின் தொடையை கிள்ளிக்கொண்டே சிரித்தாள். இருவரும் ஆடையின்றி இன்னும் அடங்காத ஆசையே ஆடையாக மாறி, அவர்கள் உடல்களைப் போர்த்திட கட்டிலில் படுத்திருந்தார்கள். அந்தப் படுக்கைஅறை, சூரியகுமாருக்காகப் பிரத்தியேகமாகக் கட்டப்பட்ட சிறிய அழகான பங்களாவில் இருந்தது.

சூரியகுமார் அம்பிகாவை இன்னும் இறுக அணைத்துச் சிரித்தான். அவன் உடல்மீது அம்பிகாவின் விரல்கள் நடன நடைபோடும் ஆற்றலையும், அறிவையும்—அதனால் ஏற்படும் சுவையையும் கண்களை மூடிக் கொண்டே ரசித்தான்...

''சூரி, நம்ம எக்ஸ்பரிமெண்ட் சரியா வரும்னு நெனக்கிறீங்களா...? டே, நைட் அப்படீன்னு ஒண்ணுமே பார்க்காம சில நேரங்கள்ல, இந்தப் பெட்ட கூட மறந்து நீங்க ஒர்க் பண்ணியிருக்கீங்க, இந்த நடுகாட்டுல... அப்படிப் பட்ட ஒரு முயற்சி ஒங்களுக்கு வெற்றிய நிச்சியமா தந்தே ஆகணும்...''

—அம்பிகா அவன் உதடுகளைத் தடவிக் கொண்டே பேசினாள்.

சூரியகுமார் தன் கண்களை இன்னும் இறுக்கமாக மூடிக் கொண்டான். அவன் மனதிலிருந்து அம்பிகா, அவள் அங்க அசைவுகள், ஆசையின் ஆதிக்கம் அத்தனையும் மறைந்தன...

''சூரி... சூரி! என்ன தூங்கிட்டீங்களா?'' — அம்பிகா அவனைத் தட்டி எழுப்பினாள். சூரியகுமார் கண்களைத் திறந்தான்.

அம்பிகா தன் முகத்தை அவன் முகத்தில் புதைத்துக் கொண்டு தேய்க்க ஆரம்பித்தாள்...

''சூரி, இந்நேரம் அந்த ஆள் என்ன ஆனானோ...? உயிரோட இருக்கானோ, இல்லே க்ளோஸோ...? நீங்க போய் பாக்க வேணுமா...?''

அவன் வலதுகை தனக்குப் பிடித்தமான, பழக்கமான பயணத்தைத் தொடங்கியது.

''அம்பா, இப்ப நா பிஸியா இருக்கேன்னு ஒனக்குத் தெரியலையா...? அப்பறமா போய் பாப்பம். அந்த ஆளு அந்த டேபிள் மேலேயேதான் இருப்பான்...''

''சூரி, அவன் ஒருவேளை க்ளோஸ் ஆகிருந்தா...?''

''ஐம் நாட் ஒர்ரீடு...அம்பா, ஆராய்ச்சின்னு வரும்போது ஆளோட உயிரப் பத்தியெல்லாம் கவலைப்படக் கூடாது... இங்கிலீஷ்ல ரொம்பப் பழைய மொழி ஒண்ணு இருக்கு...'முட்டையை ஒடைக்காம ஆம்லெட் பண்ண முடியாது'ன்னு... அந்தமாதிரிதான் ஆராய்ச்சியும். உயிரு, உள்ளம் இதெல்லாம் முட்டை மாதிரி தான். யூ ஃபாலோ மீ...?''

அம்பிகா இன்னும் அருகில் நகர்ந்தாள். அவள் விரல்களின் ஆட்டம் அதிகரித்தது.

''சூரி, நா இவ்வளவு நாளா கேட்டுக்கிட்டிருக்கேன். ஒங்களோடு சேர்ந்து வேலை எல்லாம் பண்றேன்... ஆனா நீங்க இந்த 'நிமோஸா' மரப்பட்டை என்ன செய்யுது? எப்படிச் செய்யுதுன்னு ஒண்ணுமே சொல்லலியே....?''

''அம்பா...அதுதான் ஸஸ்பென்ஸ்...!'' என்றான் சூரியகுமார்.

அப்போது, அந்த அபூர்வ 'நிமோஸா' மரங்களோடு சம்பந்தப்பட்ட தன் வாழ்க்கையின் விசித்திரப் பின்னணியை அவன் நினைத்தபோது...

**(இன்னும் வரும்)**

# கருத்தடை மரம்



ராண்டார்கை

சூரியகுமார் சென்னையிலுள்ள ஸ்டான்லி மெடிக்கல் காலேஜில் படித்தவன். அந்தக் கல்லூரியில் படிக்கும் போதே, நோய்களைக் குணப்படுத்தும் ஒரு டாக்டராக இருக்க வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு இருந்ததேஇல்லை... நோயாளியின் நீட்டிய நாக்கைப் பார்ப்பது.அவர்களின் மலஜல வண்ணத்தைப் பரிசோதிப்பது — இவைகளெல்லாம் அவனுக்குப் பிடிக்காதவை. அவன் ஆர்வமெல்லாம் மருத்துவ ஆராய்ச்சியில் தான் ஈடுபட்டிருந்தது. ஆரம்பத்தில் அவனுக்கு ரசாயன சாஸ்திரத்தில் ஈடுபாடு அதிகம். 'கெமிஸ்ட்ரி ஆனர்ஸ்' படித்துவிட்டு ஒரு 'டாக்டர் ஆஃப் சயன்ஸ்' என்ற கௌரவத்தைப் பெற வேண்டுமென்றெல்லாம் துடித்தான். ஆனால், அவனுடைய மாமா பாஸ்கரன் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை... வக்கீலான தந்தை இறந்துபோன பிறகு, திருச்சியில் பாஸ்கரன் வீட்டில்தான் வளர்ந்து வந்தான். பாஸ்கரன் திருச்சியில் பிரபல டாக்டர். ஒரு பெரிய நர்ஸிங்ஹோமின் சொந்தக்காரரர். சூரியகுமாரை டாக்டராக்கி, தன் ஒரே பெண்ணான பங்கஜத்திற்குக் கணவனாக்கித் தன் நர்ஸிங்ஹோமின் தலைவனாக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு. மாமாவின் வேண்டுகோளின்படி தன்



கனவுகளை மறந்து சூரியகுமார் மருத்துவப் படிப்பிற்காகச் சென்னைக்குச் சென்றான். பங்கஜத்தை மனைவியாக ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டான். பங்கஜம் பென்சிலைவிட மெல்லியதாக இருந்தாள். கண்களுக்குச் சோடாபுட்டி கண்ணாடி வேறு. ஏழு வயதிலிருந்தே இருவரும் ஒன்றாக வளர்ந்தவர்கள். இருவருக்கும் அவ்வளவு வயது வித்தியாசமும் கிடையாது. அவள் கண்ணாடியைக் கழட்டி, ஒளித்து வைத்துவிடுவான். அவள் பெட்டியிலிருந்த வண்ண வண்ண பென்சில்களைத் தோட்டத்தில் எறிந்து விடுவான். அப்படியெல்லாம் அவளை அழ வைப்பதில் அவனுக்கு ஒரு தனி மகிழ்ச்சி. அப்படிப்பட்ட பெண்ணை மனைவியாக ஏற்றுக்கொள்ள அவன் மனம் இடம் தரவில்லை...

அவன் முடிவை அறிந்த மாமா பாஸ்கரன், அவனை வீட்டை விட்டே துரத்தி விட்டார். சென்னைக்குத் திரும்பிய அவனுக்குத் தன் வகுப்பில் படிக்கும் ரூபாமள்பே என்ற பெண்ணின் நட்புக் கிடைத்தது. ரூபா மங்களூரில் ஒரு பெரிய பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். நல்ல அழகி! நாகரீகத்தின் உச்சியில் ஏறி நின்றவள்! அவளிடமிருந்து வாழ்க்கையில் கிடைக்கும் அத்தனைவகை ஆனந்தத்தையும் பெற்றான். அவளுடன் எதிர்கால வாழ்க்கையைப் பற்றிக் கோட்டைகள் கட்டினான். 'அவளுடைய பணம், செல்வாக்கு போன்றவைகளின் உதவியோடு தன் ஆராய்ச்சிப்பணிச் சிறப்பாக நடக்கும் என்று செவ்வண்ணக் கனவுகளைக் கண்டான். டாக்டர் பட்டம் வாங்கிய பிறகு விடுமுறைக்காக மங்களூர் போனவள் திரும்பி வரவேயில்லை... சில மாதங்கள் கழித்து அவளிடமிருந்து அவளுடைய திருமண அழைப்பிதழ் வந்துசேர்ந்தது... அவள் கணவன் சிக்மகளூரில் உள்ள வசதியான காஃபித்தோட்டச் சொந்தக்காரன். உலகம் ஊஞ்சல் ஆடி உருண்டு, சூரியகுமாரின் தலைமேல் ஒடிந்து விழுந்தது...

பல மாதங்கள் வெறி பிடித்தவன் போல் சென்னையில் சுற்றினான். அதற்குப் பிறகு ஹௌஸ் ஸர்ஜனாகப் பணி புரியும்போது ராயபுரத்தைச் சேர்ந்த லிண்டா பேட்மேன் என்ற ஓர் ஆங்கிலோ-இந்திய நர்ஸோடு தொடர்பு கொண்டான். சில மாதங்கள் கழித்து அவளை மனைவியாக்கிக் கொண்டான். திருமணவாழ்க்கை முதல் குழந்தை க்ரேஸ் பிறக்கும் வரைதான் நீடித்தது... குழந்தையை எந்த மதத்தின் ஆதரவில் வளர்ப்பது என்பது முதலில் பிரச்சினையாக, பிறகு புயலாக மாறியது. லிண்டா அவனுடன் பேசுவதையே நிறுத்தி விட்டாள். அதற்கு எதிராக வீட்டு வேலைக்காரி சந்திராவைத் தன் வசமாக்கிக் கொண்டான். லிண்டாவின் எதிரிலேயே அவளுடன் சரசமாடுவான்... அதன் விளைவாக அவள் தன் குழந்தையுடன் தாய் வீட்டிற்குச் சென்று விட்டாள்... அதற்குப் பிறகு அவன் லிண்டாவைப் பார்க்கவேயில்லை...

குழந்தை க்ரேஸை ராயபுரம் மாதாகோவில் தெருவிலுள்ள பள்ளியிலிருந்து வெளியே வரும்போது பார்ப்பான், பேசுவான். அந்த விஷயம் அறிந்த லிண்டாவின் அண்ணன்—தம்பிமார்கள் அவனை ஒரு நாள் இரவு, கல்மண்டபம் சாலைக்கருகே நடந்து போய்க் கொண்டிருக்கும்போது அடித்து நொறுக்கி விட்டார்கள். இரண்டு மாதங்கள் கழித்து அவன் மீண்டும் தன் குழந்தையைப் பார்க்க பள்ளிக் கூடத்திற்குச் சென்றபோது, லிண்டா தன் குழந்தையோடு டெல்லிக்குப் போய் விட்டதாகச் செய்தி கிடைத்தது.

**(இன்னும்வரும்)**

COMICS PDF TIMES

# ராண்டார்கை

குழந்தையைக் கண்டுபிடிக்க பல முயற்சிகள் எடுத்தான். ஆனுல் பலன் கிடைக்கவில்லை. க்ரேஸின் இரண்டாவது பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது எடுத்த புகைப்படம்தான் மிஞ்சியது. அதைத் தன் பர்ஸில் வைத்துக் கொண்டான். இரவு நேரத் தனிமையில் அதைப் பார்த்து அழுவான்...

படிப்பும் முடிந்தது. 'டாக்டர் சூரிய குமார்' என்ற பெயர் பலகை சென்னையில் பல இடங்களில் தொங்க ஆரம்பித்தது. ப்ராட்வே — சிந்தாதரிப்பேட்டை — திருவல்லிக்கேணி—மந்தவெளி—வடபழனி... இப்படிப் பல இடங்களில். ஆனுல், அவன் மனம் நோயாளிகளின் குறைகளைத் தீர்ப்பதில் ஈடுபடவில்லை...

ஒருநாள் வடபழனியில் தன் மருத்துவ மனையில் தனியாக உட்கார்ந்திருந்தான். அப்போது அன்று காலையில் தபாலில் வந்த ஒரு மருத்துவ மாத இதழ் அவன் கவனத்தை இழுத்தது...அதைக் கையில் எடுத்துப் படிக்க ஆரம்பித்தான்...அதில் ஒரு நீண்ட கட்டுரை. காட்டில் வளரும் 'நிமோஸா' மரம் என்பதைப் பற்றியது அது! அதில் ஓர் அபூர்வப் பிரச்சினையைப் பற்றிக் கூறப்பட்டிருந்தது. அதைப் படிக்கப் படிக்க அவனுக்கு வேர்க்கத் தொடங்கியது! உடல் சூடேறியது! ரத்தம் கொதித்துக் கொப்பளிக்க ஆரம்பித்தது! அந்தக் கட்டுரையைப் பதினெட்டு முறை படித்தான். சில முக்கியமான பகுதிகளை மனப்பாடமும் செய்தான்.

'நிமோஸா' மரம்! அது அவன் வாழ்க்கையையே மாற்றி விட்டது! ஓராண்டு காலம் மருத்துவமனையை மூடிவிட்டு, இந்தியா முழுவதும் சுற்றி அலைந்தான்... பல ஆயிரம் புத்தகங்களைப் படித்தான். பல டாக்டர்கள் — பேராசிரியர்கள் — நிபுணர்கள்-'பாட்டனி' ஆராய்ச்சியாளர்கள் போன்றவர்களைச் சந்தித்துப் பேசினுன்...

இந்த முயற்சியில் மூன்று ஆண்டுகள் உருண்டு ஓடியும் பயனில்லை. அதனுல் வாழ்க்கையே வெறுத்துப்போன நேரத்தில், பக்கிரிசாமித் தம்பி தமிழ் நாட்டின் குடும்பநல அமைச்சராகப் பதவி ஏற்றுர். தம்பி, சூரியகுமாருடன் திருச்சியில் பள்ளியிலும்-கல்லூரியிலும் ஒன்றுகப் படித்தவர். தம்பியின் உதவி கதவைத் தட்டியவுடன் கிடைத்தது!



அமைச்சர் தன் நண்பனுக்காக வசதியின் கதவுகளைத் திறந்து விட்டார்..! சென்னையிலிருந்து, டெல்லியிலிருந்து, ஐ.நா. சபையைச் சேர்ந்த நிறுவனங்களிலிருந்து உதவி சூரியகுமாரை நோக்கிப் பாய்ந்து வந்தது...'நிமோஸா' மரத்தைப்பற்றிய பிரத்தியேக ஆராய்ச்சி நிறுவனம் சூரியகுமாருக்காக தமிழ்நாட்டிலுள்ள 'தேத்ஆலைந்தான்' காட்டில் அமைக்கப்பட்டது! அந்தக் காட்டில் 'நிமோஸா' மரங்கள் அதிகம். அங்கே குடிபுகுந்தான் சூரியகுமார்.

ஃ ஃ ஃ

அம்பிகா சந்திரன், சூரியகுமாரிடம் உதவியாளராக இரண்டு ஆண்டுகளாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறாள். கோட்டையத்தில் ஒரு பிரபல கல்லூரியில் படித்து ரஸாயன சாஸ்திரத்தில் முதல் வகுப்பில் பட்டம் பெற்றாள். அதற்குப் பிறகு திருவனந்தபுரத்தில் 'பயாலஜி'யில் டிப்ளமாவில் முதல் வகுப்பில் வெற்றி பெற்றாள். படிப்பு முடிந்ததும், அந்த ஊரிலேயே வேலை வாய்ப்பு தேடி அலைந்தாள். ஆனால் அது அவளுக்குக் கிடைக்கவில்லை. அவள் தந்தை சந்திரன் ஒரு பத்திரிகை நிறுவனத்தில் அச்சுக் கோர்க்கும் வேலையில் பல ஆண்டுகள் ஈடுபட்டவர். அதன் விளைவாக அவர் கண்கள் பாதிக்கப்பட்டு முடிவில்முழுக்குருடராகஆகிவிட்டார்... குருடனாக வாழ்க்கை நடத்த மனமில்லாத சந்திரன், ஒரு நாள் இரவு மூட்டைப்பூச்சி மருந்தைக் குடித்து விட்டுத் தற்கொலை செய்து கொண்டார். அம்பிகாவின் தாய் ரமணி அம்மா ஓர் அளவிற்கு வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள். வீடு, தோட்டம், நிலம் என்றெல்லாம் அவளுக்கு உண்டு.அதனால் அம்பிகாவால் தடையின்றி தான் விரும்பிய படிப்பை வெற்றிகரமாக முடிக்கமுடிந்தது.அவளுக்குப் பதினெட்டு வயது முடியும் நேரத்தில், நாற்பது வயதைத் தாண்டிவிட்ட ரமணி அம்மா, அவள்கிராமத்தைச்சேர்ந்த ஒரு போலீஸ் அதிகாரியைத் திருமணம் செய்து கொண்டாள். தாயின் மறுமணம் அம்பிகாவுக்குப் பிடிக்கவில்லை. இருவருக்குமிடையே வாக்குவாதங்கள் நடக்கும். புதிய கணவனுடன் எர்ணாகுளத்தில் குடியேறிய ரமணி அம்மா, தன் மகளைத் தன்னோடு வந்து இருக்கும்படி வற்புறுத்தினாள். ஆனால் அம்பிகா அதற்குச் சம்மதிக்கவில்லை. மாதங்கள் ஓட ஓட, இருவருக்குமிடையே பிளவு பரவ ஆரம்பித்தது... படிப்பதற்கு மட்டும் தவறாமல் தாயிடமிருந்து பணம் வந்துவிடும். அம்பிகாவும் அதை ஏற்றுக் கொள்வாள். பட்டம் பெற்ற பிறகு எர்ணாகுளத்திலேயே ஒரு கல்லூரியில் வேலை வாங்கிக் கொடுப்பதாகத் தாயிடமிருந்து தகவல் வந்தது. அதைப் பார்த்தவுடன் கேரளத்திலிருந்தே தப்பி வெளியேற வேண்டுமென்ற எண்ணம் அம்பிகாவைப் பலமாகக் கவ்விக்கொண்டது... அந்தநேரத்தில்தான் சூரியகுமார் வெளியிட்ட ஒருவிளம்பரத்தைப் பத்திரிகையில் பார்த்தாள். உடனே தன் மனுவை அனுப்பினாள். ஒரு மாதத்திற்குள்ளாகவே வேலையில் சேர்ந்து விட்டாள். அம்பிகாவின் விஞ்ஞான அறிவு, வேலை செய்வதில் ஆவல், அவள் எடுப்பான உடல், எந்த நிலைமையிலும் சிரித்துப் பேசும் சுபாவம், இவைகள் எல்லாம் சூரியகுமாரை வலை வீசி இழுத்தன... ஒரே மாதத்தில் உதவியாளர் உடல்உறவுக் காதலியாக உருவெடுத்தாள். அதில் இருவருக்குமே சந்தோஷம்,சுவை, திருப்தி....

ஃ ஃ ஃ

"சூரி, சஸ்பென்ஸாவது, மண்ணாங்கட்டியாவது! இது என்ன சினிமாவா...? க்ளைமாக்ஸ்லதான் எல்லாம் வெளியே வரும்ங்கிறதுக்கு... நீ இப்பவே உன் நிமோஸா மர மர்மத்தைப் பற்றி சொல்லலே, நா விடப்போறதில்லே..."

—அம்பிகா சிரித்துக் கொண்டே தன் விரல்களை இறுக்கினாள்.

"அம்பா, இந்த நிமோஸா மரம் ஒரு அதிசயமானது. இதன் மரப்பட்டையிலே ஒரு கெமிக்கல் இருக்கு. அத இன்னும் சரியா அனலைஸ் பண்ண முடியலே.. அதோட ஃபார்முலா என்ன... மாலிகுலர் கன்ஸ்ட்ரக்ஷன் என்ன, அத லேப்லே ஸிந்தடிக்கா செய்ய முடியுமா...? அப்படீங்கற பாயிண்டெல்லாம் இனிமேதான் புரியும்... அந்த கெமிக்கல் இந்த [illegible]ப்பட்டையிலே எண்ணெய் ரூபத்[illegible] இருக்கு... இரண்டாயிரம் வரு[illegible]துக்கு முன்னாடியே சில மலை ஜாதிக்[illegible], இந்த எண்ணெயை எடுத்து புதுசாக் கல்யாண ஆனவங்களுக்குக்கொடுப்பாங்களாம்... முன்பெல்லாம் குழந்தைங்களுக்கு விளக்கெண்ணெய் கொடுப்பாங்களே அந்தமாதிரி! அம்பா, அந்த மலைஜாதிக்காரங்களுக்கே அப்பவே ஒரு மாடர்ன் திங்கிங் பாரு..." என்று அதைப்பற்றிய மர்மத்தை விளக்க ஆரம்பித்தான்.

**(இன்னும் வரும்)**

# கருத்தடை மரம்

## 5

டாக்டர் சூரியகுமார் நிமோஸா மரப்பட்டையைப் பற்றிக் கூற ஆரம்பித்தான்...

''அந்த நிமோஸா மரப்பட்டை எண்ணெய், புள்ளே பொறக்கறதைத் தடுக்கும். இந்த பிரமாதமான பாயிண்டை நாம நெக்லெட் பண்ணிட்டோம்... இதப்பத்திக் கேள்விப்பட்டவங்க அதை ஸீரியஸா எடுத்துக்கலே. அந்தக் கொறையைத் தீத்து வெக்கலாம்னுதான் நா வந்தேன். பட் ஒன் திங், இதுவரைக்கும் ஸயன்டிஃபிக்கா யாரும் அதை ஸ்டடி பண்ணதில்லே. எந்த அளவுக்கு சரியா வரும்; என்ன டோஸேஜ், எல்லாருக்குமே சரியா வருமா, அப்படீங்கற பாயிண்ட்ஸெல்லாம் இனிமேதான் நாம கண்டுபிடிக்கணும்..அதான் ஒனக்கே தெரியுமே..!''

''அதுசரி சூரி, அது எப்படி வேலே செய்யுதுன்னு இன்னும் சொல்லலியே நீங்க?''

''அம்பா, பிடிச்சா விடமாட்டியே...! இந்த நிமோஸா எண்ணெய் இருக்கில்லியா... நா அதுக்கு 'மோஸின்'னு பேர் வெச்சிருக்கேன். அதை வந்து ஒரு ஆணுடைய இடுப்புப் பிரதேசத்திலே இன்ஜெக்ட் பண்ணணும். அதான் நீ பார்த்தியே. இந்த கெமிக்கல் நம்ம ப்ளட் ஸ்டிரீம்ல நுழைஞ்சவுடனே ஆணோட செமினல் டக்ட்ஸ், அதாவது விந்துக் குழாய்கள்... என் தமிழ் சரியா...? அங்கே போய் சேருது. அது ஏன்னு இன்னும் சரியாப் புரியலே... எனிவே, அங்கே போய் சேர்ந்தவுடனே அந்த கெமிக்கல் ஆண் விந்துலே இருக்கிற உயிர் அணுக்களோட வேகத்தைக் குறைக்கிறது. ஹௌ இன்ட்ரஸ்டிங்...இல்லே? அதனாலெ ப்ரெக்னன்ட் ஆறதுக்கு சான்ஸ், ப்ராக்டிகலி நில்...''

''சூரி, பிரமாதம்! நீங்க ஒரு ஜீனியஸ் தான்! நம்ம எக்ஸ்பரிமெண்ட் நல்லா வந்ததுன்னா ஒங்களுக்கு நோபெல் ப்ரைஸ்லே வரும். சந்தேகமேயில்லே.''

''அதெல்லாம் சரி அம்பா...இன்னும் யாருக்குமே தெரியாத, நான் சொல்லாத, உலகத்தையே ஆட்டிவைக்கிற ஒரு தியரிய ஒனக்கு, ஸிம்பிளா சொல்லிட்டேன். அதுக்கு நீ என்ன தரப் போறே...!''

அம்பிகா சூரியகுமார் கேட்டதையெல்லாம் கொடுத்தாள். கேட்காததையும் தந்தாள்! எதிர்பாராததையும் அள்ளி வீசினாள். நேரம் சென்றது. மரப்பட்டை அந்த இடத்திலிருந்து மாயமாக மறைந்தது....

ஃ ஃ ஃ

சூரியகுமாருக்கு நடப்பதென்றால் அலாதி குஷி! அதிலும் காட்டில் நடப்பதென்றால் வெறி. தூரம், நேரம் இரண்டையும் பார்க்காமலே நடப்பான். மாணவனாக இருந்தபோது, திருச்சி தெப்பக் குளத்திலிருந்து ஸ்ரீரங்கம் ரங்கனாதர் கோயிலுக்கு ஒரு முறையாவது நடந்து விட்டு வருவான். அவனுக்கு வெளி அரங்க விளையாட்டுகள், யோகாசனம் போன்ற விஷயங்களிலெல்லாம் பிடிப்பு இடையாது. வெகுதூரம் நடப்பது தான் அவன் செய்யும் தேகப்பயிற்சி! 'தேடி அலேந்தான் காடு' வந்து சேர்ந்த பிறகு நடக்கும் தூரமும் அதிகமாகியது. சில நேரங்களில் மாலேயில் வேலே முடிந்த பிறகு அம்பிகாவும் போவாள். அவளுக்கு அதிலெல்லாம் அவ்வளவாக அக்கறையில்லே. ஆனால் காட்டில், கண்ணுக்கெட்டும் தூரத்திற்குப் பிறகும் மனித சஞ்சாரமே இல்லாத இடத்தில் சூரியகுமாரோடு கைக்கோத்துக் கொண்டு, உரசி உலாவுவது அவளுக்குப் பிடிக்கும். சில நாட்களில் இருவருமாக நடந்தே வயலூர் தியாகராஜன் வீட்டிற்குச் செல்வார்கள். அவர்தான் 'தேடி அலேந்தான் காட்டி'ன் அதிகாரி. அவர் தங்கும் அரசாங்க வீடு காட்டின் ஒரு பகுதியில் இருந்தது. அவர் மனேவி நிர்மலா தியாகராஜனும், அம்பிகாவும் நெருங்கிய சினேகிதிகள்.

நிர்மலாவைச் சந்தித்து ஐந்து நாட்களுக்குமேல் ஆகிவிட்டது. சாதாரணமாக அம்பிகா, அவளே இரண்டு மூன்று நாட்களுக்கொருமுறை சந்திப்பாள். அன்று அவளுடன் சிறிதுநேரம் பேசுவதற்காகவே சூரியகுமாருடன் நடந்து சென்றாள்.



''அம்பா, இன்னிக்கி ஒன் பிரெண்டு நிம்மியை மீட் பண்ணிப் பேச முடியாதுன்னு நெனக்கிறேன்...'' நடந்து கொண்டே சூரியகுமார் தன் கைக்கடிகாரத்தை உற்றுப் பார்த்தான்.

''ஒய் நாட்...?''

''என்ன அம்பா இது? யூ ஷுட் நோ ரீஸன். அந்த ஆளுக்கு, பஸ்ட் மோஸின் இன்ஜக்ஷனைக் கொடுத்தாச்சு. அவன் எப்படி ரியாக்ட் பண்றான்... பி. பி. வேரியாகுதா... ஸெக்ஷுவல் டிசையர் குறையுதா...? இதையெல்லாம் அவனைத் திருப்பி அனுப்பறதுக்குள்ளே கண்டுபிடிச்சாகணும். அதனலதான் இன்னிக்கு நிம்மியை மீட் பண்ண முடியாதுன்னு சொன்னேன். ஓகே...!''

அம்பிகா சிரித்தாள். அவன் முதுகைக் கிள்ளினாள்.

''ஆமா, அதை எப்படிக் கண்டுபிடிப்பீங்க?''

''அம்பா, நா ஒரு விஞ்ஞானி அண்டு ஆல்ஸோ எ டாக்டர். அந்தக் கவலையை எங்கிட்ட விடு. நேரமாச்சு... திரும்பி லேபுக்குப் போகலாம், வா...!''

இருவரும் கதவைத் திறந்து கொண்டு அறையினுள்ளே நுழைந்தார்கள். சூரிய குமார் வேகமாக மேசைக்கருகே நடந்தான். கட்டப்பட்டிருந்த கடுகர் ஆணின் உடலை லேசாகத் தொட்டான். விரல்களில் மின்சாரம் பாய்ந்ததுபோல், அவன் கை தானகவே பின்னல் இழுத்துக் கொண்டது. மீண்டும் அவனைப் பல இடங்களில் தொட்டுத் தடவிப் பார்த்தான். அம்பா அருகில் நின்று கொண்டு அந்த ஆளையும், சூரியகுமாரையும் மாறிமாறிப் பார்த்தாள். சூரியகுமார் மேசையின் மேல் சாய்ந்தபடியே முணுமுணுத்தான்:

''ஓ! மை காட். ஹீ ஈஸ் டெட். ஆளே க்ளோஸ்....!''

சூரியகுமார் அப்படியே சற்று நேரம் கட்டிலில் உட்கார்ந்து விட்டான். கவர்ச்சியே உருவாக அவனுக்காகவே காத்திருக்கும் அம்பிகாவை வழக்கமான, பழக்கமான கண்ணேட்டத்தோடு பார்க்கும் நிலையில் அன்று அவன் இல்லை. அம்பிகாவும் தன் கைவிரல் நகங்களைக் கடித்து மென்று கொண்டேயிருந்தாள். சூரியகுமாருக்கு காதலியான பிறகு, இருவரும் தனித்தனியாகத் தவம் செய்வதுபோல் உட்கார்ந்திருப்பது அது தான் முதல்தடவை. கட்டில், இருவரும் கட்டி அணைத்து, காதல் விளையாட்டுகளில் ஈடுபடுவதற்காகவே செய்யப்பட்டது என்ற கருத்து அவனுக்கும் உண்டு; அவளுக்கும் உண்டு. அந்த எண்ணம் முதல்முறையாக அவர்கள் மனங்களிலிருந்து மறைந்திருந்தன. கடுகர் ஜாதி ஆண் பிணமாகக் கிடப்பான் என்று சூரியகுமார் எதிர்பார்க்கவேயில்லை. அவனுக்குத் தெரிந்தவரையில் விஞ்ஞான ரீதியாக சாவிற்குக் காரணம் எதுவும் நினைத்துப் பார்க்கமுடியவில்லை.

(இன்னும் வரும்)

ராண்டார்கை

# கருத்தடை மரம்



## 6

மேஜையின்மேல் கிடந்தவன் பிண மாகி விட்டான் என்று ஊர்ஜிதப் படுத்திய பிறகு, தன் கைவசமுள்ள மருத்துவப் புத்தகங்களை எல்லாம் பல முறைப் புரட்டிப் புரட்டிப் படித்துப் பார்த்து விட்டான். தான் செய்த ஆராய்ச்சிக் குறிப்புப் புத்தகங்களையும் படித்து விட்டான். ஆனால் அந்தக் கடுகர் ஜாதி ஆண் இறந்ததற்குக் காரணம் கண்டுபிடிக்க முடியவில்லை.

''சூரி, இப்படியே உட்கார்ந்துக்கிட்டு இருந்தா என்ன பிரயோஜனம்...? மேலே என்ன செய்யணும்னு யோசனை பண்ணுங்க...''

—அம்பிகா நகத்தைக் கடித்துக் கொண்டே பேசினாள்.

''அம்பா, அந்த ஃபெலோ ஏன் செத்தான்னு எனக்குத் தெரியணும்... அந்த ரீஸனைப் புரிஞ்சிக்காமெ, மேலே யோசனை பண்றதிலே தேர் ஈஸ் நோ பாயிண்ட். நா குடுத்த மோளின் இன்ஜக்ஷன் அவனைச் சாக அடிச்சிதா...ஆர் அந்த ஸ்டுபிட் ஃபெல்லோ, நாம்ப அவனை என்னமோ பண்ணிடப் போறோமோ அப்படிங்கற பயத்துல செத்துட்டானுன்னு தெரியணும். யூ நோ அம்பா, ஷாக் கேன் கில் பீப்பிள்...அந்த ஷாக்குதான் அவனைக் க்ளோஸ் பண்ணிடுச்சுன்னு ஓகே...ஐ டோண்ட் கேர் அபௌட் திஸ் டெத். ஒரு ஆளு கொறச்சல் நம்ம நாட்டுலேன்னு நெனச்சிப்பேன்! பட், மோளின் கெமிக்கல்ல ஏதாவது ஃபால்ட் இருக்குன்னு வந்துடுச்சுன்னு...அந்த ஷாக்கெ என்னுலெ தாங்க முடியாது. நா பண்ண ரிசர்ச், நா பட்ட கஷ்டம் இந்த க்ராண்ட்ஸெல்லாம் வாங்கறதுக்கு தெருத் தெருவா, ஆபீஸ் ஆபீஸா சுத்தின அலேச்சல்... மை டைம்... மை எனர்ஜி... ஏன், என் ஃப்யூச்சரே எல்லாம் க்ளோஸ்!''

''சூரி, நா சொல்ற விஷயமே வேறே... நீங்க அதெப் புரிஞ்சுக்காமெ, என்னன்னமோ லெக்சர் அடிச்சிக்கிட்டி

## நாணடாரகை

ருக்கிங்களே! இந்த விஷயம் வெளிலே தெரிஞ்சா என்ன ஆகும்னு ஒங்களுக்குப் புரியுதில்லே... அதெ மொதல்ல கவனிப் போம்.''

சூரியகுமார் எழுந்து நின்ருன். அவன் கண்களில் ஒரு புதுவிதமான ஒளி படர ஆரம்பித்தது.

''அம்பா, அவன் செத்துப் போன விஷயம் ஆண்டிக்குத் தெரியுமா...?''

''ஐ திங்க் ஸோ...ஆனு, நீங்க அவனே நல்ல பயமுறுத்தி வெச்சிருக்கிங்க இல்லே... அதனுலெ அவன் வாயைத் தெறக்க மாட்டான்...''

''அம்பா, வாட் எவர் இட் ஈஸ்... அந்த ஆண்டி இல்லாமெ இந்தப் பொணத்தெ டிஸ்போஸ் பண்ண முடியாது. நீ அவனே ஒடனே இங்கே வரச்சொல்லு. நா டைனிங் ரூம்லெ ஒக்காந்துக்கிட்டி ருக்கேன். இந்த விஷயத்தை வயலூர் தியாகராஜனுக்கும் தெரியப்படுத்த ணும். அப்பத்தான் விஷயமும் வெளிலே வராமெ இருக்கும்; நமக்கும் ப்ராப் ளம் வராமெ இருக்கும் பின்னுடி. கவர் மெண்ட் சமாசாரமாச்சே... கொஞ்சம் ஜாக்கிரதையாத்தான் செய்யணும் அம்பா! யூ ஆஸ்க் ஆண்டி டு கம் ஹியர் இம்மீடியட்லி.''

''சூரி, எனக்கென்னமோ பயமா யிருக்கு. இந்தப் பொணம் அவ்வளவு ஈஸியா...சூரி, அனதர் திங், இந்த ஆண்டியெ கூப்பிடறீங்களே, அவனுலெ ஏதாவது ப்ராப்ளம் வந்தா — ப்ளாக் மெயில் அது இதுன்னு...''

சூரியகுமார் ஏளனமாகச் சிரித்தான்:

''அம்பா, டோண்ட் பி ஸில்லி! இந்த ஆளே, நம்ம லேப்புக்குப் பிடிச் சிண்டு வந்தவன் யாரு? ஆண்டிதானே! அவன் போயி நம்மகிட்டயே வாலாட் டுவானு? அப்படி அவன் ஆட்டினுன்னு என்ன செய்யணும்னு எனக்குத் தெரி யும் அம்பா! யூ கால் ஹிம்...''

ஐந்து நிமிடங்கள் கழித்து அம்பிகா ஆண்டியை அழைத்துக் கொண்டு, படுக்கை அறைக்குப் பக்கத்திலிருந்த டைனிங் ரூமுக்கு வந்தாள். அங்கே டைனிங் டேபிளுக்கு அருகில் ஒரு வெள்ளை நிற நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு சூரியகுமார் பிஸ்கெட்டைக் கடித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந் தான். சூரியகுமாரைப் பார்த்த உடனே விஷயம் என்னவென்று அவ னுக்கு ஓரளவு புரிந்துவிட்டது. அதனுல் சூரியகுமார் அதிக நேரம் விளக்கங்கூறத் தேவை ஏற்படவில்லே.

''டாக்டர் ஸார், நம்ம ஐயாகிட்டச் சொல்லிட்டுத்தாங்க ஏதாவது செய்ய ணும். இல்லேன்னு,ஃபாரெஸ்ட் டிபார்ட் மெண்டே மாட்டிக்கும் நாளேக்கு... பொண விஷயம் வெளிலே அவுட் ஆயி டிச்சின்னு நம்ம கதி என்ன ஆவறது? நா ஏழை. நான்தான் மாட்டிக்குவேன். ஐயாகிட்டெச் சொல்லிட்டோம்னு ஒரு ட்ரபிளும் வராமெ ஐயாவே பாத்துக்கு வாரு...''

''ஆண்டி, நீ எதுக்கும் பயப்படா தேய்யா... ஒரே ஒரு மலேஜாதிக்காரன், இவ்வளவு பெரிய காட்டுலே காணுமப் போயிட்டான்னு, அதப்பத்தி யாரும் கவலேப்படப் போறதில்லே...!''

''ஸார், இந்த ஆளே... நீங்க செய்யறீங்களே...என்னமோ ரிசர்ச்... அதுக்காகப்பிடிச்சுக்கொண்டாந்தேன்னு அந்த மல்லிக்குத் தெரியும். அந்த மல் லிகாதான் இந்த ஆளெப்பத்தி எனக்குத் தகவல் கொடுத்துச்சு. அது கேக்கு மில்லே...? ஐயாகிட்டச் சொல்லிட்டீங் கன்னு மல்லி வாயைத் தெறக்காது. அவுங்க வீட்டு வேலக்காரிதானே... அது லயும் நிர்மலா அம்மா சொன்னுங் கன்னு, அந்தப் பொண்ணு இதப் பத்தி மூச்சுக்கூட விடாது வெளிலே...''

''ஏம்ப்பா ஆண்டி, இந்த விஷயம் மிஸஸ் தியாகராஜனுக்கும் தெரி யுமா...?''

''ஸார், இந்தத் 'தேடி அலேந்தான் காட்டு'லே நிர்மலா அம்மாவுக்குத் தெரியாமெ ஒண்ணுமே நடக்காதுங்க... அந்த அம்மா பர்மிஷன் இல்லாமெ ஐயாகூட எதையுமே செய்ய மாட் டாரு... யாரெ கூட்டிக்கிட்டு வந் தேன்னு நிர்மலா அம்மாவுக்கு நல் லாவே தெரியுமிங்க...''

''ஐ ஸீ! அப்ப தியாகராஜனேப் பாப்போம். அவர் என்ன சொல்ருரோ அதுபடிச் செய்வோம்...''

அவர்கள் லேப்புக்குச் சென்ருர்கள். மேஜைப் பக்கம் திரும்பி பார்த்தமூவரும் அப்படியே அடுத்த அடி எடுத்து வைக்க முடியாமல் மலேத்து நின்ருர்கள்!

பொணத்தைக் காணேம்!

**(இன்னும் வரும்)**

# கருத்தடை மரம்

## 7

'ரிவர் வ்யூ' என்ற அழகான சிறிய பங்களா. அறுபது ஆண்டுகளுக்கு முன் காட்டு இலாகாவில் வேலே பார்த்த ஒரு வெள்ளைக்கார அதிகாரிக்காகவே கட்டப்பட்டது அது. சில ஆண்டுகளுக்கு முன்புதான் கட்டடம் புதுப்பிக்கப்பட்டு, நவீன வசதிகளோடு காட்சி அளித்தது. அதைச் சுற்றி அழகிய பூந்தோட்டம், மரங்கள். வீட்டிற்குப் பின்னல் காய்கறித் தோட்டம். பங்களாவின் மாடி வராண்டாவிலிருந்து பார்த்தால் தூரத்தில் சலசலவென ஓடும் நங்கை நதி. அதற்காகத்தான் அந்த வெள்ளைக்காரர் பங்களாவுக்கு "ரிவர் வ்யூ' என்று பெயர் வைத்திருந்தார். வெளியிலிருந்து காட்டுமிருகங்கள் உள்ளே வராமல் இருக்க, உள்ளே துள்ளி விளையாடும் மான்கள் வெளியே செல்லாமலிருக்க, தோட்டத்தைச் சுற்றி உயரமான முள்வேலி. அப்படி இருந்தும் பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு புலி எப்படியோ உள்ளே நுழைந்து விட்டது. அதைத் துப்பாக்கியை உபயோகிக்காமல், சாமர்த்தியமாக வெளியே துரத்திவிட்டார் இன்ஸ் என்ற காட்டு அதிகாரி. அதனுல் அந்தத் தோட்டப் பகுதிக்கு "இன்ஸ் கார்னர்' என்று பெயர்.

இன்ஸ் கார்னரில் ஒரு மாமரத்தின் கீழே நான்கு பிரம்பு நாற்காலிகள். நடுவே ஒரு பிரம்பு டீபாய். அதன் மேல் ஒரு விஸ்கி பாட்டில் — மூன்று கண்ணுடித் தம்ளர்கள். ஒரு கூஜாவில் ஐஸ் கட்டிகள் மிதந்து கொண்டிருக்கும் தண்ணீர். நிர்மலா பாட்டிலைத் திறந்து விஸ்கியை தம்ளர்களில் ஊற்றிக் கொண்டிருந்தாள். இரவு வேகமாகக் காட்டில் பவனி வந்து கொண்டிருந்ததால், நிர்மலா, சூர்யகுமாரை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது அவன் கண்களில் தெளிவாகப் படவில்லே.

''என்ன அம்பிகா, சீக்கிரமே நோபின் ப்ரைஸ் வாங்கப் போற ஓர் இண்டியனுக்குச் செக்ரட்டரியா இருக்கேன்னு அலட்டிக்கிறே... இதெல்லாம் ஒனக்குச் சாப்பிடற பழக்கம் வரலயே... மத்த விஷயத்துலெல்லாம்...யூ அண்டர்ஸ்டாண்ட் வாட் ஐ மீன்...ரொம்ப பார்வேர்டா இருக்கே. ஆனு விஸ்கி, பிராண்டின்னு ஒரேஅடியா மெரள்றியே...!''

— நிர்மலா ஒரு பெரிய ஸ்பூனுல் ஐஸ் கட்டிகளே வெளியே எடுத்துக் கொண்டே பேசினுள்.

வயலூர் தியாகராஜன் தன் தம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டான். விஸ்கியை, விஸ்கியுடன் கலப்பதைத் தவிர வேறென்றும் அவனுக்குப் பிடிக்காது. ஐஸ், சோடா போன்ற பொருள்களே எல்லாம் அவன் அலட்சியப் பார்வையோடுதான் பார்ப்பான்!

''என்ன நிம்மி, ரொம்ப இம்ப்பார்ட்டன்டா ஒரு விஷயம் பேச வந்திருக்காங்க அவுங்க ரெண்டு பேரும்... நீ என்னடான்னு...கிண்டல் பண்றதுக்கு இதுவா நேரம்? ஒரு ஸ்டேட் கவர்மெண்ட் ஆபீஸர் ஒய்ஃப்புக்கு இருக்க வேண்டிய சீரியஸ்னெஸ்லே இல்லியே ஒனக்கு... அது எப்பதா வருமோ?''

''சரிதான் நிறுத்துங்க... நீங்க என்ன பெரிய ஐ. ஏ. எஸ். ஆபீஸரா? இல்ல, சீஃப் கன்ஸர்வேடர் ஆஃப் ஃபாரஸ்டா? ரெண்டும் இல்லே. எங்க மாமா சொல்வாரே அதுமாதிரி... நீங்க பாக்கறது இந்தக் காட்டுலே பாராக்காரன் உத்தியோகம்! வாய் தான் பெரிசா கிழியிது...''

சூரியகுமார் தன் நாற்காலியில் நகர்ந்து உட்கார்ந்தான். தியாகராஜனும் — நிர்மலாவும் சண்டை போட்டுக் கொள்வது அவனுக்குப் பழக்கமான காட்சி. ஆனுல் அன்று அவன் இருந்த மனநிலேயில் கையில் விஸ்கி தம்ளருடன்



அவர்களைப் பார்த்து ரசிக்கும் நிலைமையில் இல்லை...

''ப்ளீஸ் நிர்மலா, ஒங்க ஆர்க்யூமெண்ட்ஸெ நாளைக்கு போஸ்ட்போன் பண்ணிக்கங்களேன்... நானும் அம்பிகாவும் இப்ப எதுக்கு வந்திருக்கோம்னு ஒனக்கு நல்லாத் தெரியும். அத விட்டுட்டு...''

''சூரி, அவர்தானே சண்டையை ஆரம்பிச்சாரு மொதல்லே... நா சிவனேன்னு விஸ்கியை ஊத்திக்கிட்டிருந்தேன். மொதல் கல்லே விட்டெறிஞ்சது அவரு. நீங்க என்னடான்னு நா பெரிசா தப்புப் பண்ணமாதிரி... இந்த ஆம்பளைங்களே இப்படித்தான்!''

''நிம்மி, விஷயத்துக்கு வருவோம். சூரி சொல்ற மாதிரி...என்ன அம்பிகா, ரொம்ப டென்ஸா ஒக்காந்திருக்கியே. ஒரு பெக் அடிச்சுப் பாரேன். அந்த டென்ஷனெல்லாம் மாயமாபோயிடும்!'' —தியாகராஜன் சிரித்தான். அம்பிகா இரண்டு கைகளையும் கூப்பினுள்.

''நோ, தேங்க்யூ தியாகராஜன்... எனக்கு டிரிங்க்ஸுன்னுவே பிடிக்காது.. நீங்கள்லாம் சாப்பிடுங்க. நா அஸ்யூஷுவல் பாத்துக்கிட்டிருக்கே...''

''என்ன சூரி, ஒங்க அம்பிகாவுக்குப் பாக்கறதுனு ரொம்பப் பிடிக்கும் போலேருக்கு...!''

—சூரியகுமாரை முறைத்துப் பார்த்துக் கொண்டே பலமாகச் சிரித்தாள் நிர்மலா.

''நிம்மி, கொஞ்சம் சீரியஸ்ஸா இரேன். நீயும்,ஒன் ஸ்டுபிட் ஜோக்ஸும்! ப்ராப்ளத்தை ஸால்வ் பண்ண முடியாமை நாங்க மண்டையை ஒடச்சிக்கிட்டிருக்கோம். நீ என்னடான்னு... வர வர ஒனக்கு கம்பெனிலே என்ன பேசறது, எப்பொ பேசறதுன்னே தெரியலே... ஒய் டோண்ட் யூ கீப் யுவர் ப்ளடி மௌத் ஷட்!''

நிர்மலா திடீரென்று எழுந்து நின்று தன் கணவனை ஒரு நீண்ட விஞடி முறைத்துப் பார்த்துவிட்டு, பங்களாவை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

''நிர்மலா, ப்ளீஸ்...!''

— அம்பிகா நாற்காலியை விட்டு எழுந்து நின்ருள்.

''நீங்க மூணு பேரும் சீரியஸ்ஸாவே பேசி, எக்கேடாவது கெட்டுப் போங்க! நா உள்ளே போறேன். எனக்கு நெறைய வேலை இருக்கு. ஒங்க டிஸ்கஷன்லெ நா தேவை இல்லேன்னு ஃப்ரேங்க்கா சொல்லியிருக்கலாமே....யூ கேன் ஆல் கோ டு ஹெல்!'' — நிர்மலா திரும்பிப் பார்க்காமல் பங்களாவுக்குள் சென்று விட்டாள்.

''ஸாரி பிரெண்ட்ஸ்... நிம்மியத்தான் ஒனக்குத் தெரியுமே...அம்பிகா, நீ ஒக்காரு. அவ பின்னுடி போக வேண்டாம். கொஞ்சநேரங் கழிச்சு அங்கே தனியா போரடிக்குதுன்னு அவளே வருவா பாரு! ஸிட் டௌன்...''

அம்பிகா நாற்காலியில் மீண்டும் உட்கார்ந்து சாய்ந்து கொண்டாள்.

(இன்னும் வரும்)

ராண்டார்கை

## 8

''தியாகு, லெட்ஸ் கெட் பேக் டு அவர் ப்ராப்ளம்...லேப்புலே இருந்த பாடி காணும்மப்போயிடுச்சுன்னு... இன் ஃபேக்ட் என்னுலெ நம்பவே முடியலே. இந்த மாதிரியெல்லாம் ஹிட்ச்காக் ஃபிலிம்லேயும், ஜேம்ஸ் ஹாட்லி சேஸ் நாவல்லேயும்தான் நடக்கும்னு நெனச்சிக்கிட்டிருந்தேன். இங்கே நம்ப லைஃப் லேயே நடந்திருக்குன்னு பாருங்களேன்...'' என்றான் சூரியகுமார்.

''சூரி, தேடி அலேந்தான் காட்டுக்கு நான்தான் ராஜா! எனக்குத் தெரியாமெ இந்த ஃபாரஸ்ட் ஏரியாலே ஒரு மரக்கிளேகூட மிஸ்ஸாக முடியாது. அப்படி இருக்கும்போது ஒரு ஆளோட பாடியெக் காணலேங்கறது என்னுலெயே நம்பமுடிலே, சூரி... அந்தமாதிரி நடக்கக்கூடாது. ஈவன் தென் நடந்திருக்கு. இந்தப் பாடியெ பத்தி வெளிலே தெரிஞ்சா நம்ப எல்லாருக்குமே இட் வில் பி ப்ளெடி எம்பாரஸிங்...முக்கியமா எனக்கு...அதனுலெ இந்த விஷயத்தை ஒரேமூச்சா இன்வெஸ்டிகேட் பண்ணி ஆகணும். அதுவரைக்கும் என்னுலெ தூங்க முடியாது. பாடி விஷயம் எங்க ஸீ. ஸீ. எஃக்கோ—இல்லே, மெட்ருஸ்லே செக்ரடேரியட்லயோ தெரிஞ்சு போச்சுன்னு. இந்த ரிசர்ச் ப்ராஜெக்டெல்லாம் அம்பேல் ஆயிடும்...ஒய், அதவிட ஏதாவது பயங்கரமா கூட நடக்கலாம்...''என்றான் தியாகராஜன்.

''தியாகு, இப்ப நம்ப ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் பயமுறுத்திக்கிறதுலே பாயிண்ட்டே இல்லே...வி ஷூட் ஃபைண்ட் எ ஸொல்யூஷன். அதுக்கு ப்ளீஸ் ஃபைண்ட் அவுட் எ வே...''

காலியாகி இருந்த தன் தம்ளரை தியாகராஜன் பாதிக்குமேல் நிரப்பிக் கொண்டான். சூரியகுமாரின் தம்ளரையும் நிரப்பினுன். தன் தம்ளரைக் கையிலெடுத்துக் கொண்டு, சற்றுநேரம் அவனுக்காகக் காத்துக் கிடக்கும் விஸ்கியின் அழகை உற்றுப் பார்த்தான்.

''சூரி, ரிசர்ச் லேபுலேருந்து பாடி காணும்மப் போயிடிச்சுன்னு அதைப் புலியோ, ஓநாயோ, செந்நாயோ அடிச்சிண்டு போயிருக்க முடியாது. தெட்ஸ் சர்ட்டன்...யாரோ ஒரு ரெண்டு கால் ஓநாய்தான் தூக்கிக்கிட்டுப் போயிருக்கணும்...!''

''ஐ அக்ரீ, தியாகு. பட் ஹு?''

''சூரி, இப்ப நம்ப அந்த ஆங்கிள்லதான் இன்வெஸ்டிகேட் பண்ணணும். இந்த ஃபாரெஸ்ட் ஏரியாலே எனக்குத் தெரியாமெ, என் பர்மிஷன் இல்லாமெ ஒரு பயலும் உள்ளே வர முடியாது...''

''எக்ஸ்கியூஸ் மி...''—அம்பிகாலேசாக இருமினுள்: ''இந்த காட்டுலே இருக்காங்களே,அதான் அந்தக்கடுகர் ஜாதி... வாட் அபௌட் தெம்?''


—தியாகராஜன் விஸ்கியை பலமாக உறிஞ்சிக் குடித்தான். அதைச் சுவைத்து மெதுவாக விழுங்கினுன்.



# ராண்டார்கை
# கருத்தடை மரம்

''அம்பிகா, அந்தப் பசங்க இந்தப் பக்கமே தலைகாட்ட மாட்டாங்க... அவங்க வழக்கமா மரத்தே திருட்டுத் தனமா வெட்டுவாங்க. நம்ம ஆளுங்க ஏமாந்தங்கன்னு முயலோ, மானோ, இல்லே காட்டுக் கோழியோ அடிப் பாங்க. அதனாலெ, நம்ம டிபார்ட் மெண்டே பாத்தாலே அவுங்களுக்கு சிம்ம சொப்பனம்! அதனாலெ அவங்க தூக்கிட்டுப் போறதுக்கு சான்ஸே இல்லே...''

''பட் தியாகு... அந்த ஆளை காணோம்னு ஒருவேளை அவுங்க தேடிக் கிட்டு வந்திருந்தா?''



''சூரி, இந்தக் கடுகர் ஜாதியைப் பத்தி யூ டோண்ட் நோ மச். அவுங்க அப்படியெல்லாம் வரமாட்டாங்க... மல்லி ஒருத்திக்குத்தான் அவன் ஒங்க லாபுக்குள்ளே நொழஞ்ச விஷயமே தெரியும்... ஒங்க ரிசர்ச் லேபுலே அவனை ஏதோ வேலைக்கு வெக்கப் போறாங்கனுதான் அவ நெனச்சிக்கிட்டி ருக்கா. அதனாலெ நோ ப்ராப்ளம்... அவளுக்கு உண்மை தெரிஞ்சாகூட நோ ப்ராப்ளம். அவ வாயைத் தொறக்க மாட்டா. டோண்ட் வொர்ரி...!''

சிறிதுநேரம் மூவரும் மௌனமாக இருந்தார்கள். வாசல் வராண்டாவைத் தவிர பங்களாவில் எங்குமே வெளிச் சத்தின் வாடையே இல்லை.

''சூரி, லீவ் தி ப்ராப்ளம் டு மி. நா ஒருவழி கண்டுபிடிக்கறேன்... டோண்ட் யூ வொர்ரி அபௌட் எனி திங். எல்லாம் சரியாப் போயிடும்... இன்ஃபேக்ட் இது ரொம்பச் சின்ன விஷ யம். நா கவனிக்கிறேன். பாடியப் பத்தி விஷயம் வெளியிலே போகாமெப் பாத்துக்கணும். தெட் ஈஸ் தி ஒன்லி திங்...''

அரைமணி நேரம் சென்றபிறகு சூரியகுமார், அம்பிகாவை எழுந் திருக்குமாறு சைகை காட்டினான். இருவரும் தியாகராஜனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு 'கேட்'டுக்கு அருகே நிறுத்தி வைத்திருந்த வேனை நோக்கி நடந்தார்கள். திடீரென்று சூரியகுமார் நின்றான்.

''அம்பா, நீ வேன்லே போய் உக் காரு. நா நிர்மலாவைப் போய்ப் பாத் துட்டு வரேன். அவுங்களுக்குள்ளே ஆயி ரம் சண்டை இருக்கலாம். நா டாட்டா சொல்லாமெ போனா அவ தப்பா எடுத்துப்பா...போயிட்டு வரேன். யூ பி ஹியர்.''

இருட்டில் சூரியகுமார் கதவை லேசாகத் தட்டினான். சில நிமிடங்கள் கழித்து நிர்மலா கதவைத் திறந்தாள்.

''ஹலோ சூரி, வாங்க. ஒங்க ப்ராப்ள மெல்லாம் ஸால்வ் ஆச்சா...?''

''நிர்மலா, நாங்க கிளம்பிண்டிருக் கோம். டாட்டா சொல்லிட்டுப்போலாம் னுதான் வந்தேன். அம்பிகா, வேன்லெ ஒக்காந்திண்டிருக்கா...''

''சூரி, லெட் ஹர் கோ டு ஹெல். ஐ டோண்ட் கேர்... நா.. ஐ மீன், ஒங்க ப்ராப்ளத்தை என்னாலெ ஸால்வ் பண்ண முடியும்!''

சூரியகுமார் ஒரு நொடி திகைத்து நின்றான்: ''நிர்மலா, வாட் டூ யூ மீன்?''

''சூரி, அந்த பாடி சமாச்சாரம் என்னாலெ தீர்க்க முடியும்... சொல்லப் போனா இப்ப என்னாலெ மட்டுந்தான் தீர்க்க முடியும்! ஆனா நா ஒங்களுக்கு ஹெல்ப் பண்ணணும்னா அதுக்கு ஒரு வெலை இருக்கு... சூரி...யூ நோ, இன் திஸ் வோர்ல்ட் எவ்ரிதிங் ஹாஸ் எ ப்ரைஸ்!''

சூரியகுமார் மலைத்து நின்றான்!

**(இன்னும் வரும்)**




இருவரும் பேசாமல் உட்கார்ந்திருந்தார்கள். சூரியகுமார் கண்களை மூடிக் கொண்டு, மெத்தை போட்ட பிரம்பு நாற்காலியில் சாய்ந்தபடியே ஆழ்ந்த யோசனையில் மூழ்கி விட்டான். தேடிஅலைந்தான் காட்டிற்கு நிமோஸா ஆராய்ச்சிக்காக வந்தபிறகு, அவன் நிர்மலாவைப் பலமுறை சந்தித்திருக்கிறான். அவனும் அம்பிகாவும் எத்தனையோ தடவை அவள் வீட்டு விருந்துகளில் கலந்து கொண்டிருக்கிறார்கள். அவ்வப்போது தியாகராஜன் தம்பதிகளுடன் தேடி அலைந்தான் காட்டைச் சுற்றிப் பார்த்திருக்கிறான். நிர்மலாவுடன் சுமுகமாகவும்—சகஜமாகவும் பழகி இருக்கிறான். ஆனால் அவளைப்பற்றி அவனுக்கு முழுமையாகத் தெரியாது. முக்கியமாக அவளை இப்படி ஓர் அதிர்ச்சி சுழலில் சிக்க வைப்பாள் என்று அவன் அணுவளவும் எதிர்பார்க்கவில்லை...

நிர்மலா சென்னையைச் சேர்ந்தவள். அவளுக்கு வயது முப்பத்தொன்று. குள்ளமாக இருந்தாலும், பார்ப்பதற்கு வசீகரமாகவே தோற்றம் அளிப்பாள். கறுப்பாக இருந்தாலும் அவள் அங்க அமைப்பு ஆண்களை மயக்கும் வகையில் அமைந்திருந்தது. இடுப்பைத் தொடும் அளவிற்கு நீளமான, மிருதுவான கறுத்த முடி...ஈரம் வழியும் தடித்த உதடுகள், வெங்கலக் குடங்களைப் போல பெருத்த மார்பகங்கள்...! கருத்தைக் கவரும் கவர்ச்சி நிறைந்த இடை...! ஆவலைத்

ராண்டார்கை

தூண்டும் ஆழமான கண்கள்! இயற்கை தனக்குக் கொடுத்த அழகை அதிகரித்துக் காட்ட அவள் செய்யும் செயற்கை முயற்சிகள்... அவள்தான் நிர்மலா தியாகராஜன்!

நிர்மலாவுக்குக் குழந்தைகள் கிடையாது. தாயாகக்கூடும் நிலையிலும் அவள் இல்லை. திருமணமான இரண்டாவது ஆண்டில் குழந்தை பிறந்தபோது அவள் கருப்பையில் கோளாறு ஏற்பட்டு, அதை எடுக்க வேண்டிய அவசர நிலை ஏற்பட்டு விட்டது. குழந்தையும் இறந்து விட்டது...

நிர்மலா திடீரென்று எழுந்து நின்றாள். தன் கைகளைப் பின்னால் மடக்கி கொட்டாவி விட்டுக் கொண்டே சோம்பல் முறித்தாள். தன் கொண்டையை விரல்களால் அழுத்திச் சரி பார்த்துக் கொண்டு, சூரியகுமாருக்கு அருகே நின்றாள். அவன் இன்னும் கண்களை மூடிக் கொண்டே சோபாவில் சாய்ந்திருந்தான். தன் ஆள் காட்டி விரலினால் அவன் முதுகைத் தட்டினாள்.

''ஹலோ, என்ன தூங்கிட்டீங்களா? தூங்கணும்னா இங்க ஏன் தூங்கணும்... இவ்வளவு பெரிய பங்களாலே எடமா இல்லே?''

—அவள் பலமாகச் சிரித்தாள். சூரியகுமார் மெதுவாகக் கண்களைத் திறந்தான்.

''நிர்மலா, இந்த நிலேலே எனக்கென்ன தூக்கமா வரும்? ஒன்னோடெ பேச்சுதான் எனக்கு அப்படியே ஷாக் அடிச்ச மாதிரி...''

நிர்மலா ஒரு பிரம்பு நாற்காலியை சூரியகுமார் நாற்காலிக்கருகே இழுத்துப் போட்டு உட்கார்ந்தாள்.

''சூரி, இதுலே ஷாக் ஆறதுக்கு என்ன இருக்கு? நீங்க ஒரு பெரிய ப்ராப்ளத்துலே மாட்டிக்கிட்டிருக்கீங்க. அதுலேருந்து வெளியே கொண்டுவரதுக்கு என்னாலெ முடியும். அதுக்கு ஒரு சின்ன வெலையைச் சொன்னேன். தெட்ஸ் ஆல். இட் ஈஸ் ஸோ சிம்ப்பிள்!''

சூரியகுமார் அவளை முறைத்துப் பார்த்தான். அவன் விரல்கள் நாற்காலியைப் பலமாகக் கௌவிக் கொண்டன.

''நிர்மலா, வாட் தி ஹெல் யூ ஆர் டாகிங் அபவுட்...ஒரு லேடி இப்படியா பேசறது...? சின்ன வேலேங்கிறீயே இதப் போய்... தியாகராஜன் எனக்கு எவ்வளவு பிரெண்டு... அவரோடெ ஒய்ஃப்...நீ...நீ வந்து இப்படிப் பச்சையா எங்கிட்டே...''

''சூரி, யூ ஆர் டாகிங் நான்ஸென்ஸ். இதெல்லாம் சாதாரண விஷயம். இப்ப ஒங்க கேஸையே எடுத்துக்கங்களேன். அம்பிகாவுக்கும்—ஒங்களுக்கும் என்ன உறவுன்னு இந்தக் காட்டுலே இருக்கிற ஒவ்வொரு நிமோளா மரத்துக்கும் தெரியும்! ஆனா, அம்பிகா வந்து ஒங்க அஸிஸ்டெண்ட், இல்லியா...? காட்டுலே நீங்க தனியா இருப்பீங்க, ஒங்களுக்கு ஒரு வுமன் தேவைப்படும் அப்படிங்கறதுக்காக அம்பிகாவை கவர்மெண்ட் அப்பாயிண்ட் பண்ணலே!

''சூரி, நா எதையுமே பிராங்க்கா பேசறவ... ஒங்களுக்கு ஒரு பொம்பளே தேவைப்பட்டுது இந்த நடுக் காட்டுலே. அம்பிகா ஒங்களுக்கு யூஸ்ஃபுல்லா இருக்கா. அதேமாதிரி இந்த நடுக் காட்டுலே எனக்கு... நீங்க... இதுக்கு மேலே சொன்னா இன்னும் பச்சையா ஒங்களுக்குத் தெரியும்...''

''நிர்மலா, கன்னா பின்னான்னு பேசாதே. நீ இவ்வளவு மோசமா இருப்பேன்னு நா நெனேக்கவே இல்லே... பாவம் தியாகராஜன்! அங்கே ஒக்காந்துக்கிட்டிருக்காரு பத்தடி தூரத்துலே. நீ என்னடான்னா... நிர்மலா, இப்பத்தான் எனக்குக் கிளியரா புரியிது, தியாகராஜன் ஏன் இந்த அளவுக்குத் தண்ணி போடறார்னு...''

—சூரியகுமார் எழுந்து நின்றான்.

''சூரி, கடைசியா சொல்றேன். கவனமா கேட்டுக்கங்க. ஒங்கவோ ஸீரியஸ் ட்ரபிள்ல மாட்டிவிட ரொம்ப ஈஸியா என்னாலெ முடியும். என் வழியிலே நீங்க வரலேன்னா நா அதெ நிச்சயமா செய்வேன். அஞ்சவே மாட்டேன். நாளேக்குச் சாயந்தரத்துக்குள்ளே நீங்க இங்கே வரலேன்னா, பாடி போலீஸுக்கே போய்ச்சேரும்... அப்பறம் என்ன நடக்குமோ ஒங்களுக்கே தெரியும்! அதுக்கெல்லாம் நா பொறுப்பாளியா இருக்க மாட்டேன்...''

சூரியகுமார் ஓர் அடி எடுத்து வைக்க முடியாமல் கல்லாகி நின்றான்...

**(இன்னும் வரும்)**

COMICS PDF TIMES

தேடிஅலைந்தான் காட்டில் ஒரு சிறிய போலீஸ் கேம்ப் உண்டு. காட்டின் அடர்த்தியான பகுதியில் ஒரு சிறிய கூடாரம். அதற்குள்ளே நான்கு போலீஸ்காரர்கள். அவர்களுக்குத் தலைவன் ஹெட்கான்ஸ்டபிள் வீரய்யன். போலீஸ் கூடாரம், தியாகராஜன் பங்களாவிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இரண்டு இடங்களிலும் ஒயர்லெஸ் மூலமாகப் பேச வசதிகள் உண்டு. அந்தக் காட்டுப் பிரதேசத்தில் போலீஸ் வந்து தங்குவதற்கு முக்கியகாரணம் நக்ஸலைட் பிரச்சினை. விபரீதவாதிகள் சிலர் தேடிஅலைந்தான் காட்டில் ஒளிந்து கொண்டு, தங்கள் வேலைகளைச் செய்வதாகக் கேள்வி. அவர்கள் யார்...? காட்டில் எங்கே ஒளிந்திருக்கிறார்கள்...?எப்படி வருகிறார்கள்...எங்கே தங்குகிறார்கள் என்ற விஷயங்கள் எல்லாமே மர்மமாகவே இருந்தன. அந்தக் குழுவிற்குத் தலைவன் கயிலைபைரவன். ஒரு பணக்காரப் பண்ணையாரைக் கொலை செய்த குற்றத்திற்காக ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டவன். ஆனால் இரண்டு ஆண்டுகள் ஜெயில் வாசம் முடிவதற்கு முன்பே அவன் அங்கிருந்து தப்பி ஓடி விட்டான். அதற்குப் பிறகு பைரவனை யாருமே பார்த்ததில்லை. முக்கியமாக போலீஸ்காரர்கள்! ஜெயிலிலிருந்து வெளியே வந்தவுடன் அவனுக்குப் பல புது நம்பிக்கைகள், அரசியல் கொள்கைகள் மனதில் உதித்தன. அவைகளை எல்லாம் செயல் படுத்துவதற்காகவே சிலரைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு, தேடிஅலைந்தான் காட்டிலிருந்து செயல்படுவதாகப் போலீஸாருக்குத் தகவல் கிடைத்தது. பைரவனையும், அவன் சகாக்களையும் பிடிப்பதற்காகத்தான் அந்தப் போலீஸ் முகாம், தேடி அலைந்தான் காட்டிலேயே அமைக்கப் பட்டது. வீரய்யனுக்கு உதவியாக காட்டு இலாகா செயல்பட வேண்டுமென்று தியாகராஜனுக்கு சென்னையிலிருந்து உத்திரவு வந்திருந்தது...

இந்த விஷயங்களெல்லாம் சூரிய குமாருக்குத் தெரியும். போலீஸ்காரர்கள் தேடிஅலைந்தான் காட்டில் இருப்பது ஒரு ரகசியம். ஆனால் அதைப் பற்றி ஒருமுறை தியாகராஜனே அவனிடம் சொல்லியிருந்தான். அதற்குப் பிறகு இரண்டுமுறை தியாகராஜன் வீட்டில் வீரய்யனை சூரியகுமார் சந்தித்திருந்தான். வீரய்யன் காட்டு பங்களா

# கைக்கடிகாரம் 10

## ராண்டார்கை



வீற்கு வரும்போதெல்லாம் சாதாரண உடையில்தான் வருவான். ஆனால் அந்த ஆறடி உயரம்...முறுக்கு மீசை; வஸ்தாதைப் போன்ற உடல் அமைப்பு, நடக்கும் விதம்... இவையெல்லாம் வீரய்யன் ஒரு போலீஸ்காரன் என்பதைச் சற்றுத் தெளிவாகவே சூரிய குமாருக்கு எடுத்துக் காட்டிவிட்டன...

"என்ன சூரி, அப்படியே நின்னுட்டீங்க...?என்னாலெ இதெல்லாம் செய்ய முடியாதுன்னு நெனைக்கிறீங்களா...? சூரி, பொம்பளைங்களோடெ பலவீனங்களைப்பத்தித்தான் ஒங்களுக்குத் தெரியும். பலத்தப்பத்தி தெரியாதுன்னு நெனைக்கிறேன். ஓக் சூரி, நீங்க ஏது பெண்களோடெ பலவீனம்னு நெனைக்கிறீங்களோ அதேதான் அவுங்க பலமும் கூட. என் பேச்செல்லாம் வெறும் பயமுறுத்தல்னு மட்டும் நெனைக்காதீங்க..."

"நிர்மலா, நீ எதையாவது கன்னாபின்னான்னு பண்ணிட்டின்னா நா மட்டுமில்லே, ஒன் ஹஸ்பெண்ட் தியாகுவும் மாட்டிக்குவாரு. அத மறந்துடாதே..."

நிர்மலா லேசாகச் சிரித்தாள். தன் இரண்டு கைகளையும் உயரே தூக்கி பின்னால் மடித்துக் கொண்டு, நாற்காலியில் நன்றாகவே சாய்ந்து கொண்டாள்.

"சூரி, நா நெனைச்சதவிட நீங்க ரொம்பப் பெரிய முட்டாள்! யாரெ மாட்டி வெக்கணும்...எப்படி மாட்டி வெக்கணும்...மாட்டிக்கிட்டவனை எப்படி வெளியிலே கொண்டாரணும்... இது எல்லாமெ எனக்குத் தெரியும்...!"

"நிர்மலா, ஒனக்கு ஒன்னெப்பத்தி நெறைய நம்பிக்கெ இருக்கும் போலெருக்கு...ஆமா, இவ்வளவுக்கும் அந்த பாடி எங்கே இருக்கு? நீ அதெப்பத்திப் பேசாமெ..."

"சூரி, அது எங்கே இருக்கணுமோ அங்க இருக்கு. நா சொல்றபடி கேட்டீங்கன்னா அது உருத் தெரியாமெ மறைஞ்சு போயிடும். அந்தப் பாடி மறையறதுக்கு வெலை... இன்னொரு பாடி!"

சூரியகுமாரால் அன்று இரவு முழுவதும் தூங்க முடியவில்லை. அரை மணிக்கு ஒருமுறை படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொள்வான். பங்களாவுக்கு வெளியே காட்டு மரங்களுக்கிடையே நீண்ட நேரம் நடந்து பார்த்தான். தூக்கம் அவனை அடியோடு கைவிட்ட நிலை. உடல் களைப்பினால் தூக்கம் வருமோ என்ற எண்ணத்துடன் அம்பிகாவுடன் சரசமாடிப் பார்த்தான். மனநிலையும், உடல்நிலையும் ஒத்துவராமல் போகவே அந்த முயற்சியிலும் தோல்வி... அம்பிகாவும் தன்னால் ஆனதை உதவியாக அளித்தாள். தூக்கம் மட்டும் வரவில்லை...

அம்பிகாவிற்கு நிர்மலா தியாகராஜன் வீட்டில், தான் வேனில் உட்கார்ந்திருந்தபோது என்ன நடந்தது என்பது தெரியாது. அதைப் பற்றி சூரியகுமார் அவளிடம் எதுவும் பேசவில்லை. இருட்டில் இருவரும் அமைதியாகப் படுத்திருந்தபோது, அம்பிகா அதைப் பற்றி பிரஸ்தாபித்தாள். ஆனால் சூரியகுமார் அதற்கு இடம் கொடுக்காமல் கிள்ளி எறிந்து விட்டான். சற்று நேரத்தில் அம்பிகா லேசான குறட்டையோடு தூங்க ஆரம்பித்து விட்டாள்.

சூரியகுமார் படுக்கை அறையிலிருந்து மீண்டும் வெளியே வந்து நின்றான்.


சுகமான குளிர்காற்று. காட்டு மரக்கிளைகளில் இரவுநேர சல்லாபங்களினால் எழும்பி வரும் சுகமான ஒலி. இருட்டில், காட்டில் எங்கேயோ ஓலமிடும் மிருகங்களின் கூக்குரல். சாந்தம் தவழும் சூழ்நிலை. அதற்கு நடுவே சூரியகுமார் தூங்க முடியாமல், மன அமைதி இல்லாமல் தவிக்கும் நிலை...

தன் லேபில் இறந்துபோன கடுகர் மலைஜாதிக்காரனின் உடலை நிர்மலா எங்கேதான் ஒளித்து வைத்திருப்பாள்? காட்டில் கணவனுடன் தனியாக வாழும் ஒரு பெண் நிர்மலா. அவளுக்குப் பிணத்தைப் பணயமாக வைத்து விளையாடும் துணிச்சலா..? போலீஸ் ஹெட்கான்ஸ்டபிள் வீரய்யனுக்கும், நிர்மலாவுக்கும் என்ன தொடர்பு? தன் கணவனுக்கு நண்பனும், சமஅந்தஸ்தும் உள்ள ஒருவனை தன்னிடம் அப்படிப்பட்ட ஒரு 'பச்சையான' ஆசையை, உடல் வெறியை வெளியிடும் நிலையிலுள்ள நிர்மலாவுக்கு, வீரய்யன் நிச்சயமாகக் காதலனாகத்தான் இருக்க வேண்டும்! அதில் சந்தேகமேயில்லை. வீரய்யனின் உதவியில்லாமல் நிர்மலாவால் அந்தப் பிணத்தைவைத்துக் கொண்டு விளையாட முடியாது. அதிலும் சந்தேகமில்லை.

கணவன் தியாகராஜன்... காதலன் வீரய்யன்...! அப்படி இருக்கும்போது, நிர்மலாவுக்கு இப்படியோர் ஆசையா? ஒருவேளை நிர்மலா ஒரு 'நிம்ஃபோமேனியாக்'காக இருப்பாளோ!

**(இன்னும் வரும்)**

# ராண்டார்கை



# கருத்தடைமாய்

## 11

மறுநாள் மாலை நிர்மலா தியாகராஜன் படுக்கைஅறை! எல்லா ஜன்னல்களும்— கதவுகளும் அழுத்திச் சாத்தி மூடப்பட்டிருந்தன. சுவர் ஓரமாக தாழ்வான ஓர் இரட்டைக் கட்டில். அதன்மேல் ஆறு அங்குல உயரத்திற்கு ஃபோம் படுக்கை; படுக்கையின் ஒரு மூலையில் சூரியகுமார் உட்கார்ந்திருந்தான், அவன் உடலில் வியர்வைத் துளிகளைத் தவிர வேறு எந்தவிதமான ஆடையின் அடையாளங்களே இல்லை. நிர்மலா படுக்கை அறையில் அங்குமிங்குமாக உலாத்திக் கொண்டிருந்தாள். உள் பாவாடையைச் சற்று உயர்த்திக் கட்டியிருந்தாள். அவளுடைய மற்ற ஆடைகள் தரையில் பரிதாபமாகக் கிடந்தன.

''என்ன சூரி, ஒங்களைப் பாத்தா ஏதோ பேயறஞ்ச மாதிரி உக்காந்திருக்கீங்க...லைஃபே இப்பத்தான் என்ஜாய் பண்ணற ஆளா தெரியலயே... என்ன பேச்சு மூச்சைக் காணோம்...?''

சூரியகுமார் பதில் எதுவும் பேசாமல் கட்டிலின் ஓரத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்ன மிஸ்டர்...ஒங்க அம்பிகா ஒங்களைப் பத்திப் பெரிசா அலட்றாளே... எல்லாம் வாய்ப் பேச்சுத்தான் போலேயிருக்கு...''

சூரியகுமார் ஒரு விநாடி. தலையைத் தூக்கி நிர்மலாவை முறைத்துப் பார்த்தான்.

''என்ன மொறைக்கிறீங்க... ஒங்க இன்டிமேட் ஸீக்ரெட்ஸெல்லாம் எனக்கு முன்னாடியே தெரிஞ்சு போச்சுன்னு... மிஸ்டர் சூரி, உங்களுக்குப்பொம்பளைங்களப்பத்தி ஒண்ணும் தெரியாதுன்னு நெலக்கிறேன். நீங்க பெரிய டாக்டரா இருக்கலாம்...ரிசர்ச் ஜீனியஸா இருக்கலாம்... பட், சில மேட்டர்ஸ்லே நீங்க ஒரு பிக் ஸீரோ அப்படீங்கறது உங்களுக்குத் தெரியாத உண்மை...அஃப்

கோர்ஸ் ஐ டோண்ட் ப்ளேம் யூ. எங்க வீட்டுக்காரரும் அப்படித்தான். எல்லாம் தெரிஞ்சமாதிரி 'ஆ, ஊ'ன்னு வாரு. பட், பல விஷயங்கள்ல அவரும் பிக் ஸீரோதான்! என்னடாயிது ஹஸ் பெண்டைப் பத்தி இப்படிப்பட்ட நேரத்லே இவ்வளவு பிராங்கா பேசறேன்னு பாக்கறீங்களா...அதான் என் ஸ்பெஷாலிடி. சூரி, நா எதையுமே... எப்பவுமே ரொம்ப பிராங்கா பேசறவ. இந்த சதிசாவித்திரி, நல்லதங்காள் இமேஜெல்லாம் எனக்குப் பிடிக்காது. ஊரை ஏமாத்தறதுக்கு, உபன்யாசம் பண்றதுக்கு உதவியா இருக்கிற கதை... சூரி, நானும் அம்பிகாவும் தனியா மீட் பண்ணும்போது பல விஷயங்களப் பத்தி... முக்கியமா எங்க அந்தரங்க வாழ்க்கை விஷயங்களப் பத்தியெல்லாம் டிஸ்கஸ் பண்ணுவோம்...''

சூரியகுமார் படுக்கையில் கிடந்த டவலை எடுத்து தன் உடல் வியர்வையைத் துடைக்க ஆரம்பித்தான்.

''நிர்மலா, இந்த நான்ஸென்ஸெல்லாம் கேக்க எனக்கு விருப்பமில்லே. எனக்கு ஹெல்ப் பண்றதுக்கு ஒரு வெலெ கேட்டே; நா அதைக் குடுத்தேன். என்னுடைய பார்ட் ஆஃப் தி பார்கெய்னெ நா முடிச்சாச்சு. இப்ப நீ செய்ய வேண்டியதெ பண்ண ஆரம்பி; புரியுதா? இந்த ஸ்டுபிட் டாக்கெல்லாம் வேண்டாம். ஐ ஆம் நாட் இண்ட்ரஸ்டட் இன் லிஸனிங் டு திஸ் ஸார்ட் ஆஃப் டாக். நிர்மலா, ஒரு ரெஸ்பெக்டபிள் இண்டியன் லேடி பேசற பேச்சா இது. சீ...!''

''அட போய்யா... பண்ணலாம். பேசக் கூடாதா? இந்த மிடில் கிளாஸ் ஹிபோக்ரஸி இருக்கிறவரைக்கும் நம்ம நாடுஉருப்படாது...ஆம்பளேங்க ரெண்டு பேரு பேசினா அது ஸீரியஸ் சையன்டிஃபிக் டிஸ்கஷன்! பொம்பளேங்க பேசினா அசிங்கமான பேச்சு.அப்படித்தானே...''

''நிர்மலா, விஷயத்துக்கு வாயேன். பட்டப் பகல்லெ என்னெ பிடிச்சிண்டு வந்து இங்கே... ஆல்ரைட் நடந்ததப் பத்தி ஐ டோண்ட் வாண்ட் டு டிஸ்கஸ். நிர்மலா, ஒய் டோண்ட் யூ டிரஸ் அண்ட் பி டீஸண்ட்? இப்ப தியாகராஜன் இங்க வந்தா...''

நிர்மலா லேசாகச் சிரித்தாள்.

''அந்த ஆளு நாளை காலேலேதான் வருவாரு. ஏதோ காட்டுயானெ மதம் பிடிச்சு கலாட்டா பண்ணுதுன்னு நியூஸ் வந்துது. போயிருக்காரு. அவரெங்கே அவ்வளவு சீக்கிரம் வரப்போறாரு. நீங்க வேணும்னா நைட்டெல்லாம் இங்கேயே தங்கலாம். சாய்ஸ் ஈஸ் யுவர்ஸ்...!''

''நிர்மலா, நீ இவ்வளவு மட்டமானவள்னு நா எதிர்பாக்கலே... அம்பிகா கிட்ட ஏதோ போலீஸ் லெவல் டிஸ்கஷனுக்குப் போயிட்டு வர்றேன்னு சொல்லியிருக்கேன். இன்னும் கொஞ்சம் இருட்டிப் போச்சுன்னா அவ தேட ஆரம்பிச்சிடுவா. மொதல்ல இங்கே தான் வருவா.''

''என்ன சூரி, அவ்வளவு பயம் அவ ளப்பாத்தா? சொல்லப் போனா அவளும் என் மாதிரிதானே ஓங்களுக்கு. அவ பேரிலே பட்டாவா வெச்சிருக்கு? டோண்ட் வொர்ரி... ஓங்க வேன் இங்கே இருக்கு. அவ தனியா காட்டுலெ நடந்து வரமாட்டா; அதுலெயும் இருட்டுல.''

ஜன்னல் லேசாகத் தட்டப்படும் ஓசை கேட்டது. திடுக்கிட்டு சூரியகுமார் படுக்கையிலிருந்து எழுந்து குதித்து ஆடைகளைப் போட்டுக்கொள்ள ஆரம்பித்தான். அவன் கைவிரல்கள் நடுங்க ஆரம்பித்தன.

''என்ன சூரி, பயந்திட்டீங்களா...? டேக் இட் ஈஸி... என் வேலைக்காரி மல்லிகாதான் கூப்பிடறா. அவ அந்த மாதிரி ஜன்னலைத் தட்டினா யாரோ வந்திருக்காங்கன்னு அர்த்தம்...என் ஹஸ்பெண்ட் வந்தா வேன் உள்ளே வரும்போது ஒரு தினுசா குரல் கொடுப்பா. இப்படி ஒரு ஸீக்ரெட் கோட் எங்களுக்குள்ளே இருக்கு. நிர்மலாவெ என்னன்னு நெனச்சீங்க நீங்க. நீங்க படுக்கைலேயே ஒக்காருங்க.. நா இன்னும் டூ மினிட்ஸ்லே வர்ரேன்'' —பேசிக் கொண்டே நிர்மலா தன் ஆடைகளைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

பங்களாவின் பின் வராண்டாவில் வீரய்யன் நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்த்தவுடன் நிர்மலா வேகமாக நடக்க ஆரம்பித்தாள்.

''என்னடா வீரு, இந்த நேரத்துலே வந்தே! ஒன்னே பதினொரு மணிக்கு மேலேதானே வரச் சொன்னேன். ஏன் இப்ப வந்தே?''

''இல்லேம்மா, நீங்க வரச் சொன்னது கரெக்ட்டு. ரொம்ப முக்கியமான விஷயம். ஓடியாந்தேன்...''

''சொல்லித் தொலையேண்டா...''

வீரய்யன் கூறிய பதில் அவளை அப்படியே மலைக்க வைத்து விட்டது...

**(இன்னும் வரும்)**



**12**

''என்னடா சொல்றே நீ... வீரு. பெரிய ஹெட்கான்ஸ்டபிள் நீ... நக்ஸலைட்டெ பிடிக்கறதுக்காக ஒன்னெ இந்த நடுக் காட்டுலே இன்சார்ஜா போட்டிருக்காங்க. நீ என்னடான்னு ஒங்கிட்ட ஒப்படைச்ச பொணத்தைக் காணோம்னு சொல்றியே... நெசமாத்தான் சொல்றியா, இல்லே தண்ணி கிண்ணி போட்டுட்டு வந்து உளர்றியா? நீ சொல்றது நெசமா இருந்தா விஷயம் எவ்வளவு விபரீதமானதுன்னு ஒனக்குப் புரியுதில்லே... ஏண்டா... என்னடா முழிக்கிறே...?''

வீரய்யன் சற்றுநேரம் பேசாமலே தலையை தொங்கப் போட்டுக் கொண்டு தரையைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்னடா வீரு, பேச்சு மூச்செ காணோம்?''

''ஆமாம்மா, நா சொன்னது அவ்வளவும் நெசந்தான். அன்னிக்கு ராத்திரி நீங்க...அதான் அய்யா கேம்ப் போனபோது அந்த ஆண்டி வந்து சொன்னுனே, நா அப்பவே போய் அந்தப் பய பொணத்தை ஸ்டோர் ஷெட்டுலே வெச்சேம்மா...இன்னிக்கு ட்யூட்டி முடிஞ்ச ஒடனே நீங்க வாடான்னு சொன்னீங்க. அதுக்கு முன்னுடி அந்த பாடி எந்த நெலெலே இருக்குதோ? நாத்தம் கீத்தம் அடிக்க ஆரம்பிச்சு, ஃபாரெஸ்ட் டிபார்ட்மெண்ட் ஆளுங்களுக்கு விஷயம் தெரிஞ்சுபோயிடிச்சின்னு ரொம்ப டேஞ்சர் ஆயிடுமேன்னு ஷெட்டுலெ போய் எட்டிப் பாத்தேன். பாடியக் காணோம். என் ஹார்ட் அப்படியே நின்னுடிச்சு...''

''ஏண்டா வீரு, அந்த ஷெட் கதவு தொறந்தா கெடந்தது...?''

''ஃபாரெஸ்ட் டிபார்ட்மெண்ட் ஆளுங்க சாதாரணமா அதெப் பூட்டறதில்லேங்க. ரூல் பிரகாரம் பூட்டணும். ஷெட்டிலேருந்து ஏதாவது சாமான் எடுத்தா தொறக்கணும். ஆனு இந்த நடுக்காட்டுலே ரூல் பிரகாரம் யார் வேலெ செய்யருன்? அது தொறந்தே

தான் கெடக்கும். ஆள் நடமாட்டமே அந்தக் காட்டுப் பக்கம் இல்லேங் கறதுனுலெ அந்தப் பாடியெ அங்கே கொண்டு போய் அமுக்கினேன். அது அங்கிருந்து எப்படி கால்மொளச்சு போச்சுன்னே புரியலேம்மா... அதான் ஒடினே சொல்லிட்டுப் போலாம்னு ஓடியாந்தேன்...''

''போடா மடையா; ஒன் வீரமெல்லாம் எங்கிட்டதான் காட்டுவே நீ, அதுவும் இருட்டுல. ஒருபொணத்தை ஒன்னுலெ சமாளிக்க முடியலே.. ஒன்னெ எவன்டா ஹெட்கான்ஸ்டபிள் ஆக்கினுன். சீ... நீ ஒரே ஒரு வேலெக்குத் தாண்டா லாயக்கு. இப்ப என்ன செய்வயோ எனக்குத் தெரியாது. அந்த பாடி விஷயத்தை நீதான் சமாளிக்கணும். விஷயம் வெளிலே வந்தது நீதான் மாட்டிக்குவே. போலீஸ்காரங்க தான் கொன்னுட்டாங்கன்னு நா மல்லியெ சொல்லச் சொல்வேன். போ... போய் வேலெயெ கவனி. விஷயத்தை முடிக்காமெ வராதே...''

வீரய்யன் சற்று யோசித்தான். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவன்போல் நிர்மலாவை நிமிர்ந்து பார்த்தான். சில நொடிகள் தன் ஆள்காட்டி விரலினுல் தன் மீசையைத் தடவிக் கொண்டேயிருந்தான். நிர்மலா அவனை முறைத்துப் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

''டேய் வீரு, போய் வேலெயெ கவனி. அதெ ஸக்ஸஸ்ஃபுல்லா முடிக்கலேன்னு ஒன்னு நிச்சயம்; ஒன் மீசையை நீயே தடவிக்க வேண்டியதுதான்...''

வீரய்யன் ஓர் அசட்டுச் சிரிப்பை உதிர்த்தான்.

''நீங்க ஒண்ணும் கவலெப்படாதீங்க அம்மா. எங்கேபூடும் அந்த பாடி? நா கவனிச்சிக்கிறேன்...''

''சரி சரி, கிளம்புடா; ஒன் வீரத்தெ இதுலேயும் காட்டு போ...சும்மா பேசிக்கிட்டு நிக்காதே...''

வீரய்யன் அவளைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே பங்களாவை விட்டு வேகமாக வெளியே வந்தான். வெளியே கேட்டுக்கருகில் சில விநாடிகள் நின்று கையை ஆட்டிவிட்டு மீண்டும் நடந்தான். அவனை உன்னிப்பாக சமையலறை ஜன்னலுக்கருகே நின்று கொண்டு கவனித்துக் கொண்டிருந்தாள் மல்லிகா!


மல்லிகாவிற்கு ஒரே ஆச்சரியம். தன் எஜமானி அம்மாள் நிர்மலாவைச் சந்திக்க வரும் ஹெட்கான்ஸ்டபிள் வீரய்யன், என்றுமே அவ்வளவு வேகமாக திரும்பிச் சென்றதில்லை. அவன் வந்தான் என்றால், அதுவும் 'தொரை' பங்களாவில் இல்லாத நேரமாக இருந்தால், வீரய்யன் லேசில் வெளியே செல்ல மாட்டான். நிர்மலாவும் விடமாட்டாள். அது மல்லிகாவுக்குத் தெரிந்த பழக்கமான விஷயம். அப்படி இருக்கும் போது, இன்று மட்டும் வந்த சில நிமிடங்களிலேயே வீரய்யன் திரும்பிச் செல்வானேன்? ஆச்சரியம் பொங்கி ஆவலாக வழிய ஆரம்பித்தது... அப்படி அவன் செல்லக் காரணம் என்னவாக இருக்கும்?

மல்லிகாவுக்கு, நிர்மலாவின் படுக்கை அறையில் டாக்டர் சூரிய குமார் இருக்கிறன் என்பது தெரியும். இதற்கு முன்பு அவனை அந்த நிலைமையில் பார்த்ததில்லை. அவன் இருக்கும் போது வீரய்யன் வரக் காரணம்... தன் படுக்கை அறையில் ஒருவன் இருக்கும்போது மற்றொருவனை வரச் சொல்லும் பெண் அல்ல நிர்மலா என்று அவளுக்கு நன்றாகவே தெரியும். வீரய்யனும் சமயம் சந்தர்ப்பம் தெரியாமல் வரமாட்டான். அப்படியானால் அவன் இந்த நேரத்தில் வரக் காரணம்? ஒரு வேளை வீரய்யனுக்கு திடீரென்று... மல்லிகா தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

வீரய்யனைப்பற்றி நினைக்கும் போது அவள் உடல் சிலிர்த்தது! அவள் அணிந்திருந்த அழுக்குப்படர்ந்த ரவிக்கைக்குள் மார்பகங்கள் விம்மி, துணியோடு உராயத் தொடங்கின! வீரய்யன் அவ்வப்போது மல்லிகாவுடன் சரஸமாடுவான், முக்கியமாக நிர்மலா தன் கணவனுடன் வெளியே செல்லும்போது! வழக்கமாக அவன் எப்போது வந்தாலும் அவளுடன் சில நிமிடங்களாவது பேசுவான். சமையலறைக்குள் வந்து குடிக்க பிரிஜ்ஜிலிருந்து தண்ணீர் வேண்டுமென்று கேட்பான். கண்ணாடி தம்ளரை அவளிடமிருந்து வாங்கும்போதும், கொடுக்கும்போதும் தொட்டுத் தடவி விளையாடுவான். அது இருவருக்குமே பிடித்த பழக்கமான பொழுதுபோக்கு. அவன் பங்களாவுக்குள் வரும்போது அவள் எதிர்பார்த்து நிச்சயமாக நடக்கும் நிகழ்ச்சி. ஆனால் இன்று...வீரய்யன் வந்த சுவடு தெரியாமலேயே திரும்பிச் சென்ற காரணம்? அப்படி அவன் நடந்து கொள்ள ஏதோ ஒரு பலமான காரணம் இருக்கத்தான் வேண்டும். அது என்னவாக இருக்கும்?

**(இன்னும் வரும்)**

# கருத்துடைமரம்



## 13

அவளால் யோசித்துப் பார்க்க முடியவில்லை. அப்படி செய்யும் மனப்பக்குவமும் அவளுக்கில்லை.

தன் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்து அவள் ஆடுவாள், ஓடுவாள். அதுதான் அவள் வந்த வழி. அவள் வளர்ந்த சூழ்நிலையும்கூட. படுகர் மலைஜாதியினருக்கு எதைப் பற்றியுமே யோசித்து, ஆராய்ந்து பார்ப்பதற்கான நேரமேயிருக்காது. வயிற்றுப் பசியைத் தீர்க்க வழிதேடி அலைவதற்குத்தான் அவர்களுக்கு நேரம். வயிற்றுப் பசி அடங்கினால் அதற்குப் பிறகு உடற்பசியைத் தீர்த்துக் கொள்ள வழி தேடுவார்கள். இப்படி இரண்டு வகையான பசிகளைத் தீர்த்துக் கொள்வதுதான் அவர்களின் வாழ்க்கையின் குறிக்கோள்—லட்சியம் எல்லாம். மல்லிகா, யாரோ காட்டு இலாக்காவில் வேலை செய்பவனின் மூலமாக காட்டு பங்களாவில் சமையல்காரியாக அமைந்துவிட்டாள். அதனால் அவளுக்கு வயிற்றுப் பசியைப் பற்றிக் கவலை கிடையாது...

வீரய்யன் வந்து போன விஷயத்தைப்பற்றி எப்படியாவது தெரிந்து கொள்ள வேண்டுமென்று துடித்தாள். ஆனால் யாரைக் கேட்பது? நிர்மலாவை அதைப்பற்றிக் கேட்க முடியாது. கோபம் வந்தால் நிர்மலா, ஆணாக இருந்தாலும் கன்னத்தில் அறைந்து விடுவாள். காட்டு இலாக்கா கீழ்மட்ட சிப்பந்திகளை நிர்மலா கன்னத்தில் அறைவதைப் பலமுறை பார்த்திருக்கிறாள். ஒருமுறை நிர்மலா தொரையையே கன்னத்தில் அறைவதைக் கண்டதுண்டு. அப்படிப்பட்டவளிடமா இப்படி ஒரு கேள்வியைக் கேட்பது. நினைத்துப் பார்க்கும்போதே அவளுக்குக் கைகால்கள் நடுங்க ஆரம்பித்தன. அப்படியென்றால் யாரைக் கேட்பது?

வீரய்யனையே கேட்டால்...? மல்லிகாவை அவன் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டான். அவள் கொடுக்கும் சலுகைகள் பறிபோய் விடுமோ என்ற பயம் இருக்காதா அவனுக்கு! ஆமாம்; வீரய்யனையே அதைப்பற்றி கேட்டுவிடுவதுதான் நல்லது. வீரய்யன் தங்கும் கூடாரத்திற்கு வழி அவளுக்கு நன்றாகவே தெரியும். பலமுறை அவனைப் பார்ப்பதற்கு அவள் அங்கே சென்றிருக்கிறாள். உடனடியாக அங்கு சென்று, அதைப்பற்றி விசாரித்துவிடுவது என்று முடிவெடுத்தாள். நிர்மலாவிடம் சொல்லாமல் வெளியே செல்ல முடியாது. அப்படி ஒரு நிபந்தனை. சமையல் வேலைகளை முடித்த பிறகு, காட்டில் சுற்றிவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டுச் செல்வது அவளுக்கு வழக்கம், பழக்கம். அப்படி செய்யவேண்டுமென்று எண்ணிக் கொண்டு சமையல் வேலைகளை சீக்கிரமாக முடிக்க ஆரம்பித்தாள்...

சமையலறையின் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தாள் நிர்மலா. அவள் முடி அலங்கோலமாகச் சிதறிக் காணப்பட்டது. சோர்வின் அடையாளங்கள் அவள் முகத்தில்

அங்குமிங்கும் விளையாடிக் கொண்டிருந் தன.

''ஏண்டி மல்லி, மட்டன் சூப் வெக் கச் சொன்னேனே வெச்சியா...?''—தன் கை விரல்களினுல் முடியைக் கோதிக் கொண்டே பேசினுள் நிர்மலா.

மல்லிகா வேகமாகத் தலையை ஆட்டி ஞள்.

''டீ மல்லி, நீ ஒண்ணு பண்ணு. அந்தப் பெரிய எவர்சில்வர் தம்ளர்லே சூப்பெ ஊத்தி டாக்டர் ஐயாகிட்டக் குடு. அவர் ஹால் சோபாவிலே உட் கார்ந்திருக்கார் பாரு. தம்ளரை அவருகிட்டக் குடுத்துட்டு உடனே இங்கே வா. அவரெயே பாத்துண்டு இளிச்சிண்டு நிக்காதே...''

மல்லிகா மட்டன் சூப்பை எவர்சில் வர் தம்ளரில் ஊற்ற ஆரம்பித்தாள்.

''ஏம்மா, உங்களுக்கு சூப்பு...''

''நா இங்கியே சாப்பிடறேன். ஒன் ஞேடெ கொஞ்சம் பேசணும். சீக்கி ரமா வா...''

சூப்பை சூரியகுமாரிடம் கொடுத்து விட்டு மல்லிகா வேகமாகத் திரும்பி வந்தாள். சமையல் அறையில் நிர்மலா நகத்தைக் கடித்துக் கொண்டு அங்கு மிங்கும் நடந்து கொண்டிருந்தாள்.

''டீ மல்லி, ஒங்கிட்ட ஒரு விஷயம் சொல்லப் போறேன். கவனமா கேட் டுக்க. சொன்னபடி செஞ்சிடு.''

மல்லிகா தலையை ஆட்டிஞள்.

''டீ மல்லி, நீ முன்னே கூட்டிக் கிட்டு வந்தியே ஒங்க ஜாதி ஆளு... அதாண்டி புதுசா கல்யாணம் ஆனவன்.. அதமாதிரி இன்னொருத்தன் தேவை. தேடிப்பாத்து பிடிச்சிக்கிட்டு வா...''

# கங்கை அமரனுக்கு தெரியுமா,

கங்கை அமரன் அவர்களே! நீங்கள் தஞ்சைவாணனிடம் கோபப்பட்டு பிர யோஜனமில்லை. இளையராஜா இல்லை யென்ருல் உங்களை யாருக்கும் தெரி யாது. 'வாடி என் கப்பக்கிழங்கு,' 'என்ன பாட்டுப் பாட,' 'வாடா என் மச்சுகளா', 'மதனி மதனி' போன்ற இலக்கியத்தரம் வாய்ந்த பாடல்களை உங்களையன்றி யாராலும் திரையுல குக்குக் கொடுக்க முடியாதுதான்!

ஈரோடு-10, என். கல்யாண்குமார்.

கங்கை அமரனுக்கு வேண்டுமானுல் தஞ்சைவாணனைத் தெரியாமல் இருக்க லாம். இவர் பீல்டில் இல்லாதபோதே தஞ்சைவாணன் அவர்களை நாங்கள் நன்ருகத் தெரிந்து வைத்திருக்கிருேம்.

தஞ்சை-9, எஸ். கோபாலன்.



தஞ்சைவாணன் உங்களுக்கு முன்பே திரைப்படங்களில் பாடல்கள் எழுதிய வர். பெரியாரின் பகுத்தறிவுக் கொள் கைகளை ஏற்று நடந்து பெரியாரின் அன்பைப் பெற்றவர். காமராஜர், ஈ. வெ. கி சம்பத் போன்றவர்களுடன் பழகி அரசியல் அனுபவம் பெற்றவர். பாவேந்தர் பாரதிதாசனின் தொடர்பும் பெற்றவர்.

உயர உயரப் பறப்பதால் ஊர்க் குருவி பருந்தாகிவிட முடியாது என் பதை இனிமேலாவது கங்கை அமரன் உணர்ந்து, தம் கருத்துக்களைப் பொறுப் போடு சொல்லப் பழகிக் கொண்டால், 'என்ன பாட்டுப் பாட, என்ன தாளம் போட...?'' என்று அறிவுக் குழப்பம் ஏற்பட்டு, 'ஓரம்போ...ஓரம்போ' என்று தரத்தை விட்டு ஓரம்போகாமல் இருக்கலாம்.

சென்னை-35, சௌந்தர்யன்.

கங்கை அமரன் நேற்று பெய்த மழையில் இன்று பூத்த காளான். உயரத் தில் பறப்பதாக நினைத்துப் பேச வேண்டாம்.

இராமானுஜபுரம், கோவி. ராமு.

கங்கை அமரன் தன்னுடைய பழைய வாழ்வை மறந்து இப்படி ஆணவமாகப் பேசுவது மிகவும் கண்டிக்கத்தக்கது.

மதுரை-16, கே. பி. ராஜா.

''ஏம்மா, மொதல்லெ கூட்டியாந்த ...ன் என்ன ஆனுன்? இப்ப திடீர்னு இன்னொரு ஆள் வேணும்னு சொல்றீங் களே...எங்க கிராமத்து உள்ளே போனு மொதல்ல அதத்தானே கேப்பாங்க...''

''...மல்லி, ஸ்டுபிட்டா கேள்வி கேக் காதே. அதுக்கெல்லாம் பதில் சொல்ற மூடுலெ இல்லே நான். டாக்டருக்கு இன்னொரு ஆம்பிளே தேவை. ஐ மீன்.. ஒங்க ஜாதிலே புதுசா கல்யாணமான ...ன்...''

''மொத ஆளு என்ன ஆனுன்னு கேட்டா...?''

''சொன்னதைச் செய்டி மல்லி... இல் லேன்னு என்ன நடக்கும்னு எனக்கே தெரியாது. வீணு வம்புலே மாட்டிக் காதே. ராத்திரியே கிளம்பு. நீ காலேலே திரும்பி வந்தாப் போதும். போகும் போது ஒங்க வீட்டுக்கு என்ன தேவையோ அதெ எடுத்துக்கிட்டுப் போ...''

நிர்மலா சூப்பைக் குடிக்காமலேயே வெளியே சென்று விட்டாள்.

மல்லிகாவிற்கு வியர்க்கத் தொடங்கி யது... நிர்மலாவின் நடத்தையிலிருந்து, முக பாவங்களிலிருந்து ஏதோ எதிர் பாராது நடந்துவிட்டதுபோல் அவ ளுக்குத் தோன்றியது. அது எதுவாக இருக்கும்? அப்படி ஏதாவது நடந்திருந் தால் அதில் தனக்கு ஏதாவது கிடைக் குமா? அதைப்பற்றி யாரிடம் பேசுவது? தன் தலையைச் சொறிந்து கொண் டாள். அப்போது அவள் மனதில் தோன்றினுன் ஒருவன். நடுக்காட்டில் எதிர்பாராதவிதமாக அவள் சந்தித்த வன்...கயிலேபைரவன்!

**(இன்னும் வரும்)**

# கவிதை வாசனை..?

தமிழில் இலக்கியம் எம்.ஏ. பட்டம் பெற்ற அவரை — தமிழக அரசால் கலேமாமணி பட்டம் பெற்ற அவரை— பெரியாரின் இயக்கத்திலும், அதன்பின் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுட னும் இருந்து செயல்பட்ட அவரை— சிவாஜி கணேசன் நாடகக் கம்பெனியில் நிரந்தர எழுத்தாளராக இருந்து பாராட் டுப் பெற்ற தஞ்சைவாணனே யாரென்று கேட்கிறுர் கங்கை அமரன்?

கங்கை அமரனுக்கு சிறுவயசு. இதெல்லாம் தெரிந்திருக்க நியாய மில்லே.

**சென்னை-4, கோவை பாலகிருஷ்ணன்.**

சிறப்பான பாடல்களின் மூலம் என்னேப் போன்ருேரின் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ள திரு. கங்கை அமர னின் பதில் உண்மையில் வேதனேப்படக் கூடிய ஒன்று. இது உண்மையில் அறி யாமையா...? இல்லே...

**...வப்பம்பட்டு. பி. ஜா. ஏழுமலை.**

அமரர் கண்ணதாசனுக்குப் பிறகு, அவர் இடத்தைப் பூர்த்தி செய்ய ஒருவர் இருக்கிறுர் என்ருல் அவர் தஞ்சைவாணன் மட்டுமே என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**சென்னை-21, செ. பாஸ்கர்.**

கங்கை அமரன் தன்னே ஒரு 'இன்டர் நேஷனல்' பிகர் என்று நினைத்துக் கொண்டிருக்கிருரா என்ன..? இவர் தமிழ்த்திரையுலகைப் பற்றி கேள்விப் படுவதற்கு முன்பே அதில் உச்சாணிக் கொம்பில் புகழுடன் கொலுவீற்றிருந் தவர் திரு. தஞ்சைவாணன்.

**தஞ்சாவூர்-7. டாக்டர் தஞ்சை எஸ். கே. பெஞ்சமின்.**

'அடி வாடி என் கப்பங் கிழங்கே' போன்ற கொச்சைப் பாடல்களே (பாடல்களா அவை?) ஈவ் டீஸர்களுக்கு அர்ப்பணித்த நல்ல செயலே (?)த் தவிர வேறு என்ன சாதித்து விட்டார் கங்கை அமரன்?

**சென்னை-24, ராமாபுரம் சந்துரு.**




# கருத்தடை மரம் 14

அயலூர் தியாகராஜன் நடுக்காட்டில், ஒரு தேக்கு மரத்திற்கு அருகில் உட்கார்ந்திருந்தான். பாரெஸ்ட் டிபார்ட்மெண்ட் ஜீப் வேன், சற்று தூரத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. அவனுடன் வந்த பணியாட்கள் காட்டில் ஆங்காங்கே வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். காட்டு யானைகளின் கூட்டத்தைப்பற்றி எந்த விதமான தடயங்களும் இன்னும் கிடைக்கவில்லை. ஆனால் தியாகராஜன் அதைப்பற்றிச் சிந்திக்கவில்லை. சிந்திக்கும் நிலையிலும் இல்லை. காட்டு யானைகள் மேற்கிலிருக்கும் கேரளப் பகுதிகளிலிருந்து தண்ணீரைத் தேடி, ‘தேடி அலைந்தான்காட்டு’க்குள் நுழைவது அவனுக்குப் பழக்கமான விஷயம். ஆகையால் அதைப்பற்றி அவன் அதிகமாகக் கவலைப்பட நிர்பந்தம் இல்லை. கவலைப்படக்கூடிய நிலையிலும் இல்லை.

பேண்ட் பாக்கெட்டிலிருந்து சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தான். காற்று அதிகமாக இருந்ததால் மூன்று நான்குமுறை தன் சிகரெட் லைட்டரை உபயோகிக்க வேண்டியிருந்தது. புகையை உறிஞ்சிக் கொண்டே, லேசாக நாற்காலியில் பின்னால் சாய்ந்தான். அவன் காதுகளில் குளிர் காற்றின் சப்தஸ்வரங்கள்... இரவில் ஓங்கும் காட்டு மிருகங்களின் குரல்கள்... காதல் விளையாட்டு ரீங்காரங்கள்... இவைகளுக்கிடையே அவ்வப்போது மணியோசை. அந்த மணி ஓசைக்குக் காரணம் பாரெஸ்ட் டிபார்ட்மெண்டிற்குச் சொந்தமான யானைகள். அந்த யானைகளுக்கு ஒரு காலில் நீளமான இரும்புச் சங்கிலி கட்டப்பட்டிருக்கும். இருட்டிய உடனே யானைகளைக் காட்டில் உலாவ விட்டு விடுவார்கள். அவைகள் இரவு முழுவதும் தீனியைத் தேடிச் சுற்றித் திரியும். அவைகள் இருக்கும் இடத்தைத் தெரிந்து கொள்ளத்தான் காலில் நீளமான சங்கிலி. யானைகள் நடக்கும்போது சங்கிலிகளின் ஓசை, அவைகள் நடமாடும் பகுதியைத் தெரிந்து கொள்ள உபயோகமாக இருக்கும். அந்த ஓசையைத்தான் மணி ஓசை என்று காட்டில் இருப்பவர்கள் அழகாகச் சொல்வார்கள்...

தியாகராஜனின் மனதில் ஒரு புயலே வீசிக் கொண்டிருந்தது. அதற்குக் காரணம் அந்தக் கடுகர் மலைஜாதிக்காரனின் பிணம். பிணம் கிடைக்காமலிருந்தபோது ஒரு வகையான புயல் வீசி வாட்டியது. அதை அவன் ஆட்கள் கண்டுபிடித்த பிறகு ஒரு புதுவகையான புயல் உருவாகியது...மாரிமுத்து என்னும் பாரெஸ்ட் கார்ட், ஸ்டோர் ஷெட்டில் ஏதோ ஒரு வேலையாகப் போனபொழுது, அந்தப் பிணத்தைப் பார்த்து விட்டான். பயந்துபோய் அவன் ஓடிவந்து தியாகராஜனுக்குத் தகவலைத் தெரிவித்தான். செய்து கொண்டிருந்த வேலையை அப்படியே விட்டு விட்டு தியாகராஜன் ஓடிப்போய் பார்த்தான். அதே கடுகர் மலைஜாதிக்காரன் பிணம்தான். சந்தேகமேயில்லை. பிணம் லேசாக நாற்றம் அடிக்கத்

## ராண்டார்கை



தொடங்கிவிட்டது... உடனே தனக்கு மிகவும் நெருங்கிய ஆட்களை வரச் சொல்லி, பிணத்தை அங்கிருந்தெடுத்து காட்டின் மிகவும் அடர்த்தியான பிரதேசத்தில் கொண்டுபோய் குழிவெட்டிப் புதைத்து விடுமாறு ஆணை இட்டான். அந்த ஆளின் பிணம், மண்ணில் மறைந்தவுடன், அவன் மனதில் புயல் வீச ஆரம்பித்துவிட்டது. பிணத்தைப் பார்த்தபோது ஏற்படாத அதிர்ச்சி, பிணம் மறைந்தபின் ஏற்பட்டது...

அந்த வாலிபனின் பிணம், சூரிய குமாரின் நிமோஸா ப்ராஜெக்ட் ரிஸர்ச் லேபிலிருந்து மறையக் காரணம் எதுவாக இருக்கும்...? பிணத்தை எடுத்து மறைத்ததினால் யாருக்கு என்ன லாபம்? பிணத்தை லேபிலிருந்து திருடி எடுத்துச் சென்றவன் அதை எதற்காக ஸ்டோர் ஷெட்டில் ஒளித்து வைக்க வேண்டும்? ஒருவேளை லேபில் நடக்கும் ஆராய்ச்சி பற்றி வெளியே யாருக்காவது தெரிந்துவிட்டதோ...?அது யாராக இருக்கலாம்? அரசாங்க அதிகாரியான தன்னை, ரகசியமாக சட்டத்திற்குச் சற்று விரோதமாக நடந்ததற்காக யாராவது மாட்டிவைக்கப் பார்க்கிறார்களோ? அது யாராக இருக்கும்? ஒருவேளை... ஒருவேளை...ஒருவேளை ... கயிலைபைரவன் கும்பலுக்கு விஷயம் தெரிந்து, அவர்கள்...?

நினைத்துப் பார்க்கவே பயமாக இருந்தது. கயிலைபைரவனை தியாகராஜன் நேரில் பார்த்ததில்லை. மங்கலான ஒரு பழைய புகைப்படத்தில் அவன் உருவத்தைப் பார்த்திருக்கிறான். அதுவும் போலீஸ் ஃபைலில், அந்தப் படத்திலிருந்து பைரவனை இருட்டில் அடையாளம் தெரிந்துகொள்வது மிகவும் கடினம். அப்படி இருந்தது அந்தப் புகைப்படம். அந்தத் தீவிரவாதி எவ்வளவு பயங்கரமானவன், எவ்வளவு துணிச்சலானவன் என்பது தியாகராஜனுக்கு நன்றாகவே தெரியும். அரசுக்கு எதிராக, வன்முறையே வேதம் என்ற கொள்கை உள்ளவனுக்கு, ஓர் அரசு அதிகாரியை மாட்டி வைப்பதென்பது மிகவும் சாதாரண விஷயம். அப்படிப்பட்டவன் வாய்ப்பு கிடைத்தால் அதை நிச்சயமாக செய்தே தீருவான்!

கையிலிருந்த சிகரெட் எரிந்து புகைந்து அணைந்துவிட்டது. ரிஸர்ச் லேபில் நடக்கும் விஷயங்களைப்பற்றி கயிலைபைரவனுக்குத் தெரிந்திருக்கக் கூடும் என்ற எண்ணத்தைப் பற்றி மனதில் தோன்றும்போதே, தியாகராஜனுக்கு வியர்க்க ஆரம்பித்துவிட்டது. அரசாங்கத்தின் ஒத்துழைப்போடு பின்தங்கிய வகுப்பினரான கடுகர் ஜாதிக்காரர்கள், ஆராய்ச்சி கைப்பொருட்களாக மாற்றப்பட்டு வருகிறார்கள் என்று ஒரு தீவிரவாதிக்குத் தெரிந்துவிட்டால், என்ன நடக்கும் என்பதை எண்ணிப் பார்க்கும்போது குலை நடுங்க ஆரம்பித்தது. அதற்குப் பொறுப்பாளி தான்தான் என்று தெரிந்தால், நள்ளிரவில் காட்டுப் பங்களாவிற்கு வந்து, தன்னையும் — தன் மனைவி நிர்மலாவையும் இரக்கமின்றித் தன் துப்பாக்கிக்கு இரையாக்கி விடுவான் அவன். சந்தேகமில்லை!

அதைவிட பயங்கரமானது மற்றொன்று. நிர்மலா அழகி...ஆணின் உடல்உணர்ச்சிகளைப் பார்வையாலேயே பறித்து இழுக்கக் கூடியவள். அவள் தன் சொத்து. அவளுடைய அழகு, காதல் விளையாட்டுக்களில் அவள் காட்டும் ஆற்றல், எல்லாமே அவனுக்கு மட்டும்தான் சொந்தமானவை! அவனால் தான் அனுபவிக்கப்படவேண்டியவை. அப்படிப்பட்ட நிர்மலாவை, நடுக்காட்டில் பெண் வாடையே இல்லாமல் வருடக் கணக்காக ஒளிந்து ஒதுங்கி வாழும் ஆண்கள் பார்த்துவிட்டால்...அதை நினைத்துப் பார்க்கவே...

சிகரெட் துண்டை வீசி எறிந்தான். கேன்வாஸ் பொருத்தப்பட்ட நாற்காலியிலிருந்து எழுந்து நின்றான். கைக் கடியாரத்தைத் தன் கண்ணுக்கருகே எடுத்துச் சென்று உற்றுப் பார்த்தான். 3-42...இன்னும் சில மணிநேரங்களில் கீழ்வானம் சிவக்க ஆரம்பித்துவிடும். இரவு முழுவதும் தூக்கமில்லை. அதைவிட அதிகமாக மனதில் அடித்துக் கொண்டிருக்கும் புயல். வீடு திரும்பிய உடனே நாலு பெக் விஸ்கி அடித்து விட்டு நன்றாகத் தூங்க வேண்டும். அந்த முடிவோடு வண்டியை நோக்கி நடந்தான். வீட்டில் அவனுக்காகக் காத்துக் கிடக்கும் விஸ்கியைப் பற்றி நினைத்தவுடனே அவன் மனதில் மற்றொரு எண்ணம். சாதாரணமாக அவன் காலையில் விஸ்கி குடிப்பதில்லை. ஆனால் அன்று...

**(இன்னும் வரும்)**

தொ NOT FOR SALE ான்னவென்று
FAN MADE ONLY ் பக்கம் பார்க்க.

ராண்டார்கை

## 15

அம்பிகா படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். இன்னும் தூக்கத்தின் அணைப்பிலேயே அவள் இருந்தாலும், படுக்கை அறையில் அவள் தனியாகத்தான் இருக்கிறாள் என்பது அவள் மூளைக்குத் தெளிவாகவே எட்டியது. கண்களை மூடிக்கொண்டே படுக்கையின் மீதிப் பாதியைத் தடவினாள். ஆம்...சூரி இன்னும் திரும்பி வரவில்லை. படுக்கைக்கருகே இருந்த கடிகாரத்தில் மணியைப் பார்த்தாள். 3-50...முன்னாள் மாலை தியாகராஜனைப் பார்த்துப் பேசவேண்டும் என்று சொல்லிவிட்டுச் சென்ற சூரி, இன்னும் ஏன் திரும்பி வரவில்லை? கடுகர் ஜாதி ஆணின் பிணவிஷயம் முக்கியமானதுதான். அதைச் சமாளிப்பது என்பது சுலபம் இல்லாததுதான். இருந்தாலும் இரவு முழுவதும் நடுக்காட்டில், பங்களாவில் தன்னைத் தனியாக விட்டு விட்டுச் சென்ற சூரி, அவளைப்பற்றி நினைக்காமலேயா இருப்பான்? நகரங்களிலேயே தனியாக இருப்பதென்றால் அம்பிகாவுக்குப் பிடிக்காது. அதைப் பற்றி அவள் பலமுறை சூரியிடம் சொல்லியிருக்கிறாள். அப்படிப் பேசும் போதெல்லாம் அவளை அவன் கேலி செய்து கொண்டே இறுக்க அணைத்து, அவள் உடலில் தனக்குப் பிடித்தமான இடங்களைத்தேட ஆரம்பித்து விடுவான்! அப்படிப்பட்ட சூரி அவளை இரவுநேரத்தில் நடுக்காட்டில் தனியாக...

கண்களைக் கசக்கிக் கொண்டே படுக்கையிலிருந்து எழுந்து நின்றாள். அவள் அணிந்திருந்த மாக்ஸி சரிந்து அவள் கால்களைச் சுற்றிச் சரணடைந்தது. சாதாரணமாக அவளுக்குத் தன் உடல் அழகை, அங்க அமைப்புகளை ஆசையோடு பார்த்து ரசிப்பதில் அதிக ஆர்வம். ஆனால் அன்று அவளுக்கு அதில் ஈடுபாடு கொள்ள முடியவில்லை. அப்படி இருந்தது அவள் மனநிலை...

ஒருவேளை மலைஜாதிக்காரனின் பிண

# குருத்தணைட மரம்



விஷயம் தகராறில் முடிந்துவிட்டதோ..? அப்படி ஒரு விபரீதம் நடந்தால் என்னவாகும்..? எண்ணிப்பார்ப்பதற்கே அவள் மனம் அஞ்சியது. சூரி வம்பில் மாட்டிக் கொண்டால் தானும்...சட்டப்படி அந்த ஆளின் மரணம் கொலையாகும். அந்த அளவிற்கு அவளுக்கும் சட்டம் தெரியும்...சூரியும் அவளும் கொலை வழக்கில்... அவளுக்கு அழுகையே வந்து விட்டது. நிர்வாணமாகவே படுக்கையில் விழுந்து விம்மி விம்மி அழத் தொடங்கினாள். தனக்குத் துணையாக இருக்க வேண்டிய நேரத்தில், இடத்தில்லாமல், சூரி இப்போது எங்கே...?

* * *

"நிர்மலா, மணி நாலு ஆச்சு. தியாகு திரும்பி வர நேரம்... என்னை எழுந்து போக விடேன்..."

சூரியகுமார் எழுந்திருக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டே கேட்டான். ஆனால் நிர்மலா அதற்கெல்லாம் செவி சாய்க்கும் நிலையிலில்லை. சூரியகுமாரிடமிருந்த மோகஉணர்ச்சிகள் கனிந்து பழமாகி, பழம் பக்குவமாகும் நிலையை நோக்கித் தவழ்ந்து கொண்டிருந்தது. அப்படிப்பட்ட சுகமான சூழ்நிலையில் அவள் சூரியகுமாரின் வெறும் வார்த்தைகளைக் கேட்கும் நிலையிலில்லை.

"சூரி, இந்த பேச்சிலேயே பாதி நேரம் வேஸ்ட் பண்றீங்க... அதை என்னிக்கி நிறுத்துறீங்களோ அன்னிக்கித்தான் நா உருப்படுவேன்... பெரிய லையர்ஸ் ஜீனியஸ்... இந்த சின்ன உண்மையை ஒங்களாலே புரிஞ்சிக்க முடியலியே..."

நிர்மலா இருகால்களையும் பின்னி இன்னும் இறுக்க அணைத்தாள்!

"நிர்மலா, தியாகு வர நேரமாச்சுன்னு சொன்னேன். நீ.என்ன விளையாடறியே...என்னை விடு..."

"தியாகு வந்தா என்னவாம்! ஹஸ்பெண்டுனுலே, மண்டுதான்...இந்த ரூம்லே, இப்பவே வந்தாக்கூட என்ன நடக்குதுன்னு நா சொன்னாதான் அவனுக்குப் புரியும்... அதுதான் ஹஸ்பெண்டுக்கு அடையாளம்...ஒருத்தி தன் பாய்ஃபிரண்டோட படுக்கையிலே இருந்தாளாம். அந்த நேரத்துலே ஹஸ்பெண்ட் உள்ளே வந்துட்டான். உடனே ஒய்ஃபைப் பாத்து நீங்க ரெண்டு பேரும் என்ன பண்ணிக்கிட்டிருக்கீங்கன்னு கேட்டானாம். அந்தப் பொம்பளை சிரிச்சிக்கிட்டே லவ்வர்கிட்ட சொன்னாளாம்! "மிஸ்டர், என் ஹஸ்பெண்ட் ஒரு மண்டு'ன்னு சொன்னேனே... சரியா இருக்கா! அந்த டைப்தான் ஒங்கவயலூர் தியாகராஜனும்..."


திடீரென்று நிர்மலா சிரிப்பை இழுத்து நிறுத்தினாள். அதற்குக் காரணம், அவள் காதில் விழுந்த ஓசை. தன் கணவனின் ஜீப் வேன் காம்பௌண்டிற்குள் நுழைந்தபோது ஏற்பட்ட என்ஜினின் ஓசை!

நிர்மலா சற்றுநேரம் பயத்தால் ஆடிவிட்டாள். தியாகராஜன் இப்படி எதிர்பாராத விதமாக என்றுமே திரும்பி வந்ததில்லை. அதிலும் இருட்டில். வேலை சம்பந்தமாக காட்டுக்குள் சென்றால், வேலை முடிந்து விட்டாலும் வானம் நன்றாக வெளுத்த பிறகுதான் அவன் வீடு திரும்புவான். அதிலும் முக்கியமாக காட்டு யானைகளைத் துரத்திப் போவதென்றால் இப்படி திடீரென்று திரும்புவது சுலபமானதல்ல. அப்படி இருக்கும் போது, தன் கணவன் ஏன் இப்படி திடீரென்று திரும்பி வரவேண்டும்? அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

ஒருவேளை சூரியகுமார் தன் படுக்கை அறையில் இருக்கிறான் என்பதைப்பற்றித் தெரிந்துவிட்டதோ...? அப்படித் தெரிய நியாயமில்லையே... தியாகராஜனுக்கு நிர்மலாவின் காதல் பந்தாட்டங்களைப் பற்றி ஒன்றும் தெரியாது. திருமணமானதிலிருந்து நிர்மலாவுக்குப் பலவகையான ஆண் தொடர்புகள் உண்டு. ஒருவனுக்கு ஒருத்தி என்ற கொள்கையில் அவளுக்கு நம்பிக்கையே கிடையாது. நம்பிக்கை உள்ளவர்களைக் கண்டாலும் பிடிக்காது. அப்படிப்பட்டவர்கள் இந்த உலகில் ஏழாம் நூற்றாண்டிற்குப் பிறகு வாழத் தகுதியற்றவர்கள் என்ற எண்ணம் அவளுக்கு! தன் கண்ணுக்குப் பிடித்த, உடலுக்குச் சுகமளிக்கும் ஆண் யாராக இருந்தாலும், தடையின்றி தட்டி அழைப்பாள்... 'தேடி அலைந்தான் காட்டி'ற்கு வந்த பிறகு, விரய்யனை தன் வசமாக்கிக் கொண்டாள்.

தன் அந்தரங்க அரங்க விளையாட்டுகளைப் பற்றி தியாகராஜனுக்குத் தெரியாமல், சந்தேகமே வராத அளவிற்கு நடந்து கொள்வாள். அவ்வளவு சாமர்த்தியம் அவளுக்கு. அப்படிப்பட்டவள் தன் கணவன் எதிர்பாராத விதமாக வீடு திரும்பி விட்டான் என்று தெரிந்து கொண்டவுடனே, என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தாள்... **(இன்னும் வரும்)**

# கருத்தடை மரம்



## 16

ஜீப்வேனின் சத்தம் அதிகரிக்க ஆரம்பித்தது. அவசர அவசரமாக சூரியகுமாரின் இடுப்பில் இடித்து எழுப்பினள்...

''சூரி,சூரி...சிக்கிரமா எழுந்திருங்க... அவர் வந்துட்டாரு. வேன் சத்தம் கேக்குது...''

சூரியகுமார் விழுந்தடித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான். இருட்டில் தன் ஆடைகளைத் தேடினன்...

''நிர்மலா, கொஞ்சம் லைட் போடேன்...என் பேண்ட் எங்கிருக்குன்னே தெரியலே...''

''ஒங்களுக்கு ஏதாவது அறிவு இருக்கா? என் ஹஸ்பெண்ட் வந்துகிட்டிருக்காருன்னு சொல்றேன். நீங்க பேண்ட்ட காணும்... லைட் போடுங்கறீங்களே...''

''நா அப்பவே போறேன்னேன். கேட்டியா? இரு, இருன்னு... என் பேண்ட்டெ...''

''சூரி, ஒங்க பேண்ட்டெ பத்தி டிஸ்கஸ் பண்றதுக்கு இதுவா நேரம்? அவர் உள்ளே வந்துட்டார்ன என்ன நடக்கும், தெரியுமா? அவர்கிட்டெ டபுள் பேரல் கன் இருக்கு.''

''இந்தக் கன்னெப் பத்தி நேத்து ராத்திரி சொல்லலேயே... நிர்மலா அந்தப் பக்கம் இருக்கா பாரேன்...''

''சிக்கிரம்... பேண்ட்டோடெ பொறந்த மாதிரி பேசறீங்களே..கமான், கமான், க்விக். பாத்ரூமுக்கு அந்தப் பக்கம் ஒரு கதவு இருக்கு. அது தோட்டத்துலெ கொண்டுபோய் விடும். அப்படியே நீங்க வெளியே போயிடலாம். சிக்கிரம்...''

''பேண்ட் இல்லாமயா...என் வேன் வேறெ பின்னடி நிக்குது. எப்படி நா அதுலெ ஏறி ஸ்டார்ட் பண்ணி...''

''நீங்க மொதல்லெ இங்கிருந்து கிளம்புங்க...''

வாசலில் ஜீப்வேன் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

''அய்யய்யோ... அவரு வாசல்வரைக்கும் வந்தாச்சு. கதவு தட்டுவாரு...நா போய் ஆகணும். கமான், என் பின்னடியே வாங்க...''

நிர்மலா சூரியகுமாரின் கையைப் பிடித்துத் தரதரவென்று படுக்கை அறையை விட்டு இழுத்துச் சென்றாள்... அவனுக்கு இடுப்பு மேலேதான் ஆடை. அதைப்பற்றியெல்லாம் கவலைப்படும் படியான மனநிலையில் அவள் இல்லை. இருவரும் பாத்ரூமிற்குள் நுழைந்தார்கள்...அதற்கு இரண்டு கதவுகள்... இரண்டாவது கதவு, வெளியிலிருந்து பாத்ரூமைச் சுத்தம் செய்யும் வேலைக்காரன் வருவதற்காக வெள்ளைக்காரன் ஏற்படுத்தியது. பாத்ரூமை சுத்தம் செய்யும் ஆள் வீட்டின் உள்ளே இருந்து

ராண்டார்கை

வருவது வெள்ளைக்காரர்களுக்குப் பிடிக்கவில்லை. அந்த ஒரே காரணத்திற்காகத்தான் இரண்டாவது கதவு பொருத்தப்பட்டது. அது இப்போது நிர்மலாவுக்குச் சாதகமாக இருந்தது.

அந்தக் கதவை இருட்டில் நிர்மலாவால் சுலபமாகத் திறக்க முடியவில்லை. சூரியகுமாரின் கையைப் பிடித்திழுத்து தாழ்ப்பாளின்மேல் வைத்தாள்.

''சூரி, சீக்கிரமா தெறங்க. என்னாலெ முடியலே...''

''என்ன நிர்மலா, என்னப் போய், தெறக்கச் சொல்றே. என் கைகால்லாம் உதறுது. தியாகராஜன் டபுள் பேரல் கன் வேறே வெச்சிருக்காருங்கறே...''

''சூரி, ஷட் யுவர் ப்ளடி மௌத் அண்டு ஓபன் தி டோர்...''

வாசற்கதவு தட்டப்படும் ஓசை கேட்டது.

''அய்யய்யோ, நா சொன்னா கேட்டீங்களா? அவர் கதவு தட்டறாரு. நா போயாகணும். தட்டற வேகத்தெப் பாத்தா ரொம்பக் கோபமா இருக்கார் போலேருக்கு...''

''என்ன நிர்மலா இப்படிப் பயமுறுத்தறே...?''

எப்படியோ ஒரு வழியாகக் கதவைத் திறந்து விட்டான் சூரியகுமார். அழுத்தமாக அவன் பின்புறத்தில் கையை வைத்து வெளியே தள்ளிவிட்டாள் நிர்மலா.


''நிர்மலா, என் பேண்ட்...!''

''சீக்கிரமா போங்க. இருக்கறது ஒரே பேண்ட் மாதிரி பேசிக்கிட்டிருக்கீங்களே...''




டீச்சர்: உங்கம்மா உனக்கு ஒரு பெரிய மாம்பழமும் சின்ன மாம்பழமும் கொடுக்கிறாங்க. உன் சகோதரனுக்கு ஒண்ணு கொடுக்கணும்னு எதைக் கொடுப்பே?

மாணவி: சகோதரன் பெரியவனா, சின்னவனா டீச்சர்?



நர்ஸ்: நோயாளிகள் நான் சொல்வதைக் கேட்பதில்லை. டாக்டர் கேட்பதை நான் சொல்லும்படி இல்லை!

அவன் பதிலை எதிர்பார்க்காமல் கதவைச் சாத்திவிட்டாள்.

''நிர்மலா, என்ன கதவைத் திறக்கறதுக்கு இவ்வளவு நேரம்? தூங்கிட்டியா... சாதாரணமா கேட்லெ வண்டிச் சத்தம் கேட்டவுடனேயே கதவைத் திறந்துகிட்டு வந்து நிப்பே. இன்னிக்கு மட்டும் என்ன...புதுசா இருக்கே...அவ்வளவு தூக்கமா...?''

தியாகராஜன் கொட்டாவி விட்டுக்கொண்டே கேட்டான். ஹாலில் மங்கலான ஒரு விளக்கை எரியவிட்டாள் நிர்மலா. காலை நீட்டிக்கொண்டு பிரம்பு நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து கொண்டு, அளவான அந்த வெளிச்சத்தில் அவளை உற்றுப் பார்த்தான் தியாகராஜன். நிர்மலா சற்றுநேரம் யோசித்தாள். பிறகு தன் முடியை விரல்களை உள்ளே விட்டு தூக்கிவிட்டாள்.

''அது ஒரு கதை...அத நீங்க பூரா கேட்டுட்டுத்தான் தூங்கணும்...''

அவள் தன் கணவனுக்கு மிக அருகில் உட்கார்ந்து கொண்டு, அவன் நெற்றியை வருட ஆரம்பித்தாள்!

''நிர்மலா, நா ரொம்ப டயர்டா இருக்கேன். கதை கேக்கற மூட்ல இல்லே. ஒரு ஸ்மால் அடிச்சிட்டு படுக்கலாம்னு இருக்கேன். ப்ரேக்ஃபாஸ்டுக்கு அப்பறம் ஒன் கதையெ கேக்கறேன். ஆளவிடு'' - நிர்மலாவின் விரல்கள் கணவனின் நெற்றியை விட்டு தாடையோடு விளையாட ஆரம்பித்தன.

''நீங்க கேட்டுத்தாங்க ஆகணும். ரொம்ப முக்கியமானது.''

**(இன்னும் வரும்)**



17

ராணிபார்கை

"நீ புடிச்சா விடமாட்டியே..."

"தூங்கிட்டியான்னு கேட்டீங்களே, அதப்பத்திதான்... தூங்கலான்னு ரெடி பண்ணிட்டேன். ஒங்களப் பார்க்கணும்னு சூரி வந்தாரு..."

"என்னது சூரியா? நான்தான் காம்ப் போகப்போறேன்னு அவனுக்குத் தெரியுமே...?"

"அவருக்கு ஏதோ ப்ராப்ளம். வந்தாரு. நீங்க இல்லேன்ன உடனே கொஞ்சம் டிஸ்ஸப்பாயிண்ட்டா ஃபீல் பண்ணுரு..அப்பறம் காண்டாக்ட் பண்றேன்னு கிளம்பினுரு... அவர் வேன் டிரபிள் குடுக்க ஆரம்பிச்சிது. என்னன்னமோ பண்ணிப் பாத்தாரு. கிளம்பலே. இங்கே பின்னுடி தள்ளிவிட்டுட்டு நடந்தே போனுரு இருட்டுலே..."

"ஹௌ ஸேட்!"

நிர்மலா தனக்குள் சிரித்துக் கொண்டாள்... கணவனை ஏமாற்றுவது என்பது எவ்வளவு சுலபமானது என்ற எண்ணம் அவளுக்கு என்றுமே உண்டு. 'உன் கணவன் ஒரு முழுமுட்டாள்! இல்லையென்றால் அவன் உன்னை மணந்து கொள்வானு!' — இப்படி ஒரு புதுமொழியை மாணவியாக இருந்தபோது படித்திருக்கிருள். அப்போது அது ஓர் அறுவை ஜோக் என்ற எண்ணம்தான் அவளுக்கு. வயலூர் தியாகராஜனைத் திருமணம் செய்து கொண்ட பின் அந்த வரிகளில் எத்தனை பெரிய தத்துவமே அடங்கியிருக்கிறது என்பது புரிந்தது...!

"அப்புறம் என்ன ஆச்சு தெரியுங்களா...?"

"நிர்மலா, இன்னும் பாக்கி இருக்கா...?"

"கதையே இனிமேத்தான் ஆரம்பம்... சூரி போனுரா... நா படுக்கலாம்னு போனேன். தோட்டத்துலே வெளிப்பக்கம் யாரோ நடக்கற மாதிரி சலசலப்பு சத்தம் கேட்டுது... டார்ச் லைட் அடிச்சுப் பாத்தேன். ரெண்டு கடுகர் ஜாதிப் பசங்க ஓடறதப் பாத்தேன்."

"என்னது, கடுகரா? ம்... ம்... ஒருவேளை நம்ம மல்லியோட பாய்பிரெண்ட்ஸ்ஸா இருக்கலாம்..."

நிர்மலாவின் கை அவன் சட்டைக்குள் நுழைந்தது.

''அதான் இல்லே... ஏன் தெரியுமா? மல்லியே இங்கே இல்லே. அவ அம்மாவப் பாக்கணும்னு போயிட்டா... எனக்கென்னமோ அந்தப்பாடிசம்பந்தமா இருக்குமோன்னு தோணுது..''

''அப்படியா... ஐ ஸீ. டோண்ட் வொர்ரி நிர்மலா. நா ப்ரேக்ஃபாஸ்ட்டுக்கப்பறம் சூரியைப் பாத்துட்டு வர்றேன். ஒன் கையை எடு. நா ஒரு ஸ்மால் அடிச்சிட்டுப் படுக்கறேன். நீயும் வந்து தூங்கு... ஸ்லீப் டிஸ்டர்ப் ஆச்சுன்னு சொன்னியே...''

நிர்மலா தனக்குள் சிரித்துக் கொண்டாள்!

அம்பிகாவால் ஓர் இடத்தில் உட்கார முடியவில்லை. கட்டிலில் தனியாகப் படுத்திருப்பது என்பது நினைத்துப் பார்க்கக் கூட முடியாத விஷயமாகப் போய் விட்டது. பின் இரவின் ஒவ்வொரு விநாடியும் அவளைப் பின்னிக் கொண்டு நகர மறுப்பது போல் ஒரு பிரமை அவள் மனதில். படுக்கை அறையிலேயே அங்குமிங்குமாக உலாவினாள்... அடிக்கொரு தரம் மூடப்பட்டிருந்த ஜன்னல் கண்ணாடி வழியாக வெளியே எட்டிப் பார்ப்பாள்... சூரி வருவது தெரிகிறதா என்று. காட்டுப் பங்களாவில் ஜன்னல்களுக்கெல்லாம் கண்ணாடியைத் தவிர சல்லடையைப் போன்ற இரும்புக் கம்பி அமைப்பு உண்டு. கொசுக்கள், காட்டில் கண்ணுக்குத் தெரியாமல் காற்றில் பறக்கும் பூச்சிகள், ஜன்னல் கம்பிகளுக்கிடையே நுழைந்து வரக்கூடிய சிறிய ஜந்துகள் இவைகளையெல்லாம் தடுப்பதற்காகவே இந்தச் சல்லடைக் கம்பிகள் அமைப்பு. வழக்கமாக அம்பிகா, ஜன்னல் கண்ணாடிகளைத் திறந்தே வைத்திருப்பாள். ஆனால் அன்று இரவு அவளை விழுங்கிக் கொண்டிருந்த பயம், திகில், கண்ணாடி ஜன்னலை அழுத்தி மூடும்படிச் செய்து விட்டது.

சூரிக்கு காட்டில் ஏதாவது விபத்து ஏற்பட்டிருக்குமோ என்ற எண்ணமும் அவளை அலச ஆரம்பித்தது. ஆராய்ச்சிக்காகக் காட்டில் வசிக்கத் தொடங்கியவன் சூரி. வாழ்க்கை முழுவதும் சென்னை போன்ற நகரப் பகுதிகளில் வாழ்ந்தவன். அப்படிப்பட்டவனுக்குத் 'தேடி அலைந்தான் காட்டை'ப் பற்றி, அதில் இரவு நேரங்களில் பதுங்கியிருக்கும் பயங்கரங்களைப் பற்றி ஒன்றும் தெரியாது.

அதனால் ஏதாவது விபத்தில் சிக்கியிருப்பானோ என்ற பயம்! அம்பிகாவுக்கு வியர்க்கத் தொடங்கியது. ரிசர்ச் லேபரட்டரிக்கருகில் காவலாகத் தூங்கிக் கொண்டிருக்கும் ஆண்டியைப் போய் எழுப்பலாமா என்று நினைத்தாள். படுக்கை அறையிலிருந்து அந்த இடத்திற்குத் தனியாக இருட்டில் செல்வதென்றால் அவளிருக்கும் நிலையில் சிரமமாகத்தான் தெரியும்... அப்படி ஆண்டியை எழுப்பினால் அவனிடம் என்னவென்று சொல்வது? அவன் ஒரு சாதாரண வேலைக்காரன். அவன் விஷயத்தைத் தவறாகப் புரிந்து கொண்டு ஃபாரஸ்ட் டிபார்ட்மெண்டில் உள்ள ஆட்களிடம் வம்பு பேச ஆரம்பித்து விட்டால்... விளைவு அசிங்கமாகவும் உருவெடுக்கலாம்... சூரியின் மதிப்பிற்கும் கௌரவத்திற்கும் எதிராகவும் தோற்றமளிக்கலாம். அம்பிகாவிற்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை... படுக்கை அறைக் கதவு லேசாகத் தட்டப்படும் ஓசை! விழுந்தடித்துக் கொண்டு அம்பிகா தன்னைச் சுற்றியிருக்கும் உலகத்திற்குத் திரும்பினாள்... அவள் மனதை அழுத்திக் கொண்டிருந்த சுமை இறங்கி உருள-ஆரம்பித்தது. அப்பாடா... சூரிதான் வருகிறார் போலும்... திரும்பி வந்தவன் எந்த நிலையில் இருக்கிறான் என்ற ஆவலோடு, முகத்தில் அரும்பி இருந்த வியர்வைத் துளிகளை உள்ளங்கைகளினால் துடைத்துக் கொண்டே ஓடினாள். கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தாள்... அங்கு யாரும் இல்லை. கதவைத் தட்டியது யார்?

**(இன்னும் வரும்)**



# கருத்தடை மரம்

## 18

**ப**யம், திகில் இரண்டும் கை கோர்த்துக் கொண்டு அவளை மீண்டும் கவ்வ ஆரம்பித்தன...

திடீரென்று அவள் காதில் யாரோ அவசர அவசரமாக நடந்து வரும் காலடியோசை... திடீரென்று படுக்கை அறைக் கதவைச் சாத்திவிட்டு ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். தூரத்தில் யாரோ நடந்து வருவது தெரிந்தது. கண்களைக் கசக்கிக் கொண்டு மீண்டும் உன்னிப்பாகக் கவனித்தாள். நடந்து வரும் ஆள் ஆண்டி!

சூரி, தன் பங்களாவுக்குள்ளேயே பதுங்கிப் பதுங்கித் திருடனைப்போல் நுழைய ஆரம்பித்தான். இரவு தூங்கும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னும் சில மணி நேரங்களில் சூரியன் அட்டகாசத்தோடு பவனி வர ஆரம்பித்து விடுவான். அப்படி எதுவும் நடப்பதற்குள், யார் கண்ணிலும் படாமல் உள்ளே நுழைந்துவிட வேண்டும். தான் செய்யும் ஆராய்ச்சி — உலகின் ஜனப்பெருக்கை நிச்சயமாகத் தடுக்கக் கூடிய ஒரு மருந்தைக் கண்டுபிடிக்க அவன் செய்யும் முயற்சி. அதில் வரக் கூடிய இன்னல்கள்... எதிர்ப்புகள்... இவைகளுக்கெல்லாம் மேலோங்கி நின்றது, அவன் உள்ளே யார் கண்ணிலும் படாமல் செல்ல வேண்டிய காரியம்! இடுப்புக்குக் கீழே ஆடையின்றி இருக்கும் நிலையில் அம்பிகா அவனைப் பார்த்துவிட்டால் புதுவிதமான பிரச்சினைகள் அவனை எட்டுத் திக்குகளிலிருந்தும் தாக்க ஆரம்பித்து விடும். சூரி ஒரு மருத்துவ விஞ்ஞானி மட்டும்தான். கதை எழுதுபவனோ; திரிப்பவனோ அல்ல. அப்படி அவன் அந்த வகையில் முயற்சி செய்து பார்த்தாலும் அம்பிகா நிச்சயமாக நம்ப

ராண்டார்கை

மாட்டாள்.

அவன் அடிமேல் அடி வைத்து ரிசர்ச் லேபை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தான். அதற்குள் அதே காம்பௌண்டில், சற்று தூரத்திலிருக்கும் அவன் பங்களாவின் ஹாலில் விளக்கு எரிவது தெரிந்தது. ஒரு வினாடி அப்படியே நின்று விட்டான். ஹாலில் விளக்கு எரிவானேன்? அம்பிகா தூங்காமல் ஹாலில்தான் இருக்கிறாள் என்பது நிச்சயம். அவள் தனியாகப் படுக்கை அறையைவிட்டு வெளியே வரமாட்டாள், அதுவும் இந்த நேரத்தில்—இப்படிப்பட்ட நிலைமையில்! படுக்கை அறைக்கு அடுத்தாற்போல் பாத்ரூமிற்குச் செல்வதென்றால் அவனைத் துணைக்கு இழுப்பாள். அவ்வளவு பயம் அவளுக்கு. முக்கியமாக இரவில். அப்படிப்பட்டவள் ஹாலில் விளக்கை ஏற்றிவிட்டு இருக்கக் காரணம்? ஒருவேளை யாராவது அவளுடன் ஹாலில் இருக்கிறார்களோ...? அது யாராக இருக்கக் கூடும்? அதுவும் இந்த வேளையில்...! அவனுக்குத் தலையைச் சுற்ற ஆரம்பித்தது.

ஹாலில் என்ன நடக்கிறது என்று எழுந்து ஓடி விவரம் தெரிந்து கொள்ள முடியாத அரை நிர்வாண நிலை. ஒருவேளை யாராவது அவள் தனியாக இருப்பது அறிந்து பயமுறுத்திக் கதவைத் திறக்கச் செய்து, உள்ளே நுழைந்து அம்பிகாவை...

தான் இருக்கும் நிலையை மறந்து வேகமாக நடக்க ஆரம்பித்தான்... சற்று தூரம் சென்றபின் ஆண்டி கதவுக்கு வெளியே நிற்பது தெளிவாகத் தெரிந்தது. ஆண்டி எதற்காக அங்கு வந்தான்? அதுவும் இந்த வேளையில்? ஒரு வேளை... சே..! என்ன கீழ்த்தரமான யோசனை? இருக்காது... அம்பிகா அழைக்காமல் ஆண்டி வந்திருக்கமாட்டான். ஒருவேளை அம்பிகா தனியாக இருக்க பயந்து துணைக்கு அழைத்திருப்பாளோ..? அப்படித்தான் இருக்க வேண்டும். அப்படியானால் ஆண்டி அங்கிருந்து நகர மாட்டான். ஹாலில் எரியும் விளக்கு... உள்ளே தனியாக காதலி அம்பிகா... கதவுக்கு அருகே காவற்காரன் ஆண்டி... எப்படி உள்ளே போவது...? இந்த நிர்வாணத்திற்கு என்ன நிவாரணம்?

''என்ன ஆண்டி, நீயா கதவைத் தட்டினே?''

''இல்லையேம்மா... ஏதோ சத்தம் கேட்டுச்சு. எழுந்து ஒக்காந்தேன். ஒங்க பங்களாப் பக்கம் ஏதோ கதவு தட்டற மாதிரி மறுபடியும் சத்தம் கேட்டுச்சு. அதான் பாத்துட்டுப் போலாம்னு வந்தேன்.''

அம்பிகாவுக்குக் கைகால் நடுங்க ஆரம்பித்தது. கதவைத் தட்டியது யார்? எதற்காக? சூரியோ இன்னும் திரும்பி வரவில்லை... அப்படியென்றால் கதவைத் தட்டியது நிச்சயமாக சூரியாக இருக்க முடியாது. அப்படி என்றால் அது யார்?

''என்ன ஆண்டி, என்ன சொல்றே நீ? எனக்கு ஒண்ணுமே புரியலெயே...!''

''எனக்குந்தாம்மா... ஐயா தூங்கிக்கிட்டிருக்காரா? பாவம் சாரு...ரொம்ப டயர்டுபோல இருக்கு, அதான் அவரு எழுந்திருக்கவேயில்லே...''

பதிலெதுவும் கூறாமல் அம்பிகா தலையை மட்டும் பலமாக ஆட்டினாள்.

''அப்ப ஒண்ணு பண்றேம்மா; நம்ம பங்களாவெ ஒரு ரவுண்டு சுத்திட்டு வரேன். நீங்க கதவைச் சாத்திட்டுப் போய்ப் படுங்க.''

அம்பிகா சற்று யோசித்தாள். தனியாக இருப்பது அவளுக்கு நினைத்துக் கூட பார்க்கமுடியாத நிலை. அப்படி ஒரு பயம் அவள் மனதில்.

''இரு ஆண்டி, நானும் ஒன்னோட வரேன்.''

ஆண்டி ஆச்சரியத்தோடு அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

''பரவாயில்லே ஆண்டி! இந்த நேரத்துலே பங்களாவை விட்டு வெளியே போனதே இல்லே. எப்படி இருக்குன்னு பாப்பமே...''

கதவை மூடிக்கொண்டு இருவரும் வெளியே நடந்தார்கள்.

சூரிக்கு நிவாரணம் கிடைத்து விட்டது!

**(இன்னும் வரும்)**

COMICS PDF TIMES

# கருத்தடை மரம்

## ராண்டார்கை

## 19

சூரி ரிசர்ச் லேபுக்குப் பக்கத்தில் அமைக்கப்பட்ட சிறிய ஆபீஸ் ரூமில் தனியாக உட்கார்ந்திருந்தான். அறை சிறியதாக இருந்தாலும் அழகாகவும், ரசனையோடும் அமைக்கப்பட்டிருந்தது. ஆராய்ச்சிக்குத் தேவையான ஆங்கிலப் புத்தகங்கள், மேல்நாட்டிலிருந்து சூரிக்கென்றே பிரத்தியேகமாக வரவழைக்கப்பட்ட கருவிகள், பொருட்கள் இவைகளெல்லாம் கண்ணாடி, ஸ்டீல் பீரோக்களில் வைக்கப்பட்டிருந்தன. காட்டில் காற்றுக்கு வேலி இல்லாததால் அந்த அறையில் ஏர் கண்டிஷனரை அமைக்கத் தேவையில்லாமல் போய்விட்டது. ஒரு மூலையில் ஜன்னலுக்கருகே விசாலமான பலகை மேஜை. அதற்கருகே ஒரு சுழல் நாற்காலியில் சூரி உட்கார்ந்திருந்தான். மேஜையின்மேல் அவன் கைக்கருகே ஒரு தடியான ஆராய்ச்சிக் குறிப்புப் புத்தகம். அதில் அவன் ஆராய்ச்சிக்குச் சம்பந்தப்பட்ட குறிப்புகள், யோசனைகள், தன் மனத்திற்குள் எழும்பும் சந்தேகங்கள், கேள்விக்குறிகள், இவைகளையெல்லாம் எழுதி வைத்துக்கொள்வான். ஆராய்ச்சி வேலைகளை ஆரம்பிப்பதற்குமுன் ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரமாவது குறிப்புப் புத்தகத்தோடு உட்காருவான், அதில் எழுதி வைத்ததைப்பற்றித் தீவிரமாக யோசிப்பான்.

அன்று அவனால் வழக்கம்போல் அந்த அளவிற்கு யோசனை செய்யமுடியவில்லை. கடந்த சில நாட்களில் நடந்த சம்பவங்கள் அவன் மனதில் திரைப்படத்தில் வரும் பிளாஷ்பேக் காட்சியைப்போல் ஓடிக் கொண்டிருந்தன. புயலுக்குப்பின் அமைதியென்ற சூழ்நிலையில் அவன் இருந்தாலும், தன் மனத்திரையில் பிளாஷ்பேக் காட்சியைத் தவிர்க்க முடியவில்லை. சம்பவங்கள் பயங்கரமானதாக இருந்தபோதிலும் அவைகளை மனத்திரையில் காணும்போது ஒரு வகையான சுவை இருப்பது போல அவனுக்குத் தோன்றியது...

அரை நிர்வாணத்தோடு அம்பிகா, ஆண்டி — அவர்களின் பார்வையின் எந்தப் பக்கத்திற்கும் எட்டாமல் பங்களாவிற்குள் நுழைய முடிந்ததை மனத்திரையில் பார்க்கும்போது, அவனுக்குச் சிரிப்பு வந்து விட்டது. கல்லூரி மாணவனாக இருந்தபோது சென்னை சினிமா தியேட்டர்களில் பார்த்த ஆங்கில நகைச்சுவைப் படங்கள்... அவைகளில் நடித்த லாரல் அண்டு ஹார்டி போன்றவர்களின் திறமையான நடிப்பு..இவைகளெல்லாம் அவன் மனதில் மீண்டும் மலர்ந்தன. முக்கியமாக அவன் பார்த்த லாரல் அண்டு ஹார்டி படத்திலிருந்து ஒரு காட்சி, அவன்மனத்திரையில்'சூப்பர்இம்போஸ்' செய்ததுபோல மேலோங்கிக் காணப்பட்டது.

லாரலும் ஹார்டியும் இரண்டு பொல்லாத பெண்களை மனைவியாக்கிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வோர் இரவும் இருவரும் மனைவிமார்களை வீட்டில் தனியாக விட்டு விட்டுச் செல்வதை இரண்டு பெண்களும் பலமாக ஆட்சேபித்தார்கள். ஆனால், லாரலும் ஹார்டியும் அதையெல்லாம் சட்டை செய்யவில்லை. ஒருநாள் வாய்ச்சண்டை எல்லையை மீறி, வழிந்து ஓடும் நிலையை எட்டி விட்டது. இரு ஆண்களும் பெண்களைக் கீழே தள்ளிவிட்டு வெளியேறுகிறார்கள். பெண்கள் பொங்கி வரும் கோபத்தில் ஆளுக்கொரு துப்பாக்கியைக் கையில் எடுத்துக்கொண்டு கணவர்களைத் துரத்துகிறார்கள்... லாரலும் ஹார்டியும் ஒரு பெரிய கட்டடத்திற்கருகே ஓடுகிறார்கள்... அந்தக் கட்டடத்தில் பல குடித்தனங்கள். அங்கு புகுந்துகொண்டு தப்ப முடியுமா என்று அவர்கள் எண்ணிப் பார்க்கும்போது இரண்டு பெண்களும் இவர்களை நோக்கிச் சுடுகிறார்கள். அப்போது அந்தக் கட்டடத்திலிருந்த ஒவ்வொரு ஜன்னலிலிருந்தும், அரை, முக்கால், முழு நிர்வாண நிலையில் இருந்த ஆண்கள் குதித்து ஓடுகிறார்கள்.

சூரி விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்து விட்டான். ஏறத்தாழ அவனும் அப்படிப்பட்ட ஒரு நிலையில்தான் அந்த இரவு நிர்மலாவின் வீட்டில் இருந்தான். ஒருவேளை தியாகராஜன் தன்னிடமிருந்த 'டபுள் பேரல் கன்'னால் எதையோ நோக்கிச் சுட்டிருந்தாலும் பாத்ரூம் கதவைப்பெயர்த்துக் கொண்டு ஓடியிருப்பான்! யார் செய்த புண்ணியமோ, பாபமோ; தியாகராஜனுக்கு உண்மை தெரியாமல் போய்விட்டது. இந்தச் சம்பவம் நடந்த மறுநாள் காலை வேனை ஓட்டிக்கொண்டு தன் பங்களாவில்விட்ட போது அவன் நன்றாகவே பேசினான்.

அவன் மனதில் சந்தேகத்தின் வாடையே இருந்ததாகத் தெரியவில்லை. தன்னைப் பார்க்க வந்தபோது வேன் தகராறு செய்து நின்று விட்டதே என்பதைப் பற்றியே கவலையோடு பேசினான் தியாக ராஜன். அந்த நிர்மலாதான் எவ்வளவு கெட்டிக்காரி... எத்தனை சாமர்த்தியம்! இல்லாவிட்டால் தியாகராஜனோடு அவளும் வருவாளா...! வேனைப் பற்றிப் பேசும்போது அவளால் சிரிக்காமல் எப்படி இருக்க முடிந்தது? அது போதாதென்று விடைபெற்றுப் போவதற்கு முன்பு தாழ்ந்த குரலில் அவனிடம் அவள் சொன்ன வார்த்தைகள்: ''அடுத்த தடவை வரும்போது இரண்டு மூணு பேண்டோட வாங்க. ஒன்னோடெ வந்து நிக்காதீங்க. அப்படி ஒங்களுக்குத் தைரியமில்லேன்னா, இரண்டு மூன்று பேண்ட் கொடுங்க. நானே வெச்சிக்கிறேன்... ஆபத்துக்கு ஒதவும்...''

சூரி மீண்டும் சிரிக்க ஆரம்பித்து விட்டான். பாவம், தியாகராஜன் எவ்வளவு நல்லவன்! நிமோஸா ஆராய்ச்சிக்குத் தேவையான மற்றொரு கடுகர் ஜாதி ஆளையும் ஏற்பாடு செய்துவிட்டான். மல்லிகா வழியாக ஓர் ஆளை ஏற்பாடு செய்வதில் காலதாமதம் இருப்பதுபோல தியாகராஜனுக்குத் தெரிய வந்தது. அதைத் தவிர்க்க அவன் வேறு வழியாக ஒருவனை மறு நாள் காலை ரிசர்ச்லேபிற்கு வர ஏற்பாடு செய்தான். அந்த ஆளை ஆண்டி அழைத்துவர ஏற்பாடு செய்திருந்தான்.

ரிசர்ச் லேபின் மேஜையின்மேல் இறந்து போன கடுகர் ஜாதி ஆளைப் பற்றி இனி கவலைப்பட வேண்டாம் என்று சொல்லி, சூரியின் முதுகைத் தட்டிக் கொடுத்தான் தியாகராஜன்.

இரண்டாவது ஆள் லேபிற்கு வந்து சேர்ந்தவுடன் வேலையைத் தொடங்கி விட வேண்டும். நிமோஸின் எண்ணெயை, வரும் ஆளின் உடலில் ஏற்றிய பிறகு மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். முதல் ஆள் எதற்காக இறந்து போனான் என்ற காரணம் பிடிபடவில்லை. உடலை பரிசோதனை செய்து, சாவிற்குக் காரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற எண்ணம் ஈடேறாமலேயே போய்விட்டது. உடல் மாயமாய் மறைந்து விட்டது. இரண்டாவது ஆள் விஷயத்திலாவதுஅசம்பாவிதம் எதுவும் நடக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.... அது எப்படி?

**(இன்னும் வரும்)**

COMICS PDF TIMES



NOT FOR SALE
FAN MADE ONLY



# கருத்தடை மரம்

ராண்டார்கை

## 20

மல்லிகா சமையல் அறையில் நின்று கொண்டிருந்தாள். பங்களாவில் அந்த நேரத்தில் அவளைத் தவிர வேறு யாருமில்லை. தியாகராஜனும், நிர்மலாவும் பகல் உணவை முடித்துவிட்டு ஜீப் வேனில் எங்கேயோ வெளியே சென்று விட்டார்கள். அன்று, அவள் மனதில் அடித்துக் கொண்டிருந்த அலைகள்:..

கயிலை பைரவனைச் சந்திக்க அவள் செய்த முயற்சிகள் பலன் தரவில்லை. முதல் முறை சென்றபோது அந்த ரகசிய இடத்தில் யாருமே இல்லை. மிகவும் சிரமப்பட்டுத் தன் எஜமானிக்குத் தெரியாமல் ஒரு கதையைச் சொல்லி பைரவனைத் தேடி அலைந்தாள். அலைச்சல் தான் மிச்சம். அந்த ரகசிய இடத்தில் பைரவனும், அவன் சகாக்களும் ஒளிந்து வாழ்ந்ததற்கான எந்தவிதமான அறிகுறிகளும் தென்படவில்லை. காட்டில் தனியாகத் திரும்பி வரும்போது மிகவும் இருட்டிவிட்டது. அந்தப் பகுதியில் சாதாரணமாக ஜன நடமாட்டம் என்பதே இருக்காது. காட்டு இலாகா ஆட்களே அங்கு நடமாடப் பயப்படுவார்கள். செந்நாய்கள் கூட்டம் கூட்டமாக அந்தப் பகுதியில் அதிகமாகச் சுற்றிக் கொண்டிருக்கும். செந்நாய்கள், நாய் இனமாக இருந்தாலும் புலியைவிட மிகவும் கொடுமையானவை. அவற்றுக்கு மோப்பச் சக்தியும் மிகவும் அதிகம். அவற்றிடம் சிக்கினால் தப்பவே முடியாது. ஒருமுறை சில ஆண்டுகளுக்குமுன் அவளும் இரண்டு கடுகர் ஜாதிப் பெண்களும் காட்டில் வந்து கொண்டிருந்தார்கள். அப்போது அவள் காதில் பயங்கரமான சத்தங்கள்... காட்டிலேயே பிறந்து வளர்ந்ததால், அந்தச் சத்தத்திற்குக் காரணம் செந்நாய்கள்தான் என்று தெரிந்துவிட்டது. மூன்று பெண்களும் அலறி அடித்துக்கொண்டு ஓடினார்கள். ஆனால் ஒருத்தி மட்டும் தப்ப முடியவில்லை. செந்நாய்களிடம் சிக்கிய அந்தப் பெண்ணின் அலங்கோலமான அலறல்கள்... 'காப்பாற்று, காப்பாற்று' என்று கூவியபடியே அவள் கிழிக்கப்பட்டு மடிந்த விதம்... இன்றைக்கும் அவளால் அந்தச் சம்பவத்தை மறக்க முடியவில்லை. அந்த நினைவு மீண்டும் மனதில் தோன்றியவுடனே பசி என்ற உணர்வே போய்விட்டது.

வாசற்கதவு தட்டப்படும் சத்தம்... உடனே ஓடிச் சென்று கதவைத் திறந்தாள். வீரய்யன் போலீஸ் உடையில் நின்று கொண்டிருந்தான். மல்லிகா சற்று அதிகமாகவே சிரித்தாள். வழக்கத்திற்கு மாறாக வீரய்யன் சிரிக்கவே இல்லை.

''மல்லிகா, உன்னோட கொஞ்சம் பேசணும்.''

''இது என்னங்க புதுசா பேசறீங்க? வாங்க உள்ளே... ஐயாவும் அம்மாவும் எங்கேயோ வெளியே போயிருக்காங்க. நான் ஒருத்திதான் இருக்கேன்... வாங்க உள்ளே...''

மீண்டும் கலகலவென்று சிரித்தாள்.

''டீ மல்லிகா,சிரிக்காதே. நான் இப்ப இங்கே வந்த விஷயம் வேறே!''

''என்னங்க, ஓங்க பேச்சே புது மாதிரியா இருக்கு?''

''ஷட் அப்...''

மீசையைத் தடவிக் கொண்டே வீரய்யன் உள்ளே நுழைந்தான். கதவைச் சாத்தும் சத்தம் சற்று அதிக மாகவே கேட்டது.

சூரி ரிஸர்ச் லேபை பலமுறை சுற்றி நடந்து கொண்டிருந்தான். அவன் மனதில் பல வகையான எண்ண அலை கள்... இரண்டாவது கடுகர் ஜாதி ஆண், லேபுக்குள்ளே மேசையின் மேல் கட்டப்பட்டு கிடந்தான். சூரி அவனுக்கு நிமோஸீன் எண்ணெயைத் தொடைக் கருகில் இன்ஜெக்ட் செய்தான்.அதற்குப் பிறகு அவன் உடல் நிலையை பல முறை பரிசோதிக்க ஆரம்பித்தான். அரை மணிக்கு ஒரு முறை அந்தப் பரிசோதனை நடந்தது. விவரங்களை அம்பிகா ஒரு புத்தகத்தில் எழுதி வைத்துக் கொண்டி ருந்தாள். உடல் வெப்பம்... இரத்த அழுத்தம்... கண்களின் சலனங்கள்... இப்படிப் பல. இந்த ஆளும் இறந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தோடு, சூரி மிகவும் கவனமாகச் செயலாற்றிக் கொண்டிருந்தான். இவனும் செத்து விட்டால் தன் ஆராய்ச்சி மண்ணில் கலந்துவிடும். அதை சூரியால் தாங்கிக் கொள்ளவே முடியாது...

கதவைத் திறந்து கொண்டு அம்பிகா கையில் புத்தகத்துடன் வெளியே வந் தாள். அவள் முகத்தில் ஆங்காங்கே வியர்வைத் துளிகள். தன் புடவையால் முகத்தை ஒற்றி துடைத்துக் கொண் டாள்.

''என்ன அம்பா...ஹௌ இஸ் ஹி?''

''ஹி ஸீம்ஸ் டு பி ஓகே... இப்பத் தான் பல்ஸ் ரேட்டெ செக் பண்ணி னேன். ஸெவன்டிபைவ்ல ஸ்டெடியா இருக்கு...''

''குட்... ஆமா இப்போ அவன் என்ன பண்றான்?''

''ஸ்லீப்பிங். அதான் நான் வெளியே வந்தேன்... ஆண்டி இஸ் கீப்பிங் எ வாட்ச்.''

''அம்பா, இந்த ஆளை இங்கே வெச் சிருக்கக் கூடாது. யு நோ வாட் ஹாப் பண்ட் லாஸ்ட் டைம்? பாடியே காணும போயிடிச்சு... ஈவன் டு டே வீ நோ நதிங் அபௌட் இட். ஸோ இந்த தடவை இந்த ஆளை நம்ம லேப்லெ வெச்சிக்கிறது ரொம்ப ரிஸ்கி. அதனாலே இவனை தியாகராஜன் பங்களாவிலே ஒளிச்சி வைக்கலாம்னு ஐடியா. அங்கே இருந்தா திஸ் மேன் வில் பி ஸேப்! மல்லிகாவும் இவனைப் பார்த்துக்குவா... இவனுக்கு அவ கம்பெனி... அவளுக்கு இவன் கம்பெனி! நோ பிராப்ளம்! அப்படியே நம்ம இன்ஜெக்ஷன் எப்படி வேல செய்யுதுன்னு டு ஸம் எக்ஸ்டன்ட் கண்டுபிடிக்கலாம்!''—சூரி லேசாகச் சிரித் தான்.

''சூரி... சரியா புரியலியே...''

''சரியான மண்டு நீ... யூ ஸீ, மல்லி காவும் இந்த ஆளும் கூடவே இருப் பாங்க... அதனலெ சும்மா இருக்க மாட்டாங்க...''

''ஐ ஸீ... நீங்க அதைச் சொல்றீங் களா...? இப்போ புரியுது... புரியுது!''

அம்பிகா சிரிக்க ஆரம்பித்தாள்.

''அம்பா, எப்படி நம்ம ஐடியா?''

''பிரமாதம்... நோ டௌட்ஸ்...''

''அம்பா, ஆப்டர் லஞ்ச் நான் போய் வயலூர் தியாகராஜனை மீட் பண்ணி இந்த ஐடியாவ பத்தி டிஸ்கஸ் பண்ணப் போறேன்... ஆப்டவர்ட்ஸ் இந்த... ஆளை அங்கே டெஸ்பாட்ச் பண்றோம். நம்ம எக்ஸ்பரிமெண்ட் எப்படி வேலை செய்யுதுன்னு தெரிஞ்சிக்கலாம்...''

''சூரி, காட்டு பங்களாவிலே நாம இல்லாதபோது ஏதாவது நடந்தா?''

''வாட் டு யூ மீன்?''

''அங்கே இந்த ஆளு இருக்கப் போறான்... நம்ம ரெண்டு பேரும் இங்கே... ஸப்போஸ் ஸம்திங் கோஸ் ராங் வித் தட் மேன்,அப்போ எப்படி?''-சூரி சற்று நேரம் பேசாமலே யோசித் தான்... மீண்டும் நடக்க ஆரம்பித் தான்... அம்பிகாவும் அவனுடன் நடந் தாள். ஒரு முறை பங்களாவைச் சுற்றி வந்தார்கள்...

**(இன்னும் வரும்)**

# கருத்தடை மரம்

ராண்டார்கை

## 21

மல்லிகா மலைத்து நின்று விட்டாள். வாயைத் திறக்க முடியாத அளவிற்கு அவள் உதடுகள் பயத்தால் ஒட்டிக் கொண்டு விட்டன. சிரித்து, சிரிக்க வைத்துப் பேசும் வீரய்யன், இப்போது அவளை மிரட்டலுக்குமேல் மிரட்டலாக வாரி எறிந்து தள்ளினன் — இன்னும் தள்ளிக் கொண்டிருந்தான்...

''இதோ பாருமே கடைசி தடவையா சொல்றேன்... நான் யாருன்னு உனக்கு கரெக்டா தெரியாது. இந்தக் காட்லே எந்த மூலேலே எது நடந்தாலும் என் காதுலே உழும். என் கண்லே படும். மல்லி, நீ அன்னிக்கி அந்த ஆளு... அதான்மே, அந்தப் பைரவன்... அவன், அவன்கும்பல் ஒளிஞ்சிட்டிருந்தாங்களே... அந்த எடத்துக்கு நீ வந்து போனதா எனக்கு இன்பர்மேஷன் கெடச்சிது... மரியாதையா சொல்லு. உன்னே யார் அங்கே அனுப்பிச்சது? ஒனக்கும் அந்தக் கும்பலுக்கும் என்ன சம்பந்தம்? நீ அங்கே யாரை பார்த்தே?''

''எனக்கு ஒண்ணுமே தெரியாதுய்யா. நீ நம்புனு நம்பு, நம்பாக்காட்டி போ!''

''நான் எங்கேயும்போமாட்டேன்னே! ஒன் வாய்லேருந்து உண்மைய கக்க வெக்கிறவரைக்கும் டின் கட்டிடுவேன். நீ இந்த ஊட்லே வேலே பார்க்றே, இந்த ஐயா ஊட்டு உப்பே தின்றே... நீ போய் இப்படி செஞ்சியானு, நான் சும்மாஉடமாட்டேன்மே..என் கேள்விக் கெல்லாம் டக்கு டக்குன்னு பதில் சொல்லு. இல்லேன்னு நடக்கற கதையே வேறே... அந்த அளவுக்குப் பீஸ் பீஸ்ஸா கைட்டிடுவேன்... சொல்லப்போனு ஒங்க ஜாதிக்காரங் களையே க்ளோஸ் பண்ணிடுவேன்...''

மல்லிகா மார்பிலும் வாயிலும் அடித்துக் கொண்டு அழ ஆரம்பித்து விட்டாள். அவள் நடுங்கிக் கொண்டு அழுவதையும் பொருட்படுத்தாமல் வீரய்யன் அவள் முடியைப் பலமாக இழுத்து உலுக்கினன். தன் பலத்தை எல்லாம் அவள் முடியின்மேல் காட்டத் தொடங்கினன். சில நொடிகளில் அவள் அழுகை நின்றது. நினைவு தப்பியது.

சூரிக்கு ஒரே அதிர்ச்சி! மல்லிகா அந்த வீட்டிலிருந்து எங்கேயோ சென்றுவிட்டாள் என்று அம்பிகா அவனிடம் சொன்னபோது, அவனல் நம்பவே முடியவில்லை. இரண்டாவது கடுகர் ஜாதி ஆளை பாதுகாக்க அவன் போட்ட திட்டம் எல்லாம் தவிடு பொடி ஆகிவிட்டது. மல்லிகா மாய மாக மறைந்து விட்டாள் என்பதற்கான காரணத்தை அவனல் யோசித்துப் பார்க்க முடியவில்லை. மல்லிகாவே காட்டுப் பங்களாவை விட்டு வெளியே சென்றுவிட்டதால், அந்தக் கடுகர் ஜாதி ஆளை அங்கு அனுப்புவதில் எந்தவித மான உபயோகமும் இல்லை. அவனை ரிசர்ச் லேபில் வைத்திருப்பதும் உசிதமாகத் தென்படவில்லை. அப்படி என்றல் அவனை என்ன செய்வது...? பலமுறை யோசித்து பார்த்து விட்டான். ஆனல் அந்த கேள்விக்குறி அவன் முன்னல் இன்னும் நிமிர்ந்து நடை போட ஆரம்பித்து விட்டது...

கேள்விக்குப் பதில் கடைசியில் அம்பிகாவிடமிருந்துதான் கிடைத்தது. அந்த ஆளை 'தேடிஅலேந்தான் காட்டில்' விட்டுவிடுவது என்ற முடிவை அவள் சூரியிடம் எடுத்துச் சொன்னள். சூரிக்கு அந்த முடிவு அவ்வளவு பிடித்த மாக இல்லாவிட்டாலும், அதை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறுவழி தெரிய வில்லை. அவள் முடிவை ஏற்றுக் கொண்டு செயல்பட ஆரம்பித்தான்...

இரண்டு நாட்கள் வேகமாக ஓடி மறைந்து விட்டன. சூரியின் மனதில் தன் ஆராய்ச்சியைப் பற்றிக் கவலை வளர ஆரம்பித்து விட்டது. இரண்டாவது

ஆள் காட்டில் எங்கேயோ திரிந்து கொண்டிருக்கிறான்... அவனைப்பற்றிய தகவல் ஒன்றும் சரியாகக் கிடைக்க வில்லை. தியாகராஜனிடமும் அதைப் பற்றிப் பேசினான். 'வீரய்யனிடம் அதைப் பற்றி விசாரிக்கச் சொல்லியிருக்கிறேன்' என்ற பதில்தான் கிடைத்தது. தியாக ராஜனிடம் பேசும்போது சூரியின் மனதில் ஒரு புதுவகையான எண்ணம் தோன்றியது. முன்பைவிட இப்போது தியாகராஜனுக்கு நிமோஸா ஆராய்ச்சி யில் அவ்வளவாக அக்கறை இல்லை என்பதுபோல... அது உண்மையாக இருக்குமானால், அதற்குக் காரணம்...? அதைப்பற்றி சிந்திப்பதைவிட தியாக ராஜனிடமே பேசினால் என்ன...? — இப்படி பலவகையான எண்ணங்கள் அவன் மனதில். தியாகராஜனைப் பார்ப் பது என்று முடிவு எடுத்து விட்டான்..

தியாகராஜனின் பங்களாவிற்கு நடந்தே செல்வது என்ற எண்ணத்தோடு காட்டில் சூரி நடந்து கொண்டிருந் தான். அவன் மனதில் பலவகையான எண்ணங்கள்...பலவண்ண ஆசைகள்... பல கோணங்களில் கனவுகள். அவை களை எல்லாம் தன் மனத்திரையில் போட்டுப் பார்த்துக் கொண்டே நடந் தான்.

திடீரென்று நின்றான் சூரி. அவன் கண்கள் அகல விரிந்து அப்படியே நின்றுவிட்டன. கால்களும் நகர மறுத்து நின்றன.

''ஓ காட். இட் கான்ட்பி...''-அவன் உதடுகள் முணுமுணுத்துக் கொண்டே இருந்தன.

அவனுக்கெதிரே ஒரு மரத்தில் பிணமாகத் தொங்கிக் கொண்டிருந் தான் அந்த இரண்டாவது கடுகர் ஜாதி ஆண்!

**(இன்னும் வரும்)**





# கருக்கலை

## 22

சூரிக்குப் பைத்தியம் பிடித்தது போல் ஆகிவிட்டது. இரவில் தூக்கமென்பது அரிதாகிவிட்டது. இரண்டாவது கடுகர்ஜாதி ஆண் மரத்திலிருந்து பிணமாகத் தொங்கியதற்குக் காரணம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள சூரி துடித்தான்... வயலூர் தியாகராஜனின் உதவியோடு பிணத்தைத்தன் லேபிற்குஎடுத்துப்போக ஏற்பாடுகளைச் செய்து முடித்தான். இரு கடுகர் இனத்தவரின் மரணத்திற்கும் நிமோஸின் எண்ணெய்தான் காரணமென்றால், அவன் ஆராய்ச்சி – அதைச் சுற்றி அவன் எழுப்பிய கற்பனைகள், கனவுகள், எண்ணக்கோலங்கள் எல்லாம் இடிந்து தவிடுபொடியாகிவிடும்.

இரண்டாவது ஆளின் உடலைத் தன் ரிசர்ச் லேபில் வைத்து, தனக்குப் பழக்கமான மற்றொரு டாக்டரைத் 'தேடிஅலைந்தான் காட்டி'ற்கு அழைத்து வருமாறு ஏற்பாடு செய்தான். அந்த டாக்டரின் பெயர் பவித்ரன். டாக்டர் பவித்ரன் ஒரு பேதாலஜிஸ்ட். பிரேத பரிசோதனையில் பல ஆண்டுகள் அனுபவம் உள்ளவன்.

கடுகர்ஜாதி ஆண் தற்கொலை செய்து கொண்டிருக்கலாமென்ற முடிவைத் திட்டவட்டமாகத் தெரிவித்தான் பவித்ரன்.

அந்த ஆள் தற்கொலை செய்து கொள்ளக் காரணம் என்ன...?அம்பிகாவோடு இரவு பகலாக விஷயத்தை சர்ச்சை செய்தான். அவளும் எந்தவிதமான முடிவையும் எடுக்க முடியவில்லை. வேறு வழியின்றி நிர்மலாவை அணுகினான்...

ஒருநாள் மாலை வயலூர் தியாகராஜன் பங்களாவில் இல்லாத நேரம். தன்னைப் பார்க்க வரவேண்டுமென்று செய்தி அனுப்பினாள் நிர்மலா. அம்பிகாவிடம் ஏதோ ஒரு கதையைச் சொல்லிவிட்டுக் கிளம்பினான் சூரி. வழக்கமான பேரத்திற்குப் பிறகு, நிர்மலா காரணத்தை விளக்கினாள்...

"சூரி, விஷயத்தைச் சொல்றேன் கேளுங்க. நீங்க கொடுத்தீங்களே புது இன்ஜெக்ஷன், அதுனாலே கடுகர் ஜாதிக்காரன் இம்பொடண்ட் ஆயிட்டானாம். அவனுக்கு அவங்க ஜாதியிலே காதல்

மன்னன்னு ஒரு பேர் உண்டாம். தேங்க்ஸ் டு யுவர் இன்ஜெக்ஷன்... அதல்லாம் க்ளோஸ்... ஆண்மைக்கே மறுபெயர் நான்தான் அப்படீன்னு கர்வப்பட்டிருந்த அந்த ஆளுக்கு இந்த ஷாக்கைத் தாங்க முடியலேயாம். அதான் தூக்கு போட்டுக் கிட்டானும்... கடுகர் ஜாதி ஆளுங்க ஒங்களைத் தீத்துடணும்னு கங்கணம் கட்டிக்கிட்டிருக்காங்க... நீங்க எதுக்கும் கொஞ்சம் ஜாக்கிரதை யாகவே இருங்க...''

ஃ ஃ ஃ

# மரம்

## ராண்டார்கை

வயலூர் தியாகராஜன் 'தேடிஅலேந் தான் காட்டி'ன் நடுவில் ஒரு வேப்ப மரத்திற்கடியில் கேம்ப் சேரில் உட் கார்ந்திருந்தான். அவனுக்கருகில் வீரைய் யன் தன் போலீஸ் உடையில் துப்பாக்கி யுடன் நின்றுகொண்டு வலது கட்டை விரலால் தன் மீசையை வருடிக் கொண் டிருந்தான்.

''ஏண்டா வீரு, ஒனக்குக் கிடைச் சிருக்கிற இன்ஃபர்மேஷன் உண்மை யிலேயே கரெக்டா...? நீ எதை வெச்சு அதை ரிலயபுள்னு நம்பறே?''

தியாகராஜன் தன் நகங்களைக் கடித்துக் கொண்டே பேசினன்:

''ஸார், இன்ஃபர்மேஷன் ஹண்ட்ரட் பர்ஸண்ட் கரெக்டுங்க... அதப்பத்தி சந்தேகமேயில்லே. நம்மகிட்ட அகப்பட் டானே அந்தப் சின்னப்பையன், அவனை நாலு தட்டு தட்டினேம். அவனுக்குத் தெரிஞ்ச விஷயத்தை பொக்குன்னு கக்கிட்டான்... பங்களாவுலே இருந் துச்சே அந்த மல்லி, அதுக்கும் இந்த கயிலே பைரவனுக்கும் கனெக்ஷன் இருந்திருச்சு. அது உண்மேன்னு மல்லியே எங்கிட்டே ஒத்துக்கிடுச்சு.''

''வீரு, சூரியோட ரிசர்ச் ப்ராஜக்ட் விஷயம், இந்த கடுகர் ஜாதி பசங்க விஷயம், அந்த பைரவனுக்குத்தெரிஞ்சு போச்சுன்னு ரொம்ப ஸீரியஸாயிடும்ப் பா... தாழ்த்தப்பட்ட மக்களை அர சாங்கமே கினிபிக்ஸா உபயோகப் படுத்தறுங்க... அது இதுன்னு ப்ராப கேண்டா பண்ண ஆரம்பிச்சுடுவாங்க. டவுன்லேயும் ஸிட்டியிலேயும் போஸ் டர்ஸ் ஒட்டுவானுங்க. இந்த பைரவன், அவன் கும்பல் இந்த காட்டுலே எங் கேயோதான் ஒளிஞ்சுக்கிட்டிருக்கணும். அது எங்கேங்கிறதை ஒடனே கண்டு பிடி. அவுங்களுக்குச் சோறு தண்ணி இதையெல்லாம் யார் குடுக்கறுங்கற தையும் கண்டுபிடி... இந்த கடுகர் ஜாதிக்காரனுங்கதான் இப்ப அந்த வேலையெல்லாம் செய்யறுங்கன்னு எனக் குத் தோணுது. அந்த ஜாதிக்காரன் களையெல்லாம் நல்லா கவனி... நா இன்னிக்கி ஒங்க டி.ஐ.ஜி.யோட கால் போட்டுப் பேசறேன். தேவைப்பட்டா இன்னும் கொஞ்சம் ஆளுங்களையும் அனுப்பச் சொல்றேன். அந்த ஆளு போலீஸ் அவார்டு, மெடலுன்னு துடிக் கிறவன்... நம்ம என்ன கேட்டாலும் செய்வான் இந்த விசயத்துலே... எதுக் கும் நீ ரொம்ப உஷாரா இருக்கணும், வீரு... இந்த பைரவன் மாதிரி ஆளுங் கள்ளாம் எதுக்கும் துணிஞ்சவனுங்க... ஒன் கையிலே துப்பாக்கி இருக்கேன்னு பெரிசா நினைச்சுக்காதே...''

''ஸார், நம்ம ஆளுங்களை நீங்க சொன்ன மாதிரியே நானே ஐடியா பண்ணி லைன்லே உட்டிருக்கேன். அப்பப்ப ஒங்க கிட்டே வந்து இன்ஃபர் மேஷன் குடுத்துக்கினே இருப்பேன்... ஆனு ஒண்ணுங்க... நீங்க காட்டுக்குள்ளே கேம்ப் போகும்போது ஜாக்கிரதையா இருங்க. அதேமாதிரி பங்களாவுலே அம்மாவையும் ஜாக்கிரதையா இருக்கச் சொல்லுங்க...''

தியாகராஜன் சற்றுநேரம் யோசித் தான். ஒரே விரலின் நகத்தை மீண்டும் மீண்டும் கடித்தான்.

''டேய் வீரு, நீ சொல்றதிலேயும் பாயிண்ட் இருக்குடா... இன்னிக்கி ராத்திரி நா கேம்ப் போறேன். நீ ஒன் கன்னுேடே வந்து அம்மாவ பாத் துக்கடா... இந்த பைரவனையெல்லாம் நம்பக்கூடாது...''

''எஸ் ஸார்''—வீரைய்யன் அடக்கத் தோடு ஸல்யூட் அடித்தான்.

**(இன்னும் வரும்)**

"அம்பா... எத்தனை கடுகர் ஜாதி ஆளுங்க செத்தாலும் இந்த நிமோஸா ரிசர்ச் ப்ராஜெக்ட நான் கைவிடப்போற தில்லே. இந்த 'தேடி அலேந்தான் காட்டுலே' கடுகர் ஜாதி ஆளுங்க இருக்கிற வரைக்கும் நான் என்னுேட எக்ஸ்பரிமண்டலே விடப்போறதில்லே... இரண்டாவது ஆள்... அதான் அந்த மரத்துலேருந்து தொங்கினனே அந்த ஸன் ஆஃப் எ பிட்ச்...அவனுேட சாவுக்குக் காரணம் என்னன்னு நிர்மலா குடுத்த காரணம் எவ்வளவு தூரம் உண்மை அப்படிங்கறதைக்கண்டுபிடிக்கற நிலேலே நான் இன்னிக்கி இல்லே. அது நெஜமா இருந்தா என்னுேட ரிசர்ச்லே ஏதாவது டிராபேக்ஸ் இருக்கான்னு கண்டு பிடிக்கணும். என் மனசுலே தியாகராஜனுக்கு இந்த ப்ராஜெக்ட்டுலே கவனம் குறையுதோன்னு ஒரு டௌட் இருந்துக்கிட்டேயிருந்தது. அதாவது நேத்து அவனுேட பேசின பிறகு, இப்போ எனக்கு அந்த டௌட்ஸெல்லாம் இல்லே..."

"அப்படி என்ன பேசினீங்க... தெரிஞ்சுக்கக் கூடாதா?"

"நேரம் வரும்போது நீயே தெரிஞ்சுப்பே அம்பா, அதுவரைக்கும்... சஸ்பென்ஸ்...!"

நிர்மலாவுக்கு இருப்பே கொள்ளவில்லே. சாதாரணமாக அவள் பாத்ரூமில் மணிக்கணக்கில் குளிப்பாள்... ஆனல் இன்று... அவள் மனம் ஜலக்ரீடையில் லயிக்கவில்லே. சில நாட்களாகவே சூரியைத் தன்னிடம் அழைத்து வரமுடியவில்லே. அன்றிரவு சூரியும், கணவன் தியாகராஜனும் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தபோது, தன்னே மறுநாள் வந்து சந்திக்குமாறு கணவன் காதுகளுக்கு எட்டாமல் சூரியிடம் கிசுகிசுத்தாள். அவன் காது கேட்காதது போல் கல்லாகவே இருந்தான். நீண்ட இரவின் நடுவில் அவர்களுக்குத் தேவையான சோடா பாட்டில்களே எடுத்துக் கொண்டுபோய் டீபாயின் மேல் வைக்கும்போது, சூரியின் தொடையின் மேல்பாகத்தை வருடி, நுனி நகத்தால் குத்தி விரல்களினுல் கிள்ளினுள். அந்த நிலேயிலும் அவனிடமிருந்து எந்தவிதமான அறிகுறிகளும் இருட்டில் தென்படவில்லே, சூரியா இப்படி மாறி விட்டான்...? சூரியிடம் ஒரு தனி வகையான கவர்ச்சி, அவள் உணர்ச்சிகளே வருடி, தடவி தட்டி எழுப்பிக் கொண்டிருந்தது. அதைத் தடுக்க அவளால் முடியவில்லே. வீரய்யனிடம் வேகம் இருந்தது. கணவனிடம் விவேகம் இல்லாத மோகம் மட்டுந்தான் இருந்தது... ஆனல், சூரியிடம் வேகம், விவேகம், மோகம் எல்லாமே சேர்ந்து அவளேக் கிண்டி, சுண்டி வேறு லோகத்திற்கு இழுத்துச் சென்றது. அப்படிப்பட்ட சூரியைத் தனக்குத் தேவைப்படும் 'போதெல்லாம் சேவை செய்ய தயாராக வைத்திருப்பது எப்படி...? நிமோஸா ஆராய்ச்சி தொடர்ந்து நடக்க மேலும் சில கடுகர் ஜாதி ஆண்களே சூரியிடம் கொண்டு தள்ளுவது... அதுதான் வழி...

23

உடனே அவள் மனத்திலிருந்து ஒரு பெரிய சுமை இறக்கி வைக்கப்பட்டது போன்ற ஓர் உணர்ச்சி...

வீரய்யன் 'தேடி அலேந்தான் காட்'டின் அடர்த்தியான பகுதியில் வழக்கத்தைவிட வேக்மாக நடக்கத் தொடங்கினுன்... சற்று நேரத்திற்கு முன்பு ஒரு கடுகர் ஜாதி கும்பலோடு காட்டில் கயிலேபைரவன் பேசிக் கொண்டிருந்ததாக அவனுக்குத் தகவல் கிடைத்தது... பைரவனே எப்படியாவது பிடித்து விடுவது என்று தீர்மானித்து, அவன் தன் நடையை ஓட்டமாக மாற்றினுன்...

அம்பிகா தன் உடைகளே மாற்றிக் கொண்டு ரிசர்ச் லேபிற்குள் நுழைந்தாள். தியாகராஜனே சந்தித்துப் பேச சூரி வேனில் வெளியே சென்றிருந்தான். ஆண்டி குளித்துவிட்டு வருகிறேன் என்று சொல்லி, பங்களாவிற்கு அருகிலிருக்கும் ஓட்டு வீட்டிற்குச் சென்று விட்டான். வெளியே செல்வதற்கு முன்பு சூரி, அவளிடம் சில வேலேகளேச் செய்து முடிக்கச் சொல்லியிருந்தான். நிமோஸா மரப்பட்டையிலிருந்து எடுத்திருந்த நிமோஸின் எண்ணெயில் ஏதாவது




இருக்கக்கூடாத பொருட்கள் இருக்[illegible]ன்றனவா என்று சோதித்துப் பார்க்க, [illegible] பரிசோதனைகளைச் செய்து பார்க்கு [illegible] அவளிடம் விளக்கியிருந்தான். [illegible]ட்டைத்தாங்கும் ஒருவகையான [illegible] ஜாடியில் நிமோஸின் எண் [illegible] ஊற்றிக் காய்ச்சிக் கொண்டி[illegible]...

**றாண்டார்கை**

அப்போது லேசாகக் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. அவசர அவசரமாக நடந்து வந்து கதவை ஓரளவிற்குத் திறந்து, தட்டியது யார் என்று எட்டிப் பார்த்தாள். அந்தி மங்கும் நேரம் அந்த வெளிச்சத்திலும் வெளியே வராந்தாவில், கதவைத் தட்டிவிட்டு நின்றிருப்பது யாரென்பது அவளுக்குத் தெரிந்து விட்டது.

*கயிலை பைரவன்!*

**(இன்னும் வரும்)**



**24**

அம்பிகாவுக்கு கயிலை பைரவனைப் பார்க்கும்போது சற்று பரிதாபமாகத் தான் இருந்தது. அன்று, முதல் முறை யாக பைரவனைக் கதவுக்கருகில் பார்த்த பொழுது ஏற்பட்ட உணர்ச்சிக்கும் இந்த பரிதாபத்திற்கும் எவ்வளவு வித்தி யாசம்! அந்த மாவட்டத்தையே கலக்கிய பைரவன் இன்று இப்படி... அவளால்நினைத்துப்பார்க்கவே முடியாத நிலையில் அந்த தீவிரவாதி...

ரிசர்ச் லாபில் அம்பிகா மட்டும் தனி யாக இல்லை. அவளுக்கருகில் கைகளைப் பிசைந்து கொண்டே நின்றான் சூரி. அவனுக்கு எதிர்ப்பக்கத்தில் வயலூர் தியாகராஜன். ஒரே இடத்தில் நிற்க முடி யாமல் அப்படியும் இப்படியும் உலாத்திக் கொண்டிருந்தான்... நீண்ட மேஜைக் கருகே வழக்கமாக ஆண்டி நிற்கும் இடத் தில் ஹெட்கான்ஸ்டபிள் வீரய்யன்...

மேஜையின் மீது கயிலை பைரவன்! அவன் கைகால்கள் தடியான கயிறு களினால் நன்றாக இறுக்கிக் கட்டப்பட் டிருந்தன. அவன் வாயில் ஒரு பெரிய துணி அழுத்தித் திணிக்கப்பட்டிருந் தது. பைரவனின் உடலில் அதைத் தவிர வேறெங்கும் துணியில்லை! அவன் கண்களையும் நன்றாக மூடி, மீண்டும் திறக்கவிடாமல் 'பாண்ட் எய்டு' துண்டுகளை ஒட்டியிருந்தார்கள்.

''தியாகராஜன், நீ செய்யறது சரி யில்லே... ரொம்ப டேஞ்ஜரஸ்கூட. கான்ஸிக்வன்ஸஸ் ரொம்ப விபரீதமா இருக்கும்னு ஒங்களுக்கு ஏன் தெரிய மாட்டேங்குது? யூ ஹாவ் ஆல் கான் மேட் ஐ [illegible]...''

சூரி உரக்கவே கத்தினான்.

''சூரி, யூ ஆர் நோ லாங்கர் இன் சார்ஜ் ஹியர். இந்தத் 'தேடி அலைந்தான்

காட்டு'க்கு நா ஒரு ராஜா மாதிரி தெரி யுமில்லே... இப்போ இங்கே நான் தான் பாஸ். நா சொல்றபடிதான் இங்கே இனிமே நடக்கும். தேர் ஈஸ் நோ பாயிண்ட் இன் யுவர் கெட் டிங் அப்ஸெட். நீ இன்னும் எனக்கு பிரெண்ட். அந்த ரிலேஷன்ஷிப் இன்னும் மாறல்லே. அப்படி இருக்கும்போது நீ ஏன் புலம்பறே...? இந்த விஷயத் துலே நீ எமோஷனலா அப்ஸெட் ஆற துலே அர்த்தமில்லே...''

''தியாகராஜன், வாட் தெ ஹெல் ஆர் யூ டாக்கிங் அபெளட்...? இந்த ரிசர்ச் லாப் என்னுடைய ப்ராஜக்ட். இந்த நிமோஸா மேட்டர் என்னோட ட்ரீம். நா இல்லேன்னு நிமோஸாவும் இல்லே ஒரு எழவும் இல்லே...''

தியாகராஜன் வேகமாக சூரிக்கு அருகே வந்து,அவன் முதுகைப் பலமுறை தட்டினான். அம்பிகாவைப் பார்த்துச் சிரித்தான்.

''ஐ சே லுக் சூரி, நா இப்பத்தானே சொன்னேன், எமோஷனல் ஆகா தேன்னு. திருப்பித் திருப்பி அதையே சொல்லிக்கிட்டிருக்கியே. இப்ப என்ன முழுகிப்போச்சு...? ஒன்னோட நிமோஸா ப்ராஜக்ட், இந்த ரிசர்ச் லாப், நீ செய்யற ஒர்க் அதெல்லாம் அப்படியே தானே இருக்கு. இதெல்லாம் மூடச் சொல்லி ஒங்கிட்ட யாரும் சொல்ல லியே. டிட் ஐ? எந்த ஆளை நம்ம போலீஸ் வருஷக்கணக்கா தேடிக்கிட் டிருக்கோ அந்த ஆளு, அவன் போற காலம், இங்கே வந்து மாட்டிக்கிட் டான்... அவனே ஒன்னோட ரிசர்ச் லாப் வேலைக்கு ஒரு கினிபிக்கா யூஸ் பண்ணிக்கிட்டிருக்கோம்...''

''தியாகராஜன், இந்த ஆளு யாருன்னு ஒனக்குத் தெரிஞ்சும் அவனப் போயி...''

''சூரி, நீ பெரிய ஸைன்டிஸ்ட். ரிசர்ச் ஸ்காலர். நோபல் ப்ரைஸ் வந் தாலும் வரும்னு நீயே சொல்லிக்கிட் டிருப்பியே... அப்பேர்ப்பட்ட டாக்டர் சூரி, ஐ மீன் யூ... இவ்வளவு ஸ்டுபிட்டா இருப்பேன்னு நா எதிர்பாக்கலேப்பா. கடுகர் ஜாதிக்காரங்களே புடிச்சு ஒங் கிட்ட கொண்டு வரும்போது நீ எந்த விதமான எதிர்ப்பையும் தெரி விக்கலே... அது ஏன் அப்படி...?அவுங்க மட்டும் மனுஷங்க இல்லேயா? அவுங் களுக்கும் இந்த ஃபெலோவுக்கும் என்ன வித்தியாசம்? உடல் உயிர் எல் லாமேரெண்டுபேருக்கும்ஒண்ணுதானே? சூரி, யூ ஆர் ஸோ ப்ளடி இல்லாஜிக்கல். கடுகர் ஜாதி ஆள் அகப்படலேன்னு வெச்சுக்க... ஒகே. ஒன்னோட எக்ஸ்பரி மெண்ட்ஸுக்கு ஆள் தேவை. ஒகே.. வேறெவனோ ஒரு ஆளை நாங்க புடிச் சிக்கிட்டு வந்து கொடுக்கறோம் ஒகே.. நீ அவனை கினிபிக் ஆக்கிருக்கமாட் டியா..? டெல் மீ சூரி, டெல் மீ.. அதே மாதிரிதான் இந்தப் பைரவனும்..ஸோ ஃபார் ஆஸ் யூ ஆர் கன்ஸேன்ட் ஐ டோண்ட் ஸீ எனி டிபரென்ஸ்...''

தியாகராஜன் மீண்டும் சூரியைத் தட்டினான்.

''அதெல்லாம் சரி... இங்கே நடக்கற தென்ன?''

''சூரி, அது புரியிது. பட் அந்த மாதிரி செய்யறதைத் தவிர வேறே வழி இல்லே. இந்த ஆளை எப்படியாவது நிரந்தரமா ஸைலன்ஸ் பண்ணணும்னு எங்களுக்கிருக்கு... நீ என்ன போலீஸ் காரனான்னு கேக்கறியா..? ஸ்டிரிக்ட்லி ஸ்பீக்கிங் ஐ ஆம் நாட். பட் இந்த பைரவனை எலிமினேட் பண்றதிலே எனக்கு நிச்சயமா இன்ட்ரஸ்ட் இருக்கு. என்னைவிட அதிகமா வீரப்பனுக்கு இருக்கு... வாழ்க்கை பூராவும் ஹெட் கான்ஸ்டபிளாவே இருக்கணும்னு அவனுக்கென்ன தலையெழுத்தா..? ரிடை யர் ஆகறதுக்கு முன்னடி ஒரு சப்– இன்ஸ்பெக்டராவது ஆகவேண்டாம்.''

''தியாகராஜன், எல்லாம் ஒரே பேத்தல். ஒங்க பியூச்சரைப் பெரிசு படுத்தறதுக்கு இவன்தானா கெடச் சான்...? என் லாபுதானே ஒங்களுக்குக் கினிபிக்? அது சரி, என்னோட நிமோஸா ரிசர்ச்சுக்கு ஆள் தேவை;ஒத்துக்கறேன். பைரவனை நீங்க கட்டிப்போட்டுட்டு போக வேண்டியதுதானே. என் லாபுக் குள்ளே ஒரு ஹெட்கான்ஸ்டபிள், ஒரு ஃபாரஸ்ட் டிபார்ட்மெண்ட் அஃபிஷி யல் — இவங்கள்லாம் எதுக்கு?''

**(இன்னும் வரும்)**



உலகின் மிகச் சிறிய புத்தகத்தை ஜப்பானிற்குச் சென்றால் பார்க்கலாம். இதன் அளவு .2 சதுர மில்லி மீட்டர்தான் அதாவது ஒரு கோதுமைத் தானியத்தின் அளவு இதைப் படிக்க மைக்ராஸ்கோப் என்ற நுண் கருவி அவசியம்!

—தகவல்: விஸ்... [illegible]




COMICS PDF TIMES

## 25

வீரைய்யன் தன் மீசையை இரு கை விரல்களினாலும் வருடிக் கொண்டே தனக்குள் தானே சிரித்துக் கொண்டான். கடந்த பல மாதங்களாக பைரவனால் ஏற்பட்ட தொல்லைகள், மன வருத்தங்கள், மேலிடத்திலிருந்து வந்த தாக்குதல்கள்... எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு எதிர்பாராத விதமாகக் கிடைத்ததில் அவன் மனதில் மகிழ்ச்சி. 'சாதிக்க முடியாது என்று நினைத்த ஒன்றை சாதிக்க முடிந்தது... அதுவும் சுலபமாக...' என்று எண்ணிப் பார்க்கும் போது அவன் கைவிரல்கள் தாமாகவே மீசையின் மேல் நாட்டியமாடின! ஆரம்பத்தில் சூரி, அம்பிகா – அவர்கள் தேடி அலைந்தான் காட்டிற்கு வந்த விஷயம், இவைகளைப் பற்றியெல்லாம் அவன் ஒன்றும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ரிசர்ச் லாபில் என்ன நடக்கிறது என்று புரிந்து கொள்ளும் ஆவலும் அவன் மனதில் எழவில்லை. அம்பிகாவும் சூரியும் காதலர்கள் என்று ஆண்டியின் மூலம் முதன் முறையாக அவனுக்குத் தெரியவந்தபோது, அதைப்பற்றி நிர்மலாவுடன் இடை இடையே, இடையை அணைத்து கொஞ்சும்போது அவளிடம் பிரஸ்தாபித்தான். நிர்மலா அப்போது தான் ரிசர்ச் லாபில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் தனக்குப் பிடித்தமான அசிங்கமான வார்த்தைகளினால் விளக்கினாள்... கடுகர் ஜாதி ஆண்களை எதற்காகப் பிடித்துக் கொண்டு போகிறார்கள் என்பதைப் பற்றி பச்சையாகவே படம் பிடித்துக் காட்டினாள்... அவளுக்குப் பிடித்தமான இடங்களை வட்டமிட்டு, ரிசர்ச் லாபில் கடுகர் ஜாதி ஆண்களுக்குப் பதிலாக அவனை அனுப்பினால் என்ன, எப்படி நடக்கும் என்பதை எடுத்துக் காட்டினாள்... அந்த பயங்கரத்தை நினைத்து நினைத்து இருவரும் சிரித்த வினாடிகள்....

அப்போதுதான் வீரைய்யன் மனதில் கயிலை பைரவனின் புராணத்தை முடிப்பதற்கான எண்ணம் உதித்தது. அதைப்பற்றி வயலூர் தியாகராஜனிடம்

நீண்டநேரம் விவாதித்தான். அப்படி இருக்கும்போதுதான் பைரவன் தானுக ரிசர்ச் லேப் வாசற்கதவைத் தட்டினுன் என்ருல்...

வீரைய்யன் மீசை சிரித்தது.

ஃ ஃ ஃ

சூரி பாத்ரூமிலுள்ள மர ஸ்டூலின் மேல் நனைந்த உடலோடு உட்கார்ந்திருந்தான். குளித்து முடித்து ஐந்து நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டன. ஆனுல், அருகில் தொங்கிக் கொண்டிருக்கும் பாத் டவலை எடுத்து உடலை துடைத்துக் கொள்ள முடியாத மன நிலையில் இருந்தான் அவன். அவனுக்குள்ளே பலவிதமான எண்ணப்போராட்டங்கள்... ஒன்ருேடொன்று மோதிக் கொண்டு உடைந்து சிதறி அவனைப் பைத்தியமாக்கிக் கொண்டிருந்தன.

மனித சமுதாயத்தின் நலனுக்காக அவன் பல வருடங்கள் பாடுபட்டு படித்து, கண்டுபிடித்த விஞ்ஞான உண்மை இப்படி ஒரு காரியத்திற்கு உபயோகப்படுத்தப்பட்டு விட்டது என்று எண்ணிப் பார்க்கும்போது, அவனுக்கு இதயமே நின்றுவிட்டது போல தோன்றியது. நிமோஸின் ஆராய்ச்சிக்கு ஆண்கள் தேவைதான். அதற்காக ஒரு குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்த ஆண்களை உபயோகப்படுத்துவதில் தவறு இருப்பதாக அவனுக்குத் தோன்றியதில்லை. அதற்குக் காரணம், குறிக்கோள் நல்லதாக அமைந்திருப்பதால்தான். பலன் உலகிற்குத் தேவையாக இருந்தால் முறைகள் எப்படி இருந்தாலும் அது தவறில்லை என்ற கொள்கையை அவன் பல ஆண்டுகளுக்கு முன்பே வேதமாகக் கருதி ஏற்றுக் கொண்டிருந்தான்... ஆனுல், நிமோஸின் எண்ணெய் ஓர் அரசியல்வாதியைத் தீர்த்து விடுவதற்காக உபயோகப்படுத்தப்பட்டது என்று எண்ணிப்பார்க்கும் போது அவன் ரத்தம் கொதிக்க ஆரம்பித்தது... பதவியிலிருக்கும் சிலருக்கு ஒருவனைப் பிடிக்கவில்லை என்ற ஒரே காரணத்திற்காக, அவனை தன் கண்ணிற் கெதிரேயே, தான் கண்டுபிடித்த பொருளைக் கருவியாக்கிக் கொண்டு கொலைசெய்யத் துணிந்துவிட்ட வயலூர் தியாகராஜனையும், போலீஸ் ஹெட் கான்ஸ்டபிள் வீரைய்யனையும் மனிதர்களாக நினைப்பதற்கே அருவருப்பாக இருந்தது.

''அம்பா.. அம்பா...''

''என்ன சூா.., [illegible] வித் யூ? எனிதிங் ராங்...?''—படபடப்பு நிறைந்த குரலில் கேட்டாள் அங்கு வந்த அம்பிகா.

''அம்பா, வயலூர் தியாகராஜன் என்னேட பிரெண்டுதான்... இந்த ரிசர்ச் லேபை இந்த லெவலுக்குக் கொண்டாறதுக்கு அவன் யூஸ்ஃபுல்லாவே இருந்தான். ஐ மஸ்ட் கிவ் த டெவில் இட்ஸ் ட்யூ... ஆனு, அவன் என்னை மடையன்னு நெனச்சான்னு, ஹி ஈஸ் ஸேட்லி மிஸ்டேக்கன்... அம்பா, அவனை நான் சும்மா விடப்போறதில்லே...''

''சூரி, ஏதோ ஆத்திரத்துலே கன்னு பின்னுன்னு எதையாவது செஞ்சுடாதீங்க... அப்புறம் மாட்டிக்கிட்டு அவஸ்தைப் படறது நாமதான்.''

''அம்பா, நீ என்னவேணுலும் சொல்லு நான் கேக்கப் போறதில்லே. இன்னிக்கி மத்தியானம் லஞ்ச் முடிஞ்ச உடனே சில இம்பார்டெண்ட் லெட்டர்செல்லாம் எழுதணும்... அஃப்கோர்ஸ் கான்பிடென்ஷியல். அதுக்கப்புறம் நான் நாலஞ்சு நாள் மெட்ருஸ் போகவேண்டி இருக்கும். நீயும் என்னேட வரவேண்டி இருக்கும்...''

''சூரி, மெட்ருஸுக்கா...? இப்ப என்ன திடீர்னு?''


''அம்பா, விஷயம் இல்லாம நான் மெட்ராஸுக்கு போகமாட்டேன்...''

''சூரி, இந்த கயிலை பைரவன் விஷயமாத்தானே நீங்க மெட்ருஸ் போறதா டிஸைட் பண்ணியிருக்கீங்க? ப்ளீஸ், அதெல்லாம் வேண்டாங்க, என்னமோ நடந்து போச்சு... நீங்க என்ன பண்ணுலும் அந்த கயிலை பைரவன் திரும்பி வரப் போறதில்லே... தியாகராஜன் சொன்னமாதிரி அவன் என்ன ஒங்க மாமனு மச்சானு?''

''அம்பா! நான் மனசு வெச்சதை செய்வேன்... செய்யப்போறேன். இன்னுன்னு நீ லஞ்ச் ரெடி பண்றதுக்கு முன்னுடி நான் கொஞ்சம் தியாகராஜன் வீட்டுக்குப் போயிட்டு வரணும்...''

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு சூரி ஃபுல் சூட் அணிந்து பங்களாவிலிருந்து வெளியே வந்தான். வேன் சாவியை கைவிரலால் சுற்றிக் கொண்டே நடந்தான்... திடீரென்று நின்ருன்... வழக்கமாக வேப்பமரத்தின் கீழே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வேனைக் காணேம்!

**(இன்னும் வரும்)**



ராண்டார்கை

சூரி காட்டுப்பாதை வழியாக வேகமாக நடந்தான். அவன் உள்ளத்தில் பயம்! தன்னுடைய வேன் அவன் பங்களா காம்பவுண்டிலிருந்து காணமற் போய்விட்டது என்ற உண்மையை அவனல் உடனடியாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவனும் அம்பிகாவும் தேடிஅலேந்தான் காட்டிற்கு வந்தது முதல் இதுவரை ஒரு குண்டூசிகூட திருடு போனதில்லை. அம்பிகாவுடன் அதைப்பற்றி கலந்து சிந்தித்தபோதுதான் பயம் அவனைக் கவ்வ ஆரம்பித்தது. தன் வேனை இரவு நேரத்தில் வயலூர் தியாகராஜனே அல்லது வீரய்யனே தனக்குத் தெரியாமல் எடுத்துச் சென்றிருக்க வேண்டும்... தியாகராஜனையே பார்த்துக் கேட்டு விடுவது என்ற முடிவோடு காட்டுபங்களாவை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

தியாகராஜனின் பங்களாவை நெருங்கியபோது அவன் கால்கள் திடீரென்று நின்றுவிட்டன. நடந்துவந்த களைப்பில் பலமாக மூச்சுவிட்டுக் கொண்டே முறைத்துப் பார்த்தான்.

பங்களாவின் பூட்டு அவனைப் பார்த்துச் சிரித்தது.

ஒருமணி நேரம் சூரி காட்டுபங்களாவின் வாசலிலேயே காத்துக் கொண்டிருந்தான். ஆனல், யாரும் வரவில்லை.

இருட்ட ஆரம்பித்து விட்டது. வானத்தை மேகங்கள் இறுக்கி அணைத்துக் கொண்டிருந்ததால், தூரத்திலிருந்து கண்ணைச் சிமிட்டும் நட்சத்திரங்களும் காணப்படவில்லை. எந்நேரமும் மழை பெய்ய ஆரம்பிக்கலாம் என்ற நிலை உருவாகிக் கொண்டிருந்தது. பங்களாவில் அம்பிகா தனியாக இருக்கிறள்.. சீக்கிரமாக வீடு திரும்புவதற்கு வேன் வேறு இல்லை. இப்படிப் பலவிதமான பிரச்சினைகள்... வேகமாக வெளியே நடக்க ஆரம்பித்தான்.

வழியில் பலமாகத் தூற ஆரம்பித்து விட்டது. தூறல் மழையாக மாறுவதற்கு முன்பாகவே திரும்பிவிட வேண்டுமென்ற எண்ணத்தோடு ஓட

ஆரம்பித்தான்... பங்களாவின் வாசலை அடைந்ததுமே சூரியை கன்னத்தில் அறைவதுபோல் நின்றுகொண்டிருந்தது அந்த காணாமற்போன வேன்!

சூரி அப்படியே திகைத்து நின்றான். காணாமற்போன வேன் தானாகவே எப்படித் திரும்பி வந்தது? அதை எடுத்துப் போனது யார்? எதற்காகத் திரும்பி எடுத்து வந்தார்கள்? கேள்விக்குறிகளின் கூர்மைக்கு நடுவே சிக்கித் தவித்தான் சூரி...

பலமாகக் கதவைத் தட்டினான். அது உடனே திறந்து கொண்டது. உள்ளே போலீஸ் உடையில் வீரய்யன், வயலூர் தியாகராஜன், அவனுக்குப் பின்னால் மற்றும் இரண்டு போலீஸ்காரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்ததுமே சூரிக்கு அடிவயிற்றை ஏதோ செய்தது. பல கரண்டிகள் அடிவயிற்றில் பல இடங்களில் ஒரே சமயத்தில் கிளருவதுபோல் ஓர் உணர்ச்சி...

''வெல்கம் சூரி, வெல்கம்! எங்கே இவ்வளவு நேரமா காணோம்...?'' — தியாகராஜன சிரித்துக் கொண்டே பேசினான்.

சூரி மெல்ல உள்ளே நுழைந்தான். வாய்திறந்து பேசுவதற்கே சிரமமாக இருந்தது.

''தி..தி... தியாகராஜன், என்ன இதெல்லாம்? இது என்ன, என் பங்களாவா? அல்லது போலீஸ்ஸ்டேஷனா?'' —தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சூரி கத்தினான்.

''சூரி, எதெ, எங்கே எப்படி வெச்சுக்கணும்கற விஷயமெல்லாம் இனிமே நாங்கதான் டிஸைட் பண்ணணும்... இப்பவும் நீ என் பிரெண்டுதான்! நோ டௌட் அபௌட் தெட்... ஆனா, நீ தான் என்னென்னமோ செய்யலாம்னு ப்ளான் பண்ணே. ஆனா அதை நாங்க நடக்க விடமாட்டோம்...''

''தியாகராஜன், நீங்க என்ன பேசறீங்கன்னு எனக்குப் புரியலே... ஆமா, அம்பிகா எங்கே?''

தியாகராஜன் வீரய்யனை முறைத்துப் பார்த்தான்... இருவரும் சிரித்தார்கள்.

''சூரி, ஒங்க அம்பிகா இங்கேயே தான் இருக்கா. பட், இங்கே வந்து உன்னை வரவேற்கிற நிலேலே இல்லே...''

சூரிக்குத் திடீரென்று வியர்த்தது. கைவிரல்களை இறுக்கிக் கொண்டு தியாகராஜனுக்கு அருகே வேகமாக நகர்ந்தான்.

''தியாகராஜன், வாட் தெ ஹெல் ஈஸ் ஹாப்பனிங் ஹியர்... டெல் மீ ஃபர்ஸ்ட் ஆர் ஐ வில் கில் யூ...''

''சூரி, நீதான் கொலே பண்ணியாச்சே அந்தக் கடுகர்ஜாதி ஆளுங்களே... அதோட ஒன் இன்னிங்ஸ் க்ளோஸ்...''

''தியாகராஜன், நா ஒடனே அம்பிகாவெ பாக்கணும். அனதர் திங், இது என்னோட ரிசர்ச் லேப் — என்னோடெ பங்களா. இந்த போலீஸ்காரங்களே வெளிலே போகச்சொல்லு...''

''சூரி, நாங்க வந்த காரியத்தை முடிச்சிட்டுத்தான் இங்கிருந்து வெளிலே போவோம்.. இந்த பில்டிங் நீ கட்டினதில்லே. இது கவர்மெண்ட் ப்ராப்பர்ட்டி. நாங்கள்லாம் கவர்மெண்ட் ஸர்வெண்ட் ஒன்னது என்னதுன்னு பேசறதெல்லாம் பைத்தியக்காரத்தனம்... அதுவும் இந்த நிலேலே. நாங்க வந்த வேலே பாதிதான் முடிஞ்சிது...''


''பாதின்னா...?''

''நீயே பாரேன்... வீரய்யா, ஓபன் தெட் டோர்...''

வீரய்யன் படுக்கை அறைக் கதவைத் திறந்தான். அங்கே கட்டிலில் கயிற்றால் கட்டப்பட்டு மூச்சுப் பேச்சில்லாமல் கிடந்தாள் அம்பிகா...

**(அடுத்த இதழில் முடியும்.)**

COMICS
PDF
TIMES



## 27

சூரி படுக்கை அறையை நோக்கிப் பைத்தியம் பிடித்தவன்போல் ஓடினுன். சற்று நேரம் சலனமின்றி படுக்கையில் கிடந்த அம்பிகாவை முறைத்துப் பார்த்துக் கொண்டே நின்ருன். தன் கண்முன் நடப்பதை அவனுல் நம்பவே முடியவில்லே. ஆனுல், தான் வெளியே சென்றிருந்தபோது என்ன நடந்திருக்கக் கூடும் என்பதை மட்டும் அவனுல் புரிந்து கொள்ள முடிந்தது. பொங்கி எழும் கோபம் அவன் கண்களைக் கனலாக்க, தியாகராஜனைத் திரும்பிப் பார்த்தான்.

''யூ பாஸ்டார்ட்... ஸ்டிங்க்கிங் ஸன் ஆஃப் எ பிச்... நீங்கள்லாம் மனுசங்களா, மிருகங்களா...?''

''மிஸ்டர் அனுவசியமா கத்தாதே மேன்...!''

வீரைய்யன் மீசையைத் தடவிக் கொண்டே சிரித்தான்.

''லுக் ஹியர் சூரி... நா ஒனக்கு முன்னடியே பலத்தடவை சொல்லிட்டேன்... அதாவது இப்போ, இங்கே நாங்கதான் இன்சார்ஜுன்னு.. ஐ மீன் நான்... அதை இன்னும் நீ சரியா புரிஞ்சுக்கலேன்னு நெனக்கிறேன். பட் ஐ டோண்ட் கேர்... நீ புரிஞ்சிண்டாலும் ஒண்ணுதான், இல்லேன்னுலும் ஒண்ணுதான். மை டியர் டாக்டர் சூரி, யூ டோண்ட் கவுண்ட் எனி மோர்...நீ ஒரு சைஃபர்...!''

தியாகராஜன் இரண்டடி எடுத்து வைத்தான். அவனுடன் போலீஸ்காரர்களும் நகர்ந்தார்கள்.

''தியாகராஜன், என்ன உளர்றே நீ? அம்பிகாவை என்ன பண்ணினீங்க? சரியான பதில் கெடக்கலேன்னு, நான் மெட்ராஸுக்கு கம்ப்ளெயிண்ட் பண்ணப்போறேன்.'' தியாகராஜன், வீரைய்யன், போலீஸ்காரர்கள் எல்லோரும் சிரித்தார்கள்.

''சூரி, அம்பிகாவை என்ன பண்ணிேைம்னு நீ தெரிஞ்சிக்காமெ இருக்கறது நல்லதுன்னு நாங்க நெனக்கிறேம். ஐ மீன் நா நெனக்கிறேன்... ஒனக்கு [illegible] சந்தோஷப்படமாட்டே... பட், ஒன் சந்தோஷத்தை பத்தியோ [illegible] பத்தியோ நாங்க கவலேப்படப்போறதில்லே. ஐ மீன் நான்...''

''[illegible]க்கெல்லாம் பயித்தியம் பிடிச்சுப் போச்சுன்னு நெனக்கிறேன்....''

வீரைய்யன் [illegible] முறுக்கினுன்.

''ஷட் அப் மேன்... ஐயா பேசும் போது குறுக்கே வராதே..!''—மீண்டும் எல்லோரும் சிரித்தார்கள்.

''சூரி, அம்பிகாவையும் அந்த கடுகர் ஜாதி ஆண்கள் லிஸ்ட்ல சேத்துட்டோம்.''

வெறிபிடித்தவன்போல சூரி கைகளைத் தூக்கிக் கொண்டு தியாகராஜனைத் தாக்க நகர்ந்தான். அவன் உடல் நடுங்க ஆரம்பித்தது. திடீரென்று போலீஸ்காரர்கள் அவனைச் சுற்றி வளைத்துப் பிடித்துக் கொண்டார்கள். நகர முடியாதபடி அவன் கைகளை பின்னால் மடக்கி இழுத்து தடுத்தார்கள்.

''சூரி, இப்போ புரியுதா இங்க யார் இன்சார்ஜுன்னு... அனாவசியமா அலட்டிக்காதே. ஒன் அம்பிகாவுக்கு என்ன ஆச்சுன்னு கேட்டே.. நா சொல்ல ஆரம்பிச்சேன். நீ என்னை இன்டரப்ட் பண்ணே. நௌ லெட் மீ கன்டின்யூ தெ ஸ்டோரி. கயிலை பைரவனை நாங்க எப்படி உருத்தெரியாத படி பண்ணிட்டோம்னு ஒனக்குத் தெரிஞ்சதிலேருந்து நீ எங்கள மாட்டி வைக்கணும்னு திட்டம் போட்டிருக்கே. நீயும் அம்பிகாவும் இந்த விஷயத்தை ஸீரியஸா டிஸ்கஸ் பண்றதை ஆண்டி கேட்டிருக்கான்... அவன்தான் எங்க கிட்ட விஷயத்தை பூரா சொன்னான். ஐமீன் எங்கிட்ட... கயிலை பைரவன் விஷயம் வெளியே வரக்கூடாதுங்கறது தான் எங்களுக்கு முக்கியம். அதை தடுக்கறதுக்காக நாங்க என்ன வேணும்னாலும் செய்வோம். ஐ மீன் நானு.... அந்த ஒரு விஷயத்துல மட்டும் மத்தவங்களைப்பத்தி கவலைப்பட மாட்டோம். அதாவது இது எங்களுக்கு ஒரு உயிர் பிரச்சனை மாதிரி... அதனால மத்தவங்கப் பிரச்சனையப்பத்தி எங்களுக்கு கவலையில்லே. ஐமீன் எனக்கு...''

''தியாகு, யூர் ஆர் மேட்...''

சூரி உரக்கக் கத்தினான்.

ஒரு போலீஸ்காரன் தன் கைகளால் அவன் வாயைப் பொத்தினான்.

''ஸார், இந்த ஆளோட என்ன ஸார் பேச்சு... விஷயத்தை முடிச்சுட்டு பங்களாவுக்குத் திரும்பிப் போவோம்.. அம்மா வேற டவுன்லெ காத்திக்கிட்டிருப்பாங்க. போய் கூட்டியாரணும்.''

வீரைய்யன் தியாகராஜனுக்கு அருகில் சென்று பேசினான்.

''வீரு, கொஞ்ச நேரம் இரு... சூரி நம்ப ஃப்ரண்டு. பெரிய ஸைன்டிஸ்ட் வேற. அதனால எல்லா விஷயங்களையும் அவர் நிச்சயம் தெரிஞ்சுக்கணும்... சூரி, கயிலை பைரவனைப்பத்தி வெளி உலகத்துக்குத் தெரியக்கூடாது. அதுக்காக நாங்க போட்ட ஐடியாதான் இது. ஐ மீன் நானு... அதுக்கு குறுக்கே வந்தே நீ. நீன்னா, ஐ மீன் நீயும் அம்பிகாவும். இந்த விஷயத்துல ஒங்க ரெண்டு பேரையும் பிரிச்சுப் பேச முடியாது...''

''தியாகு, அம்பிகாவுக்கு நிமோஸின்னியா இன்ஜெக்ட் பண்ணியிருக்கே? அட பாவிங்களா...''

சூரி தலையை அப்படியும் இப்படியுமாக ஆட்டி வாயைப் பொத்தியிருந்த கையை அகற்றிவிட்டுப் பேசினான்.

''ஆமா சூரி... நீதானே அதை எங்களுக்கெல்லாம் கத்துக் குடுத்தே. உலகத்துக்கே...! கடுகர் ஜாதி ஆளுங்களுக்கு நீ அந்த எண்ணெய இன்ஜெக்ட் பண்ணும்போது ஒன்னை பாவியா நெனக்கிலே இல்லியா. ஒத்தன்போனா, இன்னொருத்தன்... பிடிச்சுக் குடுன்னு தானே என்னெ கேட்டே. இப்பவும் அதே மாதிரி தான். நீ பண்ண எக்ஸ்பரிமெண்ட நான் செஞ்சேன்... ஐமீன் நாங்க செஞ்சோம்.. ஒன்னோட எய்ம் வேற, எங்களோட எய்ம் வேற... அதுதான் வித்தியாசம். சூரி நீ வாய மூடிக்கிட்டு சும்மா இருந்தேன்னா இப்படியெல்லாம் நடந்திருக்காது. பட், நீ எங்கள காட்டிக் குடுக்கணும்னு நெனச்சே. அது நடக்காது. இதுக்கு மேலே நா எக்ஸ்ப்ளெயின் பண்ணப் போறதில்லே. வீரு, சூரியை அந்த படுக்கை அறைக்குத் தூக்கிக்கிட்டு போங்கடா...''

ஃ ஃ ஃ

''ஸார் இந்த ரிசர்ச் லேபுலே இருக்கிற எண்ணெயெல்லாம் தீந்து போச்சு. இனிமே இன்ஜெக்ஷன் தேவைப்பட்டா, அந்த ஆளு படுக்கேலேருந்து எழுந்து வந்தாதான்.''

வீரைய்யன் தன் முடியை விரல்களால் தடவிக்கொண்டே சிரித்தான்.

''போடா பூல், சூரி வரவும் மாட்டான். அந்த நிமோஸின்னும் தேவை இல்லே...''

தியாகராஜனின் கண்கள் படுக்கையில் சலனமின்றி கிடக்கும் அம்பிகா, சூரி உடல்களைப் பார்த்தன. கட்டிலுக்

கருகில் [illegible] இரு உடல்களையும் [illegible] மூடி விட்டு [illegible] நின்றான்.

''ஸார் [illegible], இவ்வளவு [illegible] இன்ஜெக்ஷனை [illegible] இவ்வளவு சீக்கிரமா [illegible] பூட்டாங்க[illegible]...''

''[illegible], [illegible] முட்டிலே மூளை [illegible]. [illegible] இன்ஜெக்ஷன் கொடுத்[illegible]றம் எவனுமே பொழைக்க மாட்டான். இந்த நிமோனியாலே புதுசா பாய்ஸன் இருக்கு. அதான் அந்த கடுகர் ஜாதி ஆனும் செத்தான் பேடபுள்லயே... ஆல்ரைட்; நீ வேனை எடுத்துக்கிட்டு டவுனுக்கு போ. நிர்மலா எங்கே போகணும்னு சொல்றாளோ அதெல்லாம் முடிச்சுக்கிட்டு பங்களாவுக்கு வந்து சேரு. லேட்டாகும்னு டவுன்லேயே சர்க்யூட் ஹௌஸ்ல தங்க வெச்சுட்டு காலேலே கூட்டிக்கிட்டு வா...''

''அப்படியே செய்யறேங்க?''

வீரைய்யன் மீசையைத் தடவ மறந்தான்!

''டேய் வீரு, நீ கௌம்பு. இங்கே ஒரே ஒரு வேல பாக்கி இருக்கு. அந்த நா செய்யறேன்...''

வீரைய்யன் வேனில் ஏறிச் சென்றுவிட்டான். தியாகராஜன் போர்வையால் மூடப்பட்டிருந்த இரு உடல்களையும் ஒரு முறை எட்டிப் பார்த்துவிட்டு ரிசர்ச் லேபிற்குச் சென்றான். அவன் பார்வை அங்கு ஒரு மூலையில் மேசையின் மேல் வைக்கப்பட்டிருந்த டைப்ரைட்டர் மேல் பாய்ந்தது. தன் பாக்கெட்டில் வைத்திருந்த க்ளவுஸை கைகளில் அணிந்துகொண்டு, டைப்ரைட்டரின் கவரை எடுத்துவிட்டு, நாற்காலியில் உட்கார்ந்தான். சற்று நேரம் யோசித்தான். அவனுக்கு டைப் அடிக்கத் தெரியாது. எழுத்துக்களைத் தேடிக் கொண்டே டைப் அடிக்க ஆரம்பித்தான். ஒவ்வொரு எழுத்தாக டாக்டர் சூரியின் தற்கொலைக் கடிதம் காகிதத்தின்மீது தோன்ற ஆரம்பித்தது.

''என் நிமோனியின் எக்ஸ்பரிமெண்ட் இப்படி முடியுமென்று நான் எதிர்பார்க்கவில்லை. இந்தத் தோல்விக்குப் பிறகு என்னால் உயிரோடு இருக்கமுடியாது. நானில்லாமல் அம்பிகாவும்...''

கடிதத்தைப் பாதியில் நிறுத்தினான். தன் சாமர்த்தியத்தைத் தானே மெச்சிக்கொண்டு சிரிக்க ஆரம்பித்தான்.. வெகு நேரம் சிரித்துக் கொண்டிருந்தான்...

**(முற்றும்)**

---

கமல் பாணியைப் பார்த்தாலே தெரியவில்லையா, அது 'சகலகலா வல்லவன்' என்று.



ஒருவர்: உங்க பத்திரிகை புள்ளி விவரங்களுடன் வெளி வரும் பத்திரிகைன்னு சொல்றீங்களே, அது என்ன பத்திரிகை?
மற்றவர்: கோலப் பத்திரிகை தானுங்க!

—மா. கோ. ராஜேந்திரன்.



''அதோ அந்த கட்டடத்திற்குள் போனால் ஏராளமான கதை கிடைக்கும்.''

''எப்படி?''

''அதுதான் மல்டி ஸ்டோரி பில்டிங் ஆச்சே!''

—எம். சோமசுந்தரம்.